பொன்னி

602

602/2-54

மலர் 8 15—5—'54 இதழ் 4



விலை

அணா

72
ஞ211, N54Po
N54.8.4
197820

உலக அரங்கில் ரூ. 1—0—0

தோழர் டி. கே. சீனிவாசனின் சிந்தனை அரங்கிலே நடம்பயி லும் சிறுகதைகள், உலக அரங்கிலே உயிர்பெற்று உலவுகின் றன. ஒப்பற்ற கருத்துக் களஞ்சியம், சிந்தனைச் செல்வம்.

★

கடல் முத்து ரூ. 1—0—0

இலக்கியக் கடலிலே மூழ்கி எடுத்துக் கோத்த உன்னத கதை முத்துக்களை நண்பர் ஆறுமுகம் மக்களுக்கு வழங்கி யுள்ளார். கடல் முத்தால் கிராமிய உலகம் ஒளிபெறுகிறது. உள்ளமும் உணர்வும் ஒருங்கே இசைவுறும் கதைக் காவியம்.

★

நினைவுச் சின்னம் ரூ. 1—0—0

தோழர் இளமைப் பித்தனின் மூன்றுவது சிறுகதைத் தொகுதி இது. கருத்தாழங் கொழிக்கும் கலைச்சின்னம்; தமிழகம் கண்ட தணியாத கலையார்வத்தின் நினைவுச் சின்னம்.

★

தபாலாபீஸ் விநோதங்கள் அணா 8

தபாலாபீஸ் சகல முனைகளும் குவியும் கூடம். அங்கு நடக்கும் திருக்கூத்துக்கள் ஒன்றல்ல, ஆயிரம். அதன் இனிய படப் பிடிப்புத்தான் நண்பர் க. சண்முகசுந்தரம் தீட்டியுள்ள கட்டுரைகள். இனிய சுவை செறிந்த ஓவியம்!

★

நான்கு புத்தகங்களையும் ஒரே தடவையில் தருவிப்போருக்கு
— அஞ்சற் செலவின்றி அனுப்பி வைக்கப்பெறும். —

★

பொன்னி லிமிடெட்

111, பவழக்காரத் தெரு, : : சென்னை—1.

எழுதும்

தொடர் சித்திரம்

?

எதிர்பாருங்கள்!

பொன்னி

பொருளடக்கம்

மலர் 8	மே 15, 1954.	இதழ் 4

திருவள்ளுவர் ஆண்டு 1985
வைகாசித் திங்கள் 2-ம் நாள்

அறிக நன்றே! 2
தலையங்கம் 3
மக்கள் மன்றம் 6
மோர்க்காரி 8
வளரும் இலக்கியம் 9
செய்தித் திரட்டு ... 0
பாவமும் புண்ணியமும் 11
அந்த நாள்! 17
ஒன்பதாவது அதிசயம் 25
மடமை ஒழிக 27
பொழுதுபோக்கு 28
மௌனச்சாமி 30
கள்ளத்தோணி 33
மிருகமும் மனிதனும் 41
வாழ்வும் சாவும் 43
காதல் பிழைத்தது 46
இலக்கியச் செல்வங்கள் 49
விநோத மண முறைகள் 55
நற்குடிப்பிறந்த நல்லோர் 61
நமது மருத்துவர். 63

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
24 MAY 1954
MADRAS

★

விலை 4 அணா

"பொன்னியில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள் நிகழ்ச்சிகள் யாவும் கற்பனையே.

அறிக நன்றே!

மணிமுகம்.

உணவறையில் ஓரறையை ஈந்துநம்மை
உருவாக்கி உயிர்புரக்கும் அன்னைமொழி
பிணம்போலக் கிடப்பதில்தான் பெருமையுண்டோ?
பேசாதிர் கட்சிவெறி! செயற்குவாரீர்

சிலையொத்த மொழிகள்சில ஆளக்கண்டோம்
சின்னவர்கள் தேசீயத்தால் மறைக்கப்பார்த்தால்
இலையங்கு பேச்சொன்றும்! வாளின்வீச்சே
இருப்பவரின் தருக்கடக்கும்; பொறுத்துப்பாரும்

தாய்ப்பாலைத் தடுத்திங்கு எருக்கம்பாலைத்
தருகின்ற இவர்க்கறம்தான் பார்ப்பதுண்டோ?
வாய்ப்பந்தல் தேவையிலை! குறளார்கண்ட
வகையாட்சி அமைத்திடுவீர்; தூங்கவேண்டாம்.

குறளுண்டு! மணியுண்டு! சிலம்புவுண்டு!
குண்டலமும் அகம்புறமும் கொள்ளையுண்டு!
இறந்தவர்மேல் திகழணிகள் கவர்ச்சியுண்டோ?
இறகில்லாப் பறவைக்குப் பறத்தலுண்டோ?

"எம்மொழியுள் எம்மொழியேச் செம்மைமொழி"
இதைப்புரிந்தும் மரங்களானோம்! வெட்கமில்லை.
அம்மைமொழி ஆளவேண்டும்; இல்லையெனில்
அகிலத்தில் தமிழரில்லை அறிகநன்றே.

நல்ல முடிவு!

1953-ம் ஆண்டு ஆச்சாரியார் புதிய கல்வித் திட்டமொன்றைக் கொண்டு வந்தார். தொடக்கப் பள்ளியில் பயிலும் மாணவர்கள் நாள்தோறும் மூன்று மணி நேரம் படித்தால் போதும், எஞ்சிய நேரத்தைப் பெற்றோர்களுக்குத் துணை செய்யும் வகையிலே கழிக்கட்டும் என்பது அத்திட்டம்.

அப்புதிய கல்வித் திட்டம் ஆகாதென்று அறிவித்தனர் அறிவுடையோர். செயல்முறைக்கு ஏற்றதல்லவென்று சிறுவர்களின் மனநிலையைச் சீர்தூக்கியறியும் சிந்தனையாளர்கள் கூறினர். நாட்டுமக்களைக் காட்டுமிராண்டிகளாக்குமேயன்றி நன்மக்களாக ஆக்காதென்று கல்வித் துறையிலே கடந்த பல ஆண்டுகளாகப் பணிபுரிந்து வருவோர் கழறினர். ஆசிரியர்கள் இப்புதிய கல்வித்திட்டம் அல்லலைத் தருவது, வீண் தொல்லையை விளைவிப்பது, பெற்றோர்களால் விரும்பப்படாதது, சிறுவர்களின் சிந்தையைக் கவராதது, அவர்களைக் குறும்புச் செயல் செய்யத் தூண்டுவது என்பதை வேண்டுகோளின் மூலமும் வேறு பலவகைகளிலும் அரசியலாருக்கு அறிவித்தனர்.

பலவேறுபட்ட கருத்துடைய மாற்றுக் கட்சிகள் பலவும் இக்கல்வித் திட்டம் ஏற்றதல்ல என்று கண்டனங்களின் மூலம் கண்ணியத்தோடு ஒருமுகமாக அறிவித்தன.

காங்கிரஸ் கட்சியிலேயிருந்த கண்ணியம் நிறைந்தவர்களிற் சிலரும் இத்திட்டம் கைவிடப்பட வேண்டியது தானென்பதைக் கனிவுடன் கூறினர்.

அத்தனையையும் பொருட்படுத்தாது ஆச்சாரியார் ஆணவம் நிறைந்த போக்கோடு, குடியரசின் உயிர்ப் பண்பை மறந்து, கோலோச்சுவார் கொள்ளவேண்டிய கொள்கையினின்று நீங்கி, 'வைத்தே தீருவேன்' என்று பிடிவாதம் செய்தார். இத்திட்டம் நம் நாட்டு மக்களில் பலருடைய வாழ்வை மட்டந்தட்டுவது என்று நேர்மையான முறையில் அறிவித்தவரையெல்லாம் சபையிலே சாடையாக நிந்தித்தார். திட்டத்தைக் கண்டிப்போரைக் 'கருத்தற்றவர், கல்வியறிவற்றவர்' என்று கூறிச் சிறுநகை புரிந்தார். பலரும் கல்வித் திட்டம் பயன்படாது என்று பலவகையாலும் எடுத்துக்காட்டித் தெளிவித்த பின்பும் தாம் கொண்டுவந்த திட்டத்தைக் கைவிட மறுத்தார். அதற்குக் காரணமென்ன? அறிவின்மையா? அல்ல. ஆணவமா? அதுவும் ஒரு காரணமாயிருக்கலாம். அதைக் காட்டிலும் வருணசிரமம் வாழவேண்டுமென்ற எண்ணமும், அதை எவ்வாறேனும் நிறைவேற்ற வேண்டுமென்ற விருப்பமுமே அவரை இந்த நிலைமைக்குள்ளாக்கியன என்று கூறலாம். இந்த நினைப்பே 'என் கல்லறையிலே காரியுமிழ்ந்தாலும் கவலையில்லை, திட்டத்தை நிறைவேற்றியே தீருவேன்' என்ற ஜனநாயகப் பண்பற்ற பேச்சைப் பேசவைத்தது ஆச்சாரியாரை.

'பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்' என்ற வள்ளுவன் வாக்கை யுணர்ந்த இந்நாளிலே, சாதிக்கொரு நீதி கூறும் சழக்கர் கூட்டம் ஒழிக்கப்பட வேண்டுமென்று கூறும் இந்நாளிலே, எல்லோர்க்கும் சமவுரிமையும், சமவாய்ப்பும் அளிக்கப்பட வேண்டுமென்று கூறும் இந்நாளிலே — உலகியலுணர்ந்தவர் என்று பேசப்படும் ஆச்சாரியார் அப்பன் தொழிலை மகன் செய்ய வேண்டுமென்ற முறையிலே அமைந்த கல்வித் திட்டத்தைக் கொண்டுவர நினைத்தது எவ்வளவு கொடிய செயலென்பதை எண்ணிப்பாருங்கள். பல நூற்றாண்டுகளாகப் படு

குழியிலே கிடந்து பல்வேறு இன்னல்களுக்காளாகி இன்று ஓரளவு வாழ்க்கைத் துறையில் முன்னேற்றமடைந்துள்ள பெரியதொரு சமுதாயத்தை மீண்டும் படுபாதாளத்தில் ஆழ்த்தும் திட்டம் ஆச்சாரியார் கொண்டுவந்த கல்வித் திட்டம் என்பதை அறிவியக்கத்தார் நாட்டு மக்களுக்கு அறிவித்தனர்.

மக்கள் கொதித்தெழுந்தனர். மாநாடுகள் கூட்டித் தீர்மானங்களை நிறைவேற்றி அனுப்பிவைத்தனர். ஆச்சாரியார் அவற்றை மதிக்காவிட்டாலும் ஆணவம் ஒரு சிறிது அடங்கியவர்போல் பேசத் தலைப்பட்டார். சொந்தக் கட்சியைச் சேர்ந்தவர் ஆச்சாரியாரின் போக்குச் சரியானதல்ல என்று அறிக்கை மூலம் அறிவிக்க வேண்டிய அளவுக்கு நிலைமையை மோசமாக்கினர் ஆச்சாரியார். இறுதியில் அந்த நிலை அவருக்கு அரசியல் துறவையுண்டாக்கியது.

ஆச்சாரியார் ஆட்சி ஒழிந்தது. காமராசர் ஆட்சி வந்தது. ''**கல்வி நீரோடையில் கருத்தோடு ஆடும் நல்லிளஞ் சிறுஅர்களை நாசமாக்க எண்ணி, புதிய முறைக் கல்வித் திட்டம் என்ற முதலையைப் புகுத்தினர் முன்னாள் முதலமைச்சர் ஆச்சாரியார். நீருள் அமிழ்ந்து நின்று பாறையெனத் தோன்றி நீருள் மூழ்கி ஆடப்புகின் பிடித்திழுத்துச் சென்று கொல்லும் முதலையைப் போன்றதுதான்—கல்வியாகிய ஓடையில் நன்மை பயப்பதுபோல் தோன்றிச் சிறுஅரை நாசமாக்கும் புதிய முறைக் கல்வித்திட்டம். இத்திட்டத்தை ஒழித்துக் கட்டுவாரா ?**'' என எண்ணினேம். எண்ணிய எண்ணம் ஈடேறும் வகையில் எழுவர் குழுவும் திட்டத்தின் தீமையை எடுத்துக் காட்டித் தேவையற்றது என்பதைத் தெளிவாகக் கூறிவிட்டது. அமைச்சர் ஒருவர் இடையிலே சிறிது மழுப்பிப் பேசினலும், இறுதியில் சட்டசபைக் காங்கிரசுக் கட்சி அத்திட்டத்தை விட்டுவிடுவதென்றும், பழைய முறைப்படியே அடுத்த ஆண்டுத் தொடக்க முதல் கல்வி முறையிருக்கு மென்றும் அறிவித்து விட்டது.

நல்ல முடிவைச் செய்த நாடாள்வோரையும், அம்முடிவை ஏற்படுத்துதற்கு அரும்பாடுபட்ட அறிவியக்கத்தாரையும் பாராட்டுகிறேம். ஒழிக ஆணவப்போக்கு! வாழ்க ஜனநாயகம்!

மக்கள் மன்றம்

நீடாமங்கலம்
4—4—54

பைந்தமிழ்ப் பாதை நடந்து பூத்துக் குலுங்கிடும் செந்தமிழ்ச் சோலையைக் கண்ணுற்றேன். தும்பியெனப் பறந்து திரிந்து தேன் தமிழ்ச் சுவை திகட்டிட உண்டேன். வாழ்க பொன்னி!

எம். எஸ். பி. செல்வன்

* * *

சிதம்பரம்
17—4—54

பொன்னி—இலக்கியம் பெற்றெடுத்த ஒரே மகள். அவள் இன்று இலட்சியத்திற்கு வாழ்க்கைப்பட்டிருக்கிருள்.

'ஒளி'
'தம்பி' துணையாசிரியர்

* * *

உசிலம்பட்டி
1—5—54

தீந்தமிழ் நடையிலே, தித்திக்கும் பல கருத்துக்களை வழங்கிய "பொன்னி" மீண்டும் திராவிடத்திலே பவனிவரப் புறப்பட்டுவிட்டாள் என்ற சேதி 'தேன் வந்து பாயுது காதினிலே' என்பதற்கொப்ப இருக்கிறது

அட்சயன்

* * *

கோவை
5—5—54

தமிழர் யாவரும் விரும்பிப் படிக்கவும், குறிப்பாகத் திராவிடத் தாய்மார்கள், குழந்தைகள் யாவரும் போற்றிப் படிக்குமாறும் அமைந்துள்ளமை குறித்து மகிழ்கிறேன்.

A. தேவயானி

திருச்சிராப்பள்ளி
6—5—54

பொன்னியின் வருகைகண்டு
புத்தொளி பெற்றுயர்ந்த
கன்னியர் பலரும்இங்குக்
கருத்திலே தெளிவுபெற்றூர்
'என்னினிக் குறையெமக்கு!
எங்குமே தமிழகத்தில்
துன்னிய பழைமைதன்னைத்
துடைத்திட்டோம்'
வாழ்க பொன்னி!

இளசை சாமிநாதன்

* * *

சென்னை-7
5—5—54

பொன்னி' தமிழ் இலக்கியப் பத்திரிகையின் சிகரம். 'அந்த நாள்' தொடர் சித்திரம் கருத்தைக் கவர்கிறது. 'சாமியே சரணம்' பிரமாதம்.

தி. ராசன்

* * *

அர்ச்சுணபுரம்
5—5—54

இல்வாழ்க்கை இன்பம் பெற ஒரு வாழ்க்கைத் துணைவி; கப்பலைக் கரை சேர்க்க ஒரு மாலுமி; திராவிடத்தின் திரு மண்ணை வளமடையச் செய்ய ஒரு பொன்னி (காவிரி) அவசியம் தேவை.

'அந்த நாள்' சாத்திரத்திற்குச் சாவுமணி அடிக்கும் ஒரு சஞ்சீவி. பொன்னி ஓர் புரட்சிப் பூஞ்சோலை.

டாக்டர் கு. கோ. ராசன்

தூத்துக்குடி,
11-5-54.

பொன்னி இதழ்கண்டேன்;
பூக்கும் உவகையிலே
என்னித யம்துள்ளி எக்களிப்
பேறிற்று!

சொல்லத் தேவையில்லை;
சொட்டும் தமிழ்விருந்தே!

வெல்லம்போல் தீஞ்சுவை
வெள்ளத்தைக் கண், கருத்தில்

பொங்கத் தமிழகத்தில்
பொன்னி பெருக்கிற்றும்!

எங்கும் அது வாழ்க இனிது!

—*தமிழழகன்.*

* * *

நாவலப்பிட்டியா, இலங்கை
6—5—54

இளைஞருலகை எல்லையில்லா இன்பத்திலாழ்த்த, பாலொடு தேனும் பண்புடன கலந்த பகுத்தறிவமிழ்தைப் பாரெங்கும் பரப்ப 'இதோ வந்துவிட்டேன்' என்று எழில்முகங்காட்டி, இன்பநடனம் புரிந்து மீண்டும் வந்துவிட்டாள் பொன்னி'' யெனும் பொலிவுடைக் கன்னி!

இரா. செல்வதுரை

* * *

சிங்கப்பூர்
3—5—54

'பொன்னி' தமிழ் மக்களுக்குத் திகட்டாத தீஞ்சுவை பொன்னி நல்லாள் பெருமையுடன் மீண்டும் பவனி வருவதைக் கண்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

கா. கு. காளமேகம்

* * *

சுல்தான்பேட்டை
4—5—54

'பொன்னி'யைக் கண்டேன், புதுமை பல உண்டேன். அகத்தையும், புறத்தையும் அழகுற

மாமியார்: இந்த கஷ்ட காலத்திலே இந்த மாதிரி செலவு பண்ணி இப்படி வாங்கி அடுக்கலாமா?

மருமகள்: சரிதான் மாமி, இதை வாங்குவதற்காகப் பணத்துக்கும், இதை எல்லாம் ஸெலக்ட் பண்ணுவதற்கும் எவ்வளவு சிரமம் தெரியுமா?

விளக்கும் தமிழ்க் கன்னியவளின் அற்புதக் கவிச் சுவையையும், தேனூறும் தேன்தமிழ்ச் சுவையையும் உண்டேன்; உளமகிழ்ந்தேன்.

'' வெண்ணிலா ''

* * *

சிங்கப்பூர்-8.
11-5-54.

'பொன்னி' புல்லர்களின் தடைகளைத் தகர்த்தெறிந்து பூரண பொலிவுடன் பவனி வருவதைப் பார்க்கும்போது பூரிக்கிறது சிந்தை, முழு மதியைக் கண்டு பொங்கும் மாகடலைப் போல. பொன்னி இன்றுபோல என்றும் நன்றுவாழ வாழ்த்துகிறேன்.

இ. மா. இராமச்சந்திரன்.

அட்டைப்பட விளக்கம்:

மோர்க்காரி

தமிழ் மொழிக்கே தனிச்சிறப்பாயமைந்த பகுதிகளில் பொருளிலக்கணம் ஒன்று. வாழ்வின் பயனை வகைபடக் கூறும் பகுதி அது. அதனை அகமென்றும் புறமென்றும் இருவகையாகப் பிரிப்பர். இருவகையொழுக்கமும் இயலுமிடங்களை முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் என ஐவகையாக அமைத்துக் கூறுவர்.

முல்லை நிலமென்பது காடும், காடு சார்ந்த பகுதியுமாகும். அங்கு அடிக்கடி மழை பொழியும். அதனால் அந்நிலப் பகுதியைக் 'கார்நிலை வியன் புலம்' என்று கவிஞர்கள் கூறுவர். அறுகம் புற்கள் அடர்ந்து செழுமையோடு விளங்கும் காட்சி அங்கு செல்வார்க்கு அகமகிழ்வூட்டும். மல்லிகையும் முல்லையும் மணத்தை வீசும். இளங்கன்றுகள் துள்ளி விளையாடும். ஆயர்கள் ஆக்களையும் எருதுகளையும் அந்நிலத்தில் மேய்ப்பர். கொல்லையிலே மேயும் மாட்டுமந்தையை முல்லையந் தீங்குழலூதித் தொல்லையின்றி ஒல்லையில் மாலையில் ஒன்றுசேர்ப்பர். இத்தொழிலை முல்லை நிலத்திலே வாழும் கள்ளமில்லாத இடையர் குல ஆடவர் செய்து வந்தனர்.

ஆயர் மகளிரோ அழகு நிறைந்தவராய் விளங்கினர். பசுக்களைப் பேணி வளர்த்து, அவற்றின் துணையால் பாலும் நெய்யும் பெற்று, மக்களிடம் விற்றுப் பழியில்லாத நிலையில் வாழ்ந்தனர் என்பதைப் பண்டைத் தமிழிலக்கியத்தில் பரக்கக் காணலாம்.

அத்தகைய ஆயர் குலத்திலே தோன்றிய கட்டழகு வாய்ந்த கன்னி ஒருத்தி. கண் கவரும் வனப்பு. காந்தள் மெல்விரல். கவின்மிகு திருமுகம்; கருத்தையீர்க்கும் கண்கள். ஆடவர் கண்டால் அகலமாட்டார்கள். அத்தனைப் பேரழகு. எழில்மிகு நங்கையாயிருந்தாலும் தன் குடும்ப இயல்பை யொட்டி வீதி வழியே சென்று வெண்ணெயும் மோரும் விற்கலானாள். மோரோ........ மோர்...என்று குயிலினுமினிய குரலில் கூவிக்கொண்டே அன்ன மனையாள் அசைந்து நடந்தாள். தலையில் தாங்கியிருந்த பாரத்தால் இடை நடுங்கியது. குரலொலி கேட்ட மங்கையர் சிலர் மோரை வாங்கும் நோக்கத்தோடோ அல்லது விற்பாரைக் காணும் நோக்கத்தோடோ வெளியில் வந்து நின்றனர். வாளனைய கண்களும், வாட்டமிலா மேனியும், கண்டாரை வயப்படுத்தும் கட்டழகும் அமைந்த கன்னியைக் கண்டனர். தன் பின்னே வந்த தன் கணவனை வெளியில் வராதபடி தடுத்து நிறுத்தினர், மோர் வீட்டிற்குத் தேவையிருந்தும், மோர் வாங்கக் கூப்பிட்டால் அவள் காசோடு தன் கணவனின் உள்ளத்தையும் வாங்கிவிடுவாள் என்றஞ்சிய பெண்கள் வேண்டாமென்று கூறி அனுப்பி விட்டனராம். ஏனெனில் "பேரூரும் சிற்றூரும் கௌவை எடுப்பவள் போல் மோரோடு வந்தாள்" என்று அப்பெண்கள் கருதியதே அதற்குக் காரணமாகும். இக்காட்சி கலித்தொகையில் உள்ளது. (பாடல் 109)

வளரும் இலக்கியம்

தனி அரசு

தி. மு. க. பிரச்சார ஏடுகளில் ஒன்றான தனி அரசு வழக்கமான பகுதிகளைத் தாங்கியபடி திங்கள் மும்முறையாக வெளிவருகிறது. ஆசைத்தம்பியின் 'காதல் மாளிகை' என்ற தொடர் கதையுடன், கலைச்செய்தி, ஆராய்ச்சிக் கட்டுரைகளும் இடம்பெற்றுச் சிந்தனைக்குச் செந்தேன் பாய்ச்சுகின்றது. தனி அரசு: மாதம் மும்முறை, விருதுநகர். ஆண்டு சந்தா ரூ. 4–8–0

நம்முழக்கம்

தபால் தந்தி ஊழியர்களின் குறைபாடுகளை – கோரிக்கைகளை வெளியிடும் 'நம்முழக்கம்' மே இதழ் வரப்பெற்றோம், அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் அ. சிதம்பநாதனர், முகவை ராஜமாணிக்கம், மருதகாசி முதலியவர்களின் கட்டுரை, கவிதைகள் இடம்பெற்றுள்ளன. அறிஞர் அண்ணா அவர்களின் 'ஒய்வு நேரம்' என்னும் வானொலிப் பேச்சு இதழைச் சிறப்பிக்கிறது. தபால் தந்தி ஊழியர்களின் கட்டுரை கதைகளில் 'சீர்த் தொண்டன்' தீட்டியுள்ள 'லைன் மென் லோகநாதன்' வாழ்க்கைச் சித்திரம், தபால் தந்தி அலுவலகத்தின் நிலையை விளக்கும் நகைச்சுவைத் துணுக்குகள் கேலிச் சித்திரங்கள் உள்ளத்தைக் கவர்வன. நம்முழக்கம்: திங்கள் வெளியீடு ஆண்டு சந்தா ரூ 1. ஆசிரியர், ஏ. எஸ். இராஜன் எம்.ஏ. வெளியிடுவோர்: தபால் தந்தி ஊழியர்கள் சங்கம் சென்னை மாகாணக்கிளை சென்னை–12.

ரஷ்யன் கண்ட திராவிடம்

'திராவிடநாடு' பிரிவினையை வலியுறுத்தும் இயக்கப் புத்தகங்களில் இதுவும் ஒன்று. அரும்பு எழுத்தாளரான கலைமதி, உரையாடல் மூலமாக ரஷ்யனுக்கு இலட்சியத்தை விளக்குவதாக இச்சிறிய நூல் அமைந்திருக்கிறது. சிறப்புரை நல்கிய கலைஞர் மு. கருணாநிதி கூறுவதுபோல எதிர்காலத்திற்கு இந்தச் சிறிய ஆனால் சிறந்த நூல் ஒருவகையில் பயன்படுமென நாமும் நம்புகிறோம்.

ஆசிரியர்: கலைமதி, விலை 6 அணா. புரட்சிப்பண்ணை, மதுரை.

விற்பனையாளர்களுக்கு:

கூடுதலாக இதழ்கள் வேண்டுவோர் அதற்குரிய முன் பணத்தொகையையும் தவருது முன் கூட்டியே அனுப்பி வைக்கவேண்டும்.

—பொறுப்பாளர்.

செய்தித் திரட்டு

திராவிடநாடு கிடைக்குமா?

சட்ட சபைக்குள் நுழைந்தால், திராவிடநாட்டைப் பெற முடியுமா? என்று பலர்கேட்கிறார்கள். வரிகள் எல்லாம் இங்கேயே செலுத்தப்படவேண்டும், மத்திய சர்க்காருக்குப் போகக்கூடாது என்று ஒரு சட்டம் நிறைவேற்றியதும், மத்திய அரசாங்கத்திலிருந்து ஒரு தாக்கீது வரும். நீ எப்படி இந்தச் சட்டத்தைக் கொண்டு வரலாம் என்று கேட்கும். மக்கள் கொடுக்கிற வரிகள் இந்த நாட்டிலேயே தங்கவேண்டுமென்று விரும்புகிறார்கள், ஆகையால் அப்படி ஒரு சட்டம் செய்தோம் என நாம் விளக்கம் தருவோம். கவர்னருக்கு ஒரு தந்தி வரும் 'கவர்னரே இந்த மந்திரிசபையைக் கலைத்துவிட்டு வேறு சபை அமை' என்று.

மீண்டும் நாம் தேர்தலில் நிற்போம்! வெற்றி பெறுவோம்! மந்திரிசபையை எத்தனை முறைதான் கலைக்கமுடியும். வேண்டுமானால் சட்ட சபையைக் கலைத்துவிட்டு கவர்னர் ஆட்சி நடத்தலாம். அப்போது திராவிடத்திலே வரி கொடா இயக்கம் நடத்துவோம். "ஆளுவது கவர்னர்! அவருக்கு நாங்கள் வரி கொடுக்க மாட்டோம்" என்று மக்கள் கூறுவார்கள். எதற்கும் வளைந்து கொடுக்காத சர்க்கார் வரிகொடா இயக்கத்திற்கு வளைந்து கொடுத்தே தீரவேண்டும். நிச்சயம் நாம் திராவிட நாட்டை அடைந்தே தீருவோம்.

—சேலம் தி.மு.க. மாநாட்டில் அறிஞர் அண்ணாவின் விளக்கம்.

அண்ணாவின் சொர்க்கவாசல்!

ஏ. காசிலிங்கம் டைரக்ஷனில் கடந்த மூன்றாண்டுகளாக கோவை சென்ட்ரல் ஸ்டுடியோ, சென்னை நெப்ட்யூன், ரேவதி ஆகிய ஸ்டுடியோக்களில் தயாரிக்கப்பட்டு வந்த, அறிஞர் அண்ணாவின் அருமையான கதையும் அழகான வசன அமைப்பும் கொண்ட சொர்க்கவாசல் இம் மாதம் 28-ந் தேதி முதல் நாடெங்கும் திரையிடப்பட விருக்கிறது என அறிகிறோம். இது ஒரு பரிமளம் பிக்சர்ஸ் தயாரிப்பு. நடிப்புப் புலவர் கே. ஆர். இராமசாமி, எஸ். எஸ். இராஜேந்திரன், பத்மினி, அஞ்சலிதேவி ஆகியோர் நடிக்கின்றனர் என்பது அனைவரும் அறிந்த ஒன்றே.

திருக்குறள் மத நூல் அல்ல!

திருக்குறள் படிப்பது நல்லதுதான் என்கிற நினைப்புடனே தமிழ்ப் பாடப் புத்தகத்தில் ஒரு பகுதியாகத் திருக்குறளைச் சேர்த்திருக்கிறோம்.

பள்ளிக்கூடங்களில் ஆறாவது வகுப்பு முதல் பதினோராவது வகுப்பு (எஸ். எஸ். எல். ஸி.) வரை திருக்குறளின் சில பகுதிகளைத் தமிழ்ப் பாடத்தில் கட்டாயம் சேர்க்க வேண்டும்.

சட்டசபை உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்ளும் போதும், நீதி மன்றங்களில் சாட்சியம் அளிக்கும் போதும், கீதை வைத்து சத்தியம் செய்வதுபோல திருக்குறளையும் வைத்து சத்தியம் செய்யச் சொல்லும் எண்ணம் சர்க்காருக்கு இல்லை. திருக்குறள் மத சம்பந்தப்பட்ட புத்தகம் என்று நான் நினைக்கவில்லை. குறள் மத புத்தகமுமல்ல.

—அமைச்சர் பக்தவத்சலம்.

பாவமும் புண்ணியமும்

தில்லை. மறைமுதல்வன்

வசந்தத் தென்றலில் வளைந்து நெளிந்தாடும் புது ரோஜா போன்ற அந்த அழகி ஜன்னலோரத்தில் அமர்ந்து வீதியை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

மின் ஒளியின் மினுக்குடன் பாயும் அவள் பார்வையில் அப்போது ஒரு ஏக்கம். கனியின் இனிப்பை ஏந்தியிருக்கும் கன்னங்களில் மினுமினுப்பு இல்லை. தேன் துளிகளைச் சிந்தும் அவளது பவள உதடுகள் சோகத்தால் கூம்பிய மலரைப்போல வாடியிருந்தன. செக்கச் சிவந்த தாமரையென மின்னும் அவளது பொன்னொளி வதனத்தில் பொலிவு குறைந்திருந்தது. வானத்துத் தாரகைகளின் வெள்ளிச் சிரிப்பு போன்ற புன்னகை இல்லாத அவள் முகம் நிலவில்லாத நீலவானம் போலக் காட்சியளித்தது.

நீண்டதோர் பெருமூச்சை நெட்டுயிர்த்து விட்டாள் அந்த அழகி. அந்தப் பெருமூச்சு அவள் உள்ளத்தில் குவிந்துகிடந்த ஏக்கத்தையெல்லாம் வெளியில் கொண்டு வந்து போட்டது. அவள் மார்புக்கூடு உயர்ந்து தாழ்ந்தது,

வீதியில் தென்பட்ட குதூகலம் நிறைந்த காட்சிகள் அவள் வேதனையை வளர்த்தன. இன்பம் தவழக் குழைந்து செல்லும் தம்பதிகளைப் பார்த்தால் அவளுக்கு எரிச்சலாக வந்தது. காதலர்களின் கைகளைப் பிடித்துக் கொண்டு தவழ்ந்து செல்லும் காதலியரின் சிவப்பிதழ்களைத் திறந்துகொண்டு உருண்டுவரும் சிரிப்பொலிகள் அவளுக்கு கர்ணகடூரமாகக் கேட்டன.

அவள் கண்களில் சோகத்தின் சுழிப்பு! ஏககத்தின் ரேகைகள்!

ஏன்?........

* * *

"பிரானிசா நகரின் அழகுத் தேவதை" அவள். எல்லோரும் அவளை அப்படித்தான் அழைத்தனர். அந்த நகரிலேயே அவள்தான் சிறந்த அழகி! எழிலின் எல்லை! வனப்பின் விளிம்பு! அவள் நடையே நடனமாயிருந்தது, அழகின் அமுத ஊற்றாக.... வாலிபத்தின் வைரச் சிரிப்பாக... இன்பத்தின் இருப்பிடமாக........ விளங்கினாள் அவள்.

ஆனால்........அவள் வாழ்விலே 'பசுமை' இல்லை! தேன் சிந்த வேண்டிய வாழ்வு அவளுக்குத் தேள் கடியைப்போல இருந்தது.

அவளுடைய கணவன் ஒரு யூதப் பாதிரி. அந்தப் பாதிரியின் பெருமை அவருடைய கடவுள் பக்தியில் இல்லை! அவருடைய சிறந்த ஒழுக்கப் பண்பில் இல்லை! அவருடைய தெளிந்த அறிவு மிளிர்ச்சியில் இல்லை. ஒரு அழகான இளம் பெண்ணுக்குக் கணவனாக இருக்கிறோம் என்பதிலே இருந்தது பாதிரியின் பெருமை.

தங்க சிம்மாசனத்தில் கொலு வீற்றிருக்கும் ராணியாக இருக்க

வேண்டியவள் அவள். அடிமைகள் கைகட்டி வாய்பொத்தி நிற்க அதிகாரம் செய்யும் சீமாட்டியாக இருக்கவேண்டியவள். சித்திரக்காரனுக்குச் சிங்கார ஓவியமாக...சிற்பிக்குச் சிலையாக இருக்கவேண்டியவள். ஆனல் அவளோ பாதிரிக்கு மனைவியாக இருந்தாள். 'காலம்' அவளுடன் கொடுமையாக விளையாடிவிட்டது.

காலையிலிருந்து மாலைவரை தன் நேரத்தை எல்லாம் புத்தகங்கள் படிப்பதிலும் சிந்தனை செய்வதிலும் செலவிட்டுக்கொண்டிருந்தார் பாதிரி. அவளோ எந்த நேரமும் ஜன்னலோரத்திலமர்ந்து வீதியைப் பார்த்துப் பெருமூச்சுக்களை பெருக்கிக்கொண்டிருந்தாள்.

பாதிரி தன் மனைவியைக் கவனிப்பதில்லை. அவளைத் 'திருப்தி' படுத்த அவரால் இயலவும் இல்லை—முடியவுமில்லை! அவளுக்கோ மனவேதனை — தாபச் சுழல்!

அவளுடைய நீலநிற நீண்ட நயனங்களில் ஆசைக் கனவுகள் வரிக் கோலமிட்டன. ஆனல் பாதிரியின் மழுங்கிய கண்களுக்கு அதைப் புரிந்துகொள்ளும் சக்தி கிடையாது.

அவளது செவ்விதழ்கள் முத்தச் சுவையில் நனைந்து குளிரத் துடித்தன. ஆனல் பாதிரியின் உதடுகளோ வேத வாக்கியங்களை உச்சரித்துக் கொண்டிருந்தன.

அவளது இதய வீணை காதல் நாதமெழுப்பத் தயாராக இருந்தது—ஆனல் பாதிரிக்குத்தான் அதை மீட்டி இன்பகீதம் எழச் செய்யும் எண்ணம் இல்லை.

தெவிட்டாத விருந்தாக இருந்தாள் அவள். ஆனல் அதை எடுத்து உண்ணும் எண்ணங்கள் அவரிடம் கிடையாது!

ஆம்....பாதிரிக்கு 'அந்த' உலகைப் பற்றிய நினைவுகள். ஆனல் அவளுக்கோ 'இந்த' உலகைப் பற்றிய எண்ணங்கள்! இரு துருவம் போன்ற குணங்கள்—கனவுகள்! இதழ் விரித்த மொட்டு வண்டின் கதகதப்பை எதிர்பார்க்கிறது. ஆனல் வாடிய மலரோ செடியிலிருந்து உதிர 'வேளை' பார்க்கிறது.

காட்டில் காய்ந்த நிலாவானது அவள் அழகும் இளமையும். கவனிப்பாரற்ற மலர்த் தோட்டம் போலானள். அவள் நெஞ்சிலே நெருப்பு — கண்பார்வையில் ஏக்கம்—பெருமூச்சிலே சோகம்!

என்ன செய்திட முடியும்? இன்பத்துக்காக ஏங்கிய இதயம் நொந்ததுதான் பலன். இன்ப வெள்ளத்தில் புனலாட நினைத்தாள். ஆனல் வறண்ட பாலையே அவளுக்குக் கிடைத்தது, கொஞ்சிக் குலவத் துடிக்கும் 'பருவக் கிளி' அவள். பாதிரியோ கர்த்தரின் அருள் வேண்டும் 'கிழட்டுப் பூனை'! வாழ்விலே வசந்தம் வழியுமா என்ன?

அவளுக்குக் குழந்தை இல்லை. பணம் இருந்தது. சொன்னதைச் செய்ய ஆட்கள் நிறைய இருந்தார்கள். ஆனல் காதல் புரியும் நெஞ்சம் இல்லை.

அவளைப் பார்க்க எவரும் வருவதில்லை. அவளும் வீட்டை விட்டு வெளியில் செல்வதில்லை. வேதனையால் கொந்தளிக்கும் நெஞ்சத்தோடு ஜன்னலோரத்தில் அமர்ந்தபடி மோகனக் கனவுகளில் மூழ்கியிருப்பாள்.

பறித்தும் முகராத முல்லை அவள்.

அன்று மின்னலும் இடியுமாக இருந்தது. காற்று வேகமாக வீசியது. பேய்க்காற்று பயங்கர மாக ஊளையிட்டது. வானில் கரு மேகங்கள் திரண்டிருந்தன.

பாதிரியின் மனைவி...பிரானிசா நகரின் அழகுத் தேவதை.........அப்போது வழக்கம்போல ஜன்னலோ ரத்தில் அமர்ந்திருந்தாள். அவள் நெஞ்சத்திலும் எண்ணக் காற்று பலமாகச் சுழன்று கொண்டிருந்தது. இருள் சிறகு விரித்திருந்த அவள் உள்ளத்தில் பலமான போர்!..........

திடீரென்று, வெளியே பார்த்துக்கொண்டிருந்த அந்த அழகி, திரும்பிச் சிறிதுதூரத்தில் புத்தகத்தில் புதைந்து கிடந்த பாதிரியைப் பார்த்தாள். அவர் தலைமயிர் வெளுத்திருந்தது. தாடி வளர்ந்திருந்தது. முகத்தில் சுருக்கங்கள், காலத்தின் கீறல்களாக விளங்கின. ஒல்லியான உருவங் கொண்ட அவர் நடுங்கும் கரத்தால் பக்கங்களைப் புரட்டிக்கொண்டிருந்தார்.

அழகியின் உதடுகள் விரிந்தன......மொட்டு தன் முனைப் பிடிப்புகளை விலக்குவதுபோல...

"இதைக் கூறிவிட்டுப் பிறகு படியுங்கள். மீண்டும் எப்போது கிறிஸ்து பிறப்பார்?......."

பாதிரி தலையை உயர்த்தினார். மனைவியின் கேள்வி அவருக்கு விசித்திரமாகத் தோன்றியது. சுடர் விழிகள் வியப்பை அள்ளிக் கொட்டின. பிறகு பைபிளிலுள்ள வாசகம் ஒன்றைப் பதிலாகக் கூறினார். அது......

"எப்போது யூதர்கள் அனைவரும் புண்ணியர்களாகவோ, அல்லது அனைவரும் பாபிகளாகவோ மாறுகிறார்களோ அப்போது கிறிஸ்து பிறப்பார்........"

"எல்லா யூதர்களும் புண்ணியர்களாக மாறமுடியுமா?—அழகி கேட்டாள் துடிப்போடு.

பாதிரியின் திகைப்பு திசை தப்பியது. அவர் சொன்னார்—"என்னால் நிச்சயமாகக் கூறமுடியாது!"

"அப்படியானால் எல்லோரும் பாபிகளானால் கிறிஸ்து பிறப்பார். ஆமாம். எல்லோரும் புண்ணியர்களாவது கடினம்! பாபிகளாவது எளிது!"—

பாதிரி தனது தோள்களைக் குலுக்கினார். பின் அவரது விழிகள் புத்தகத்தில் சொருகிக் கொண்டன.

அழகி வீதியில் தனது பார்வையைச் செலுத்தினாள். வானத்திலிருந்து மழைத் துளிகள் விழுந்தன! மகிழ்ச்சியின் ஒளி அவள் முகத்தில் விழுந்தது!

* * *

அன்று யூதப் பாதிரிக்கு அவசரமான ஒரு வேலை. வெளியூர் செல்லவேண்டியிருந்தது. மறுநாள் காலை வந்துவிடுவதாகத் தனது மனைவியிடம் கூறிவிட்டுச் சென்றார்.

ஆனால் அவர் சென்ற வேலை எதிர்பாராத விதமாக உடனே முடிந்துவிட்டது, எனவே மறுநாள் காலை வருவதாகச் சொல்லிச் சென்ற பாதிரி அன்று மாலையே திரும்பி வந்துவிட்டார்.

வீட்டுக்கு வரும்போது அவர் மிகவும் களைத்துக் காணப்பட்டார். அவர் முகம் சோர்ந்து காணப்பட்டது. தனது மனைவி வழக்கமாக அமர்ந்திருக்கும் ஜன்னலைப் பார்த்தார். அவருக்கு ஆச்சரியமாக இருந்தது. அவர் மனைவி ஜன்ன

லருகில் இல்லை! ஜன்னலின் கதவு கள் மூடிக்கிடந்தன!!

வீட்டின் வாயிலருகே ஒரு அதி காரியின் வேலையாள் அமர்ந்து புகை பிடித்துக் கொண்டிருப்ப தைப் பார்த்தார் பாதிரி. அவர் வியப்பு அணையுடைத்தோடியது.

"இங்கே நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" — அந்த வேலையாளைப் பார்த்துப் பாதிரி கேட்டார்; வீட்டுக்கு உரியவரைப் போலல்ல; யாரோ வழிப்போக் கனைப்போல!

அந்த வேலையாள் பாதிரியை ஏற இறங்கப் பார்த்தான். அவரை அவனுக்குத் தெரியாது.

"அழகியின் கணவரான பாதிரி எதிர்பாராத விதமாகத் திரும்பி விடாமலிருப்பதற்காக நான் இங்கு காவலாக இருக்கிறேன்."

(வேலை தேடி வந்தவரைப்பார்த்து)

முதலாளி :—ஏனய்யா! நீர் என்ன கம்யூனிஸ்டா? சோஷ லிஸ்டா?

வந்தவர் :—இல்லிங்க......நான் டைப்பிஸ்டுங்க......

வேலையாளின் பதில் பாதிரி யைத் தூக்கிவாரிப் போட்டது. அடுத்தகணம் சமாளித்துக் கொண்டார்.

"அப்படியா, கவனமாகப் பார்த்துக்கொண்டிரு" என்று கூறிவிட்டுச் சென்றார் பாதிரி.

வீட்டின் தோட்டத்து வாயில் வழியாக வீட்டில் நுழைந்தார் பாதிரி. அவர் இதயம் 'படபட' என்று வேகமாக அடித்துக் கொண்டது. அவரது நரம்புகளில் ஒரு நடுக்கம். திருடனைப் போல நிதானமாகக் கூர்மையான பார் வையுடன் நடந்தார். அதிக இரத்த ஓட்டத்தால் அவர் முகம் சிவந்து காணப்பட்டது.

வீட்டின் முதல் அறையில் நுழைந்தார் பாதிரி. அங்கிருந்த கட்டிலின் அலங்கோல நிலையைப் பார்த்ததும் அவருக்கு மயக்கம் வரும் போலிருந்தது.

அவசர அவசரமாக மனைவியின் அறைக்குள் நுழைந்தார். அவள் அப்போது ஜன்னலோரத்தில் அமர்ந்திருந்தாள், அவளுடைய தலைமயிர் நிலைகுலைந்து கிடந்தது. அவள் கண்களில் தடவப்பட்டி ருந்த மை கரைந்திருந்தது. கன்னங்களில் நகக் கீறல்கள்! அவள் அணிந்திருந்த உள் 'பாடி'யின் தோள்பட்டை ஒன்று அறுந்து தொங்கியது. அவள் முகத்தில் 'இன்பச் சோர்வு' படிந் திருந்தது.

பாதிரியின் சந்தேகம் உறுதி யாகிவிட்டது. அவர் காலில் ஏதோ தட்டுப்பட்டது. குனிந்து அதை எடுத்தார். குதிரைச்சவாரி செய்வோர் காலில் அணிந்து கொள்ளும் 'குதிமுள்' இரண்

டைப் பார்த்ததும் அவருக்கு எல்லாம் தெளிவாகப் புரிந்துவிட்டது. இதயத்தில் ஒரு நரம்பு 'படார்' என்று அறுந்து விழ்ந்ததைப் போலத் துடித்தார்.

''உன்னுடன் யார் இங்கு இருந்தது ?'' பாதிரியின் குரல் தடித்து ஒலித்தது.

அழகுத்தேவதை ஒயிலாகத் தோள்களைக் குலுக்கினுள். பதில் எதுவும் கூருமல் அலட்சியமாகச் சுவரைப் பார்த்தாள். அவள் கண்கள் ஏதோ கனவு காண்பது போல இருந்தன.

''நான் சொல்லட்டுமா ?........ அந்த கடற்படைத் தலைவன் இங்கு உன்னுடன் இருந்திருக்கிருன்....'' பாதிரியின் குரலில் பாம்பின் சீற்றம் காணப்பட்டது. ஆனுல் அவள் அதற்குக் கூறிய பதில்........

''ஏன் அவர் என்னுடன் இருக்கக் கூடாது ?........''—ராணியைப் போல பதில் கூறினுள் அழகுத் தேவதை.

அடித்து வைத்த சிலைபோல நின்றுவிட்டார் பாதிரி. ஆனுல் அவர் உள்ளமோ எரிமலையெனக் குமுறியது....

அவளுக்குக் காதல் தாகம். பாதிரிக்கோ பரலோகத்தைப் பற்றிய சிந்தனை. அவளுடைய இதயப் பசிக்கு ஏற்ற உறைவாக அமையவில்லை பாதிரி. அதன் விளைவு.... பாதிரி இல்லாதநேரத்தில், பாவை தனது இச்சைக் குகந்தவனுடன் கூடிக் களித்தாள். கடற்படைத் தலைவன் மூலம் தனது 'தசையாசை'யைத் தணித்துக் கொண்டாள்.

எல்லோருக்குமே இயல்பாக அமைந்திருக்கும் 'பருவப்பசி' அவளுக்கும்....ஆனுல் சந்தர்ப்பம் அவளோடு இணைத்து வைத்த

> **சந்தாதார்களுக்கு :**
>
> அலுவலகத்திற்கு எழுதும் கடிதங்களில் தங்கள் சந்தா எண்ணைக் குறிப்பிடுதல் நலம்.
>
> —*பொறுப்பாளர்.*

பாதிரியோ 'பசி'யைத் தணிக்கவில்லை. தாகத்தைத் தணித்துக் கொள்ள அவள் திருட்டு வழி சென்ருள். அதற்காக அவள் கவலைப்படவில்லை. ஆனுல் பாதிரியோ கோபத்தின் உச்சியில் நின்று கொண்டு கூவினுர்...

''என்ன கொடுமை! என்ன துரோகம் ! என்ன பாவம் !...''— ஆத்திரத்தால் ஆர்ப்பரித்தார் பாதிரி.

ஆனுல் அழகுத் தேவதையோ சிறிதுகூடக் கலங்கவில்லை. அலட்சியப் பார்வையுடன் அவள் கூறினுள்—

''ஆமாம். நான் பாவம் செய்தேன். தெரிந்தே செய்தேன். ஏன் தெரியுமா ?.........கிறிஸ்து மீண்டும் பிறக்க வேண்டுமானுல் எல்லோரும் புண்ணியம் செய்ய வேண்டும். ஆனுல் இது கடினமான காரியம். எல்லோரும் பாபிகளானுல் கிறிஸ்து பிறப்பார். இது எளிது, ஆகவே நான் பாவம் செய்தேன். இதிலென்னதவறு....'

பாதிரிக்குத் தலை சுற்றியது. பார்வை மழுங்கியது. உலகம் தன் காலடியிலிருந்து நழுவிச் சென்று, தான் மட்டும் எங்கோ அந்தரத்தில் சுழல்வதுபோல உணர்ந்தார். அவர் கண்கள் இருண்டன. உலகம்......? ✱

மூலம் : மாப்பஸான்.

28 Persons are awarded Prizes in Competition No. 14. Viz., 1st Prize winners 23 persons and 3rd prize winners 5 persons only. Full particulars are published in RAISING STAR dated 10—5—54.

ரிஜிஸ்டர்ட் நெ. 624. போட்டி நெ. 16.

ரூ. 25,000

பரிசு பெறுக.

எமது ஸீலிடப்பட்ட சரியான விடை சென்னை மெஸர்ஸ் பிரீமியர் பாங்க் ஆப் இந்தியா லிமிடெட்டில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவர்களது அத்தாட்சியுடன் பிரசுரிக்கப்படும் எமது ஸீலிட்ட விடைக்கு வரிக்கு வரி எழுத்துக்கு எழுத்து முற்றிலும் சரியான விடைக்கு முதல் பரிசு ரூ. **12,500**: முதலிரண்டு வரி சரியான விடைக்கு 2-ம் பரிசு ரூ. 6500; முதல் வரி சரியான விடைக்கு 3-ம் பரிசு ரூ. 3500. இடமிருந்து வலமும், மேலிருந்து கீழும் முதலிரண்டு எண்கள் சரியான விடைக்கு 4-ம் பரிசு ரூ. 2,500

RAISING COMPETITIONS

KEY S. NO. 14 *21 TO 36=114

27	22	34	31
32	33	21	28
29	36	24	25
26	23	35	30

We hereby certify that the above is the solution in original deposited with us by *Raising Competitions No.* 14 on 9/4/54 in a sealed cover which was opened in our presence to-day and that a copy of the above solution has been lodged with the Bank.

For The Premier Bank of India Ltd.

29-4-54.

Acct. Agent, Madras.

முடிவு தேதி 28–5–54 **விடை 12–6–54**

பிரவேசக் கட்டணம்: கூபன் 1-க்கு ரூ. 1–0–0.

ஆறு கூபன்களுக்கு ரூ. 5–0–0, 14 கூப்பன்களுக்கு ரூ. 10.

விடைகள் கண்டு பிடிக்கும் விதம்:— 25 முதல் 40 வரையுள்ள எண்களைப் பக்கத்திலிருக்கும் கட்டங்களில் பூர்த்தி செய்க.

130

இடமிருந்து வலமாகவுள்ள, வரிசைகளையோ, மேலிருந்து கிழாகவுள்ள வரிசைகளையோ, சதுரத்தின் மூலைகளுக்கு குறுக்காகவோ எந்த வரிசையைக் கூட்டினாலும் மொத்தம் 130 தான் வரவேண்டும். ஒரு எண்ணை ஒரே முறைதான் உபயோகிக்கலாம், சாதாரண காகிதத்தில் எத்தனை விடைகள் வேண்டுமானாலும் எழுதலாம். ஒவ்வொரு விடைக்கும் அடியில் அவரவர் பெயர், விலாசத்தை ஆங்கிலத்தில் தெளிவாக எழுதி, கட்டணத்தையும் கிராஸ் செய்த இந்திய போஸ்டல் ஆர்டராகவோ, மணியார்டராகவோ அனுப்பவும். மணியார்டர் பாரத்தில் கூப்பன்களில் அவரவர் பெயர் விலாசத்தை எழுதவேண்டும். விடை கூப்பன்களுடன் மணியார்டர் ரசீதை அனுப்பவும். வெளி நாட்டிலிருந்து அனுப்புவோர் பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டராக வாங்கி அனுப்பவேண்டும். பரிசுத் தொகைகள் வசூலுக்குத் தக்கபடி மாறும். எல்லா விஷயங்களிலும் மானேஜரின் தீர்ப்பே முடிவானது. சட்டப்படி கட்டுப்படுத்துவதுமாகும். விடை வேண்டுவோர் 4 அணு தபால் ஸ்டாம்பு அனுப்பினால் விடை தபாலில் அனுப்பப்படும். எமது விதிகளையும் நிபந்தனைகளையும் நன்கு அறிந்தவர்களே போட்டியில் கலந்துகொள்ள வேண்டும்.

விடைகளையனுப்பும் விலாசம்:—

The Raising Competitions No. 16

28, (P) Thandavaraya Gramani Street, Madras-21.

[கதையமைப்பையோ, கற்பனைக் கருத்துக்களையோ, சொற்றொடர்களையோ எடுத்தாள எண்ணுவோர் ஆசிரியர் தம் இசைவு பெறல்வேண்டும்]

காட்சி 12

[திரைக்குப் பின்னிருந்து சாத்தனார் குரல், கண்ணகியின் உருவம் நிழற்காட்சியில்]

பொங்கி எழுந்தாள்; புறப்பட்டாள்; எங்கே என் கணவன்? எங்கே என் கணவன்? என்று ஏங்கினாள்; மதங்கொண்ட யானையை இதங்கொண்டடக்கிய என் மன்னன் எங்கே? மறையவர் குறை போக்கி நின்ற என் மாதவன் எங்கே? சிறடிச் சிலம்பு விற்று என் பேரிடர் நீக்கச் சென்ற செம்மல் எங்கே? காற் சிலம்பு விற்றுக் கடிதின் வருவேன் என்ற காதலன் எங்கே? மலையிடைப் பிறவாத என் மாணிக்கம் எங்கே? யாழிடைத் தோன்றாத என் ஏழிசை எங்கே? அலையிடைக் கிட்டாத என் அமுதன் எங்கே? எங்கே...? எங்கே...? எங்கே என் கணவன்?

இரைந்தாள்...இரைந்தாள்... இதயக் குமுறல் இருக்கும்வரை இரைந்தாள்.

காய் கதிர்ச் செல்வனே! என் கணவன் கள்வனோ? என்றாள். இல்லை யென்ற ஒரு குரல்கேட்டு.......விரைந்தாள்...விரைந்தாள்... வேந்தன் அவைக்களத்திற்கே விரைந்தாள்! காவலன் அவையிலே காரிகை புகுந்தாள்.........

காட்சி 13

[இடம்: பாண்டியன் அவை. நெடுஞ்செழியன் பாண்டிமா தேவியுடன் வீற்றிருக்கிறான். கண்ணகி பெருஞ் சினத்துடன் அவையில் புகுதல் கண்டு........]

நெடுஞ்செழியன்: (வியப்புடன்) யார்......?

கண்ணகி: ஆய்ந்துபார்க்கும் அறிவற்ற பாண்டிநாட்டரசே! காற்சிலம்பைக் கவரும் பொருட்டு என் கணவனைக் கள்வனாக்கிய காவலனே! காவலன் அவையிலே காரிகை புகுந்து கட்டுரைக்கப் போகின்றாளே என்ன காரணம் என்றெண்ணித் துடிக்கின்றதா? உமது உள்ளம்! துடிக்கட்டும் உமது உள்ளம்! துஞ்சட்டும் உமது நெஞ்சம்.

நெடுஞ்செழியன்: கண்களில் நீரும் கையில் தனிச்சிலம்பும் கொண்டோடி வந்த நங்கை நல்லாய்! யார் நீ?

கண்ணகி: ஆற்று வளத்தால் சோற்றுவளம் பெருக்கி, மாற்ருரையும் போற்றி யுண்ணச் செய்யும் அகன் சோணுடு; இந்த அபலை வாழ்ந்த நாடு. புருவின் துயர் தீர்க்கத் தன் ஊனை அரிந்தளித்து இறவாத புகழ்கொண்ட எம் சோழன் நாடு; சோகக் கண்ணீர் வடிக்கும் இந்த சோதரி பிறந்த நாடு. ஆவின் கன்றை அரசன் மகன் கொன்ருன் என்று அலறியெழுந்த ஆவின் துயர்க் கண்ணீரைத் துடைக்க அரசாளப்போகும் தன் அருமை மகனை ஆழியிலிட்டுக் கொன்ற மனுநீதி சோழனின் மாநகரமே இந்த மாபாவி வாழ்ந்த புகார் நகரம்.

வாணிகத்தால் பொருளீட்டித் தானிகரின்றி வாழ்ந்து காட்டிய மாசாத்துவன் என் மாமன்... ... ...

ஊழ்வினையால் பொருளீட்ட உன் நகர்ப்புகுந்து கோவியலறியா உன்னுல் கொலைக்களப்பட்ட கோவலன் மனைவி; இந்தக் கடுவினையேன் பெயர் கண்ணகி.

நெடுஞ்செழியன்: வாணிகத்தால் பொருளீட்ட வையை நாடடைந்தீரோ?

கண்ணகி: ஆம் அரசே! ஆம்!!

மன்னவன் வாழும் மதிற்கோட்டையென்று புகுந்தோம்; அது கன்னக்கோலிடும் கள்வர் குகை என்பதைக் கண்டறியாதுபோனேம்!

பாண்டி மன்னன் செங்கோல் செலுத்தும் பகுத்தறிவுப் பாசறை என்று புகுந்தோம்; அது, தான் தோன்றிகள் வாழும் தழற்கோட்டை என்பதை அறியாது போனேம். தென்னவன் வாழும் தேமதுரத் தமிழ்க்கோட்டை யென்றெண்ணிப் புகுந்தோம்; அது, கண்ணிலிகள் வாழும் கபோதிபுரம் என்பதை அறியாது போனேம்! நாட்டு மறவர் கூட்டம் வாழும் நன்னுடென்று புகுந்தோம்! அது, காட்டு மிராண்டிகள் வாழும் கருவேலங் காடென்பதை அறியாது போனேம்!

நெடுஞ்செழியன்: நங்கை நல்லாய்........! (பாண்டியன் உரையாடாதவாறு கண்ணகி மீண்டும் பேசுகின்ருள்.)

கண்ணகி: முறை கேட்டு நிறை புரிந்த முத்தமிழ்ப் பாண்டி நாடே! நீ, முறை கெட்டு குறை புரிய முனைந்தது எத்தனை நாளாய்? மன்னுயிரைத் தன்னுயிராய் மதித்தாண்ட மதுரை மாநகரே! நீ, கண்ணையே அழிக்கும் கடுந்தொழில் ஏற்றது எத்தனை நாளாய்? செங்கோல் பிழையாது செகங்காத்த செந்தமிழ்ப் பாண்டி வேந்தே! நீ, கொடுங்கோல் தனை ஏந்தி இந்தக் குவலயத்தை அழிக்கத் தொடங்கியது எத்தனை நாளாய்?

மண்ணுலகாளும் மன்னர் கோமானே! காற்சிலம்பைக் கவர்ந்த தென்னுட்டுக் காவலனே! கொலைக் குற்றத்திற்கு என் கொழுநனை ஆளாக்கிய கோவேந்தே! நீரே சொல்லும்! என் கண

வனை என் கொன்றீர்? என்ன குற்றம் கண்டீர்? நற்றிறம் படராக் கொற்கை வேந்தே! என் நாயகனைக் கொன்றது என்?

நெடுஞ்செழியன்: பெண்ணணங்கே! பேதமையால் பிதற்ருதே. கள்வனைக் கொல்லல் கடுங்கோலன்று; வெற்றிவேந்தர் கொற்றம்.

கண்ணகி: கள்வன்! என் கணவன் கள்வனு? மாசாத்துவன் பெற்றெடுத்த மாணிக்கமா கள்வன்? வணிகர் குல திலகமா கள்வன்? இல்லை...இல்லை....ஒருக்காலும் இல்லவே இல்லை........

நெடுஞ்செழியன்: காற்சிலம்பைத் திருடியவன் கள்வனன்றிப் பின் யார்?

கண்ணகி: காவல் வேந்தே காற்சிலம்பைத் திருடியவன் கள்வன்தான். ஆனுல் காற்சிலம்பைக் கவர்ந்தவன் யார்? கனக சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் காவலனு? இல்லை, கால்கடுக்க நடந்து காற்சிலம்பை விற்க வந்த என் காதலனு? யார் கொற்றவனே? யார்? சிலம்பைத் திருடிய அந்தத் தீயோன் யார்?

நெடுஞ்செழியன்: கணவனை இழந்த துயரத்தால் கண்மூடித்தனமாய்ப் பேசாதே.

கண்ணகி: இல்லை அரசே! இல்லை! சோணுட்டுப் பெண் சொன்ன சொல் தவருது அரசே! தவருது!

நெடுஞ்செழியன்: அப்படியென்ருல்... ....!

கண்ணகி: ஆய்ந்தறியும் திறம்படைத்த ஐம்பெருங் குழுவினரே! எண்ணித் துணியும் இயல்கொண்ட எண்பேராயத்தோரே! இதைக் கேளுங்கள்... ...என் காற்சிலம்பின் பரல்கள்.... ...மாணிக்கங்கள்! மாணிக்கங்கள்!

நெடுஞ்செழியன்: (வியந்து) என்ன மாணிக்கங்களா?.... .... நமது சிலம்பின் பரல்கள் முத்துக்கள்.

கண்ணகி: எங்கே என் சிலம்பு.... ....
(கண்ணகியின் கையில் சிலம்பு கொடுக்கப்படுகின்றது) உள்ளம் தெளிவிக்கும் நல்ல தமிழ்ப் புலவர்களே! நாடாளும் வேந்தன் அவையிலே நாவடங்கிக் கிடக்கும் நல்லமைச்சர்களே! அவையோரே! பெரியோரே! இதோ காணுங்கள். (சிலம்பை உடைக்கின்ருள்; மாணிக்கப் பரல்கள் சிதறியோடுகின்றன; ஒன்று பாண்டியன் முகத்தினும் தெறித்தது) கோப்பெருந் தேவியின் காற்சிலம்பின் பரல்கள் முத்துக்கள்.... ...முத்துக்கள்! என் காற்சிலம்பின் பரல்கள் மாணிக்கங்கள்! மாணிக்கங்கள்!!

(கோபச் சிரிப்புக்குப் பின்னர்) என் கணவனைக் கள்வனுக்கினீர்! கடுந்தண்டனை கொடுத்தீர்! கொற்றம் வழங்கிய நற்றிற வேந்தே! நீர் கண்ணுல் கண்டதுண்டா என் கணவனை? காதாற் கேட்டதுண்டா? அவன் கண்ணியம் நிறைந்த சொற்களை. பீடு

நடையும் பெருமிதப் பார்வையும் நாடும் கலையுளமும் நல்லன்பும் கண்டிருந்தால் என் கணவனைக் கள்வனாக்கியிருக்க மாட்டீர்! கொலைத் தண்டனை விதித்த கொற்றவனே! எந்தக் கொலுமண்டபத்திருந்து குற்றம் சாட்டினீர்? கடுந்தண்டம் விதித்த காவலனே! எந்தக் கண்ணியவான்களின் முன்னே என் கணவனைக் கள்வனாக்கினீர்? அறங்கூறவையத்தார் எங்கே? ஆட்சிபுரியும் அமைச்சர்கள் எங்கே? எல்லோரும் இறந்துவிட்டனரா? கூறும் கொற்றவனே கூறும். மண்ணுலகாளும் வேந்தே! இப்போது என்ன மாற்றம் காணுகின்றீர்! கள்வன் யார்? காற்சிலம்பைக் களவாடிய கள்வன் யார்? பாண்டி நாட்டுப் பட்டத்து வேந்தனா! சோழ நாட்டு வாணிகப் பெருமகனா? யார் கொற்றவனே? யார்? களவுத் தொழில் புரிந்த கள்வன் யார்? கூறும் கொற்றவனே! கூறும்! கூறமாட்டீரா?

நெடுஞ்செழியன்: நான்... ....நானே கள்வன்! பொன் செய் கொல்லன் புகன்ற மொழிகேட்ட யானே கள்வன்! காமவெறியாலே கருத்தறை போய யானே கள்வன்! கண்ணகி...! கற்புக்கரசி....!! நின் கணவன் கள்வனல்லன்! கள்வனென மொழிந்த யானே கள்வன்!

வளையாத பாண்டி நாட்டுச் செங்கோல் வளைந்தது; பிழையாத தென்னவர் நீதி பிழைத்தது; மன்புலங்காக்கும் தென்புலக் காவல் என்முதற் பிழைத்தது! என்முதற் பிழைத்தது! நீதியைத் துறந்தேன்; நேர்மையை இழந்தேன்! அநீதிக்கு ஆட்சிப்பீடம் அளித்துவிட்டேன்! இனி எனக்கு அரச பதவி வேண்டாம்; மண்ணுள வேண்டாம்! இந்த மண்ணில் உயிர் வாழவே வேண்டாம்; மடிகின்றேன்........மடிகின்றேன்!

[பாண்டியன் மயங்கி சாய்கின்றான்]

கண்ணகி: மன்னுயிரைத் தன்னுயிராய்ப் போற்றிய தென்னவர்தம் மணிமகுடம் கண்ணிலியாய் கொடுங்கோல் புரிந்த மன்னவனே உமக்கு ஏன்?

[உயிர் துறந்த பாண்டியன் தலைகவிழ மணிமகுடம் கீழே வீழ்கின்றது]

கண்ணகி: பொற்கைப் பாண்டியனின் பொற்கரங்கள்பிடித்த செங்கோல்! நீதியைக் கல்லாத நின் கரங்கள் பிடித்திருப்பது எதற்கு?

[செங்கோல் கையினின்றும் நழுவுகின்றது]

கண்ணகி: குடிநிழல் காத்த கோவேந்தர் கைப்பிடித்த வெண்கொற்றக் குடை, உன் அடிநின்று காத்தல் அநீதி! அநீதி!! அழியட்டும் வெண்கொற்றக் குடை! அழியட்டும் பாண்டியர்தம் ஆட்சி!!

[வெண்கொற்றக்குடை வீழ பாண்டியனும் கீழே வீழ்கின்றான்]

பெருங்கோப்பெண்டு: ஐயோ! ஐயோ! (பாண்டியனை எடுத்தணைக்கின்றாள்) மன்னர் மன்னா! மடிந்தனையா? பிழையாத நீதியும் பிழைத்ததோ? கணவன் இழந்தாட்கு யாரைக் காட்டுகேன்?... ஐயோ; ஐயோ! (நடுக்குற்று வீழ்தல்)

கண்ணகி: அழு! அழு!! அநீதி இழைத்து ஆருயிரை இழந்த உன் அருமைக் காதலனை நினைத்து அழு! கூவிக் கூவி அழு! கோல் முறை கோடிய உன் கொற்றவனை நினைத்துக் கூவிக் கூவி அழு!

[சிரித்தல்]

கற்புடைப் பெண்டிர் வாழ்ந்த காவிரி நாட்டில் பிறந்தேன்; என் கற்புத் திறங்காட்டிக் காவலனை அழித்தேன்; அவன் காத்த நகரையும் அழிக்கின்றேன்....(சிரிக்கின்றாள்...ஓடுகின்றாள்...கொங்கையைத் திருகி எறிகின்றாள்.)

காட்சி 14

[கண்ணகி அரசர் பெருந் தெருவழியே ஓடுகின்றாள்.]

கண்ணகி: தீ பரவட்டும்! தீ பரவட்டும்!! திக்கெட்டும் பரவட்டும்!!!

பரவட்டும் தீ! பரவட்டும் தீ!! பாண்டிய நகரெங்கும் பரவட்டும்!!! பற்றட்டும் பாண்டிமா நகரில் பற்றி எரியட்டும் பாண்டியன் கோவில்! கணவனைக் கள்வனாக்கிய காவலன் அழியட்டும்! கண்ணகியை இக்கதிக்காளாக்கிய பெண்மணிகள் கதறட்டும்!

நாட்டைச் சுடுகாடாக்கும் வேட்டைக்காரர்கள் வெந்தொழியட்டும்! மக்களை மாக்களாக நடாத்தும் மதோன்மத்தர்கள் மாண்டொழியட்டும்! கொடுங்கோல் மன்னவன் கோநகரில் கொடுந் தீ பரவட்டும்! கோவியல் பிழைத்த கொற்றவன் நகரில் கொடுந் தீ பரவட்டும்!

கற்புக்கரசியர் வாழ்ந்த காவிரி நாட்டிலே பிறந்தேன்; கற்புக்கரசியாய் வாழ்ந்தேன். வையை வளநாடென்றெண்ணி என் ஐயனுடன் கூடல் நகரத்தைக் கூடினேன். பாண்டியன் அநீதிக்கு என் கணவனைப் பலியாக்கினேன். கொங்கு நாட்டிலே என் கணவனைக் கண்டடைகின்றேன். (சிரித்தல்)

காட்சி 15

[இடம்: பேரியாற்றடைகரை—செங்குட்டுவன் முதலியோர் வீற்றிருக்கின்றனர்—சாத்தனார் கண்ணகியின் வரலாற்றைக் கூறி முடிக்கின்றார்]

சாத்தனார்: மன்னன் மாண்டான்; மன்னன் தேவியோ உடனுயிர் நீத்தாள். மதுரை தீக்கிரையாயிற்று தனியே தவித்தாள் கண்ணகி; தனிமையில் யாண்டு செல்வாள்.

பிறந்த சோழநாடு கோவலன் கண்ணகியின் இன்ப வாழ்க்கையைப் பிரித்தது. வாழ்வு தேடிப் புகுந்த பாண்டி நாடோ கணவன் உயிரையே களவாடி விட்டது. கொற்ற வேந்தன் கொடுங்கோல் தன்மை இற்றெனக் காட்டி நீதி கேட்க வந்தாள்; எந்நாட்டிற்கும் தலையாய நின்னாட்டைத்தேடி........வாழ்க! வழி வழி சிறக்க நின் வலம்படு கொற்றம்!

செங்குட்டுவன்: ஆம்! நம் நாட்டைத்தான் அடைந்தாள் அந்நங்கை!

மகிழ்வூட்டி: புலவரே!

சாத்தனார்: என்ன திலகரே!

மகிழ்வூட்டி: ஐயம் ஒன்று....

சாத்தனார்: நன்று கூறும்!

மகிழ்வூட்டி: கண்ணகி சிலம்பை உடைத்தாள்; மாணிக்கப் பரல் மன்னன் முகத்தில் தெறித்ததல்லவா?

சாத்தனார்: ஆம்....!

மகிழ்வூட்டி: மன்னன் மடிந்தான்! மாணிக்கப்பரல் தெறித்தா? செங்கோல்வளைந்த செயல் கண்டா? புரியாத வினா! சரியான விடை....

சாத்தனார்: வேண்டுமோ! வளையாத செங்கோல் வளைந்தமையால் நிலை குலைந்து இறந்தான் பாண்டியன்.

மகிழ்வூட்டி: ஆம்! ஆம்!! உண்மை! உண்மை!! இன்னொரு சந்தேகம்....!

> சாத்தனார்: மணிமேகலை என்ற நூலின் ஆசிரியர் இளங்கோ வடிகள் காலத்தவர்.
> பெருங் கோப் பெண்டு: கோவலன் இறக்கக் காரணமாயிருந்த பாண்டியன் ஆரியயப் படை கடந்த நெடுஞ்செழியனின் மனைவி பாண்டிமாதேவியாவாள்.

சாத்தனார்: என்ன? கூறும்!

மகிழ்வூட்டி: மன்னன் மாண்டான். மாநகரில் தீப்பற்றியது.... இல்லையா?

சாத்தனார்: ஆம்!

மகிழ்வூட்டி: மதுரையில் தீமூட்டியது; கண்ணகியின் கற்புத் திறனா? அன்றிக் காவலன் இன்மையால் கள்வர் தீமூட்டினரா?

சாத்தனார்: கண்ணகியின் கற்புத்திறம் தான்!

மகிழ்வூட்டி: இருக்கும்! இருக்கும்!! இல்லாதது பிறக்குமா?

வில்லவன் கோதை: மகிழ்வூட்டியின் ஐயங்கள் மனத்திற் கொள்ளத் தக்கனவே!

அழும்பில்வேள்: மகிழ்வூட்டிக்கு எங்கும் எதிலும் ஐயம்தான்!

இளங்கோ: வியப்பினும் வியப்பிறந்தன்று!

செங்குட்டு: வியத்தற்குரிய நிகழ்ச்சி மட்டுமல்ல! பெரு வருத்தத்திற்குரிய நிகழ்ச்சியுமாகி விட்டது! எம்மோரன்ன வேந்தர்க்குச் செம்மையின் இகந்தசொல் செவியிற் படுமுன்னே பாண்டியன் உயிர் துறந்த அந்த செய்தி வளைந்த செங்கோலை நிமிர்த்திவிட்டது. வாழ்க பாண்டியன்! புலவரே! என்னே அரச வாழ்க்கை! மன்பதைகாக்கும் நன்குடிப் பிறத்தல் எந்நாளும் துன்பந்தருவதே! மழைவளம்

பெருகாதொழியின் மன்னவன் அஞ்சவேண்டும். குடிகளுக்கோர் குற்றம்நேரின் கொற்றவன் நடுங்கவேண்டும். ஆட்சிப் பொறுப்பை ஏற்றவர்கள் என்றும் யார்க்கும் அஞ்சியே வாழ வேண்டியவர்கள் தான்!

என்னே! மணிமுடி தரித்தாளும் மன்னவர் வாழ்க்கை (வேண்மாளைப் பார்த்து) நன்னுதால்! மன்னன் உயிரோடு தன்னுயிர் போக்கிய பெருங்கோப்பெண்டு....; கணவனைக் கள்வன் அன்றெனக் காட்டி, நம் நாடடைந்து நல்லுயிர் நீத்த கண்ணகி நல்லாள்; இவருள்........நாம் போற்றத்தக்கார்........

வேண்மாள்: அண்ணலே! மன்னவன் உயிரோடு தன்னுயிர் சேர்த்த மங்கை விண்ணவர் உலகிலே நன்னிலை யுறுக! கற்புக் கடம்பூண்ட அவள் வாழ்க! ஆயினும் நம் நாடடைந்த நங்கையே நாம் போற்றும் தகுதி வாய்ந்தாள்.

செங்குட்டு: ஆம்! (அமைச்சரைநோக்கி)

அமைச்சர்: வாழ்க எம் கோவே! வாழ்க! செந்தமிழ்ப் பொதியிலே பைந்தொடி நங்கைக்குக் கற்கால் கொண்டால், காவிரி யாற்றிலே நீராட்டு நடத்தலாம். விற்றலைக் கொண்ட வியன்பேரி மயத்துக் கற்கால் கொண்டால் கங்கை யாற்றிலே நீராட்டல் வேண்டும்! வாழ்க எங்கோவே வாழ்க!

செங்குட்டுவன்: செந்தமிழ்ப் பொதியிலே கல்லெடுத்தல் சேரர்குடிக்கு வீரமாகாது. காவிரியாற்றிலே நீர்ப்படுத்தல் கன்னித் தமிழ் வேந்தர் வெற்றியாகாது. இமயத்திலே கல்லெடுப்போம்! எதிர்ப்போரை வெல்வோம்! கங்கையாற்றிலே நீர்ப்படுப்போம்! காவாநாவின் கசடர்களைக் கட்டிக் கொணர்வோம்!

எழுத்தாளர்களுக்கு

பொன்னி இதழுக்குக் கதை, கட்டுரை, கவிதை முதலியவற்றை யனுப்புவோர் கீழ்க்காணும் குறிப்புக்களை கவனித்தருள வேண்டுகிறோம்!

★ பிறமொழிக் கலப்பின்றி, நல்ல, இனிய எளிய தமிழில் எழுதியிருக்கின்றீர்களா?

★ பகுத்தறி வுணர்ச்சியைச் சிறிதேனும் ஊட்டத்தக்கதா யமைந்துள்ளதா?

★ தமிழ், தமிழர் தமிழ் நாட்டுப்பற்றை மக்களிடை உண்டாக்குமா?

★ பண்டைத்தமிழ் இலக்கியக் கருத்துக்களை மக்களுக்கு எடுத்துணர்த்துமா?

★ ஆராய்ச்சியுரைகள் உளவா? புதிய கண்டு பிடிப்புக்களா? புதுமைகளா?

ஆசிரியர்.

பத்தினிக் கடவுளின் சிலை இமயப்பனி வரையிலிருந்து எடுக்கப் படவேண்டும். கற்புக்கரசியின் சிலை கங்கையாற்றில் நீராட்டப் படவேண்டும். வந்தெதிர்க்கும் கயவர்களை வென்று வாகை சூட வேண்டும்........வாகை சூட ஒரு வாய்ப்பு........போர் புரிய ஒரு புது முறை.......(சிரிப்பு)

வில்லவன்: வேந்தே வாழ்க! இமயத்தில் கல்லெடுக்க எங்கோன் செல்வதென்றால் எதிர்ப்பார் யாருளர்? எங்கோமகளைக் கங்கை நீராட்டிய அன்று எதிர்த்த ஆயிரவர் தம் கதியை எண்ணிப் பாராமலா இருப்பர்! கொங்கர் செங்களத்தே குவித்த பிணக் குவியல்களிடையே ஒலித்த சங்கநாதம் இன்னும் ஓயவில்லையே! அண்ணல் செல்வது படிமம் ஒன்றற்கே எனின் புலி வில் கயல் பொறித்த மடல் ஒன்றே போதும்.......அனுப்பியருள்க.

அழும்பில்வேள்: வேண்டாம்! பகைவர் தம் ஒற்றர் நம் பக்க மெங்கணும் நிறைந்துளர்! அவர்களே தத்தம் நாட்டிற்குச் செய்தி யறிவிப்பர்! வஞ்சி நாட்டார் மடல் வரைந்தனுப்பக் காத்திரார். வஞ்சி நகர் எங்கணும் பறையறைந்தாலே அது எங்கணும் பரவி விடும்.......

செங்குட்டுவன்: ஆம்! முரசு முழங்கட்டும்! போர்முனை மூளட்டும் பறை யறையட்டும்! பகைவர் நாணட்டும் வளம் கண்டு களித்தோம் வஞ்சிக்குப் புறப்படுவோம்! வஞ்சி நகரெங்கும் முழங்கட்டும் நமது சங்கநாதம்!

காட்சி 16

[நகரெங்கணும் முரசொலி கேட்கின்றது]

வாழ்க வஞ்சி நாட்டார்!
ஊழிதோறூழி யுலகங்காத்து வாழ்க எங்கோ

மன்னவர் பெருந்தகை! (முரசொலி)
வேற்று நாட்டு ஒற்றர்கள் கேட்டுத்தெரிக (முரசொலி)
வஞ்சி நாட்டு வேந்தன் வடவர் இமயத்திலே (முரசொலி)
கண்ணகி நல்லாளுக்குக் கற்படிமம் தானெடுக்க (முரசொலி)
வருகின்றான் வேந்தன் வழிதிசையின்வாள் வேந்தீர் (முரசொலி)
இடுதிறையுடன் கூடி எல்லோரும் அடிபணிமின் (முரசொலி)

இன்றேல்

கடல் நடுவே கடம்பெறிந்த வார்த்தை (முரசொலி)
இமயத்திலே வில்பொறித்த செய்தி (முரசொலி)
கேட்டு வாழ்வீர்! கேளாதிருந்தால் (முரசொலி)
மனைவியை வெறுத்த மாதவம் ஏற்பீர் (முரசொலி)

மன்னவன் ஆணை!
மன்னவன் ஆணை!!

(தொடரும்)

ஒன்பதாவது அதிசயம்!

— சாரி —

அன்று கோபால் செட்டியார் மளிகைக் கடைக்கு எனது பத்து வரவு கணக்கைக் கூட்டிப் பார்த்துக்கொண்டுஇருந்தபோது உலக அதிசயங்களில் பத்தாவது அதிசயத்தை கண்டேன். அப்படி அது என்ன அதிசயம் என்ருல், ராமன், கிருஷ்ணன், கோவிந்தன் மூவரும் தங்களது வெகு நாளாய கடன் பாக்கியைத் தீர்த்து விட்டதுதான். வெகுநாளாகவே செட்டியாருக்கு 'கடுக்காய்' கொடுத்து வந்த மூவரும் எப்படி அவருக்குக்கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுத்தார்கள் என்பதே எனக்குப் புரியாத புதிராக இருந்தது.

பத்தாவது அதிசயம் சரி........ ஒன்பதாவது அதிசயம் என்னவென்று கேட்கிறீர்களா?....அது தான்....செட்டியார், அவர்களிடமிருந்து எப்படி பணத்தை வசூல் செய்தார் என்பதே ஒன்பதாவது அதிசயம்! அந்த அதியத்தைத் தெரிந்து கொள்ள ஆவல் மேலிட்டதால் செட்டியாரையே கேட்டு விட்டேன்.

"ஏன் செட்டியார்..........ராமன், கிருஷ்ணன், கோவிந்தன் இவர்களிடமிருந்து எப்படி பாக்கியை வசூல் செய்தீர்கள்?"

"அதுவா?........ உலகத்திலே 'மதிப்பு' என்பது இருக்கிற வரையிலே எதுதானுங்க முடியாது?"

"மதிப்பா?....அது எப்படி?"

"ராமன் வீட்டிலே பெரிய மனிதர்கள் நாலுபேர் வந்து இருந்தபோது நம்ப குமாஸ்தாவை ராமனிடம் பாக்கியை, பாக்கிப்பேர் காதில் விழும்படி கேட்கச் சொன்னேன். வந்திருந்த மனிதர்கள் முன்னுல் நம்ப மதிப்பு குறைஞ்சு போயுடுமென்று பயந்து ராமன் மறுபேச்சில்லாமல் பணத்தைக் கொடுத்து அனுப்பி விட்டார்!"

"அது சரி....கிருஷ்ணன்!"

"அவரா....அவருடைய மாமனுருக்கு நான் பாக்கியைப்பற்றி கடிதம் போட்டதர்கவும், அவர் இன்னும் ஒரு வாரத்தில் பணம் அனுப்புவதாகவும் எழுதி இருக்கிருர் என்று கிருஷ்ணனுக்கு ஒரு கடிதம் போட்டேன். "நம்ப மாமனுர்



தள்ளுகிறவன்: அண்ணே ஜாக்கிரதை!.......உன்கால் விரல் கைவிரல் அகப்பட்டு நசுங்கி விடப்போவுது!

விற்பனையாளர் தேவை :

செங்கல்பட்டு
பவானி
போடி நாயக்கனூர்
பல்லடம்
கொடைக்கானல்
கள்ளிக்கோட்டை
பாலக்காடு
தலைச்சேரி
பூந்தமல்லி
திருவள்ளூர்
அரக்கோணம்
ஜோலார்பேட்டை
திருப்பதி

முன்பணம் கட்டக்கூடியவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

பொன்னி லிமிடெட்
111, பவழக்காரத் தெரு,
சென்னை-1.

நம்ப கடனைக் கட்டுகிறதாவது, நம்ப மதிப்பு அதோகதியாகி விடுமே!'' என்று ரோஷம் கொண்டு அடுத்த நாளே இங்கே வந்து பணத்தைக் கட்டிவிட்டு 'பணம் வந்துவிட்டதாக' மாமனுருக்குக் கடிதம் போட்டுவிடும்படியும் சொல்லிவிட்டுப் போனார்.

"அட....நல்ல யோசனை...உம்....கோவிந்தன்?''

"அவரிடம் பணம் வாங்கத்தான் நம்ம பணமே கொஞ்சம் செலவழிந்து போச்சுங்க....இந்த மாதிரி சாதாரணமான வேலைக்கெல்லாம் அவரு மசியவே இல்லீங்க''

"அது....எப்படி?''

"...'எங்கள் கடைக்குப் பணம் பாக்கி கொடுக்க வேண்டியவர்கள் இன்னும் பத்துநாட்களுக்குள் தவறுமல் கொடுத்து விடுமாறு கேட்டுக்கொள்கிறேன். யார்.... யார், எவ்வளவு கொடுக்க வேண்டும் என்பதையும் நாளை இதே பேப்பரில் விளம்பரம் செய்கிறேன்! இப்படி உள்ளூர் பேப்பரில் ஒரு விளம்பரம் செய்தேன். 'பேப்பரில் வேறு நம்ப பெயர், கடன் பாக்கி கொடுக்கவேண்டும் என்று, அடிபட்டால் மானம், மதிப்பு எல்லாம் போய்விடுமே' என்று பயந்துகொண்டு, கோவிந்தன் அன்று மத்தியானமே பணத்தைக் கொடுத்துவிட்டு நாளைய விளம்பரத்தில் அவர் பெயர் வரக்கூடாது என்றும் எச்சரித்துவிட்டுச் சென்றார். எப்படியோ எனக்குப் பணம் வந்து சேர்ந்தது'' என சொல்லி முடித்தார் செட்டியார். "செட்டியார் கைகாரர்தான்'' என்று நினைத்துக் கொண்டே வீடுவந்து சேர்ந்தேன்.

மடமை ஒழிய...!

'' எழில்வேந்தன் ''

பண் : சண்முகப்பிரியா. தாளம் : ஆதி.

எடுப்பு

கடமையைச் செய்யாது காலத்தை வீணுக்கும்
மடமை யொழிய வேண்டாமோ (கடமை)

தொடுப்பு

உடைமையை யுடையராய் உயர்வுற வாழ்வோர்கள்
மிடிமைதனை நீக்கும் மேன்மையைப் புரிந்திடும் (கடமை)

முடிப்பு

அடிமை என்ற நிலையை நாம்
அரசியல் பொருளியல் அனைத்திலுமே
விரைவினில் நீக்கியே வேண்டுவன செய்யும்
துறைதனில் புகுந்தேநற் றொண்டினை ஆற்றிடும் (கடமை)

பொழுது போக்கு

புது வாழ்வு:

எம். கே. தியாகராஜ பாகவதர் தயாரித்து வரும் புது வாழ்வு ஏறத்தாழ முடியும் கட்டத்தில் இருக்கிறதாம். விரைவில் வெளி வரப் போகும் படங்களில் புது வாழ்வும் ஒன்று. சென்னை நியூடோன் ஸ்டுடியோவில் தயாராகும் இப்படத்தை பாகவதரே டைரக்ட் செய்து வருகிறார். நீண்ட நாட்களுக்குப் பிறகு என், எஸ். கிருஷ்ணன் டி. ஏ. மதுரமும் பாகவதருடன் சேர்ந்து நடிக்கும் முதற்படம் புது வாழ்வு ஒன்றுதான். இப்படத்தில் லலிதா, மாதுரிதேவி, குமாரி துளசி, டி. எஸ். பாலையா போன்ற முன்னணி நடிக, நடிகைகளும் நடிக்கின்றனர்.

கூண்டுக்கிளி:

ரேவதியில் படமாக்கப்பட்டு வரும் ஆர். ஆர். பிக்சர்ஸின் கூண்டுக்கிளியை ராமண்ணா டைரக்ட் செய்து வருகிறார். கதைப்போக்கில் புதுமையும், கருத்தில் புரட்சியும் கொண்ட இப்படத்திற்கு விந்தன் வசனங்களை எழுதியிருக்கிறார். திரை உலகப் புகழ் சிவாஜி கணேசன், எம்.ஜி. ராமச்சந்திரன், கே.சாரங்கபாணி, பி. எஸ். சரோஜா முதலியோர் கூண்டுக்கிளியில் நடித்து வருகின்றனர்.

ரத்தக் கண்ணீர்:

பராசக்தியை வெளியிட்டு புகழையும் மக்கள் அன்பையும் பெற்ற நேஷனல் பிக்சர்ஸின் 'ரத்தக் கண்ணீர்' ரேவதி ஸ்டுடியோவில் முடிவடையும் கட்டத்தில் இருக்கிறதாம். நடிகவேள் எம். ஆர். ராதா நடிக்கும் இப்படம் கிருஷ்ணன் பஞ்சு டைரக்ஷனில் வளர்ந்து வருகிறது. ஸ்ரீரஞ்சனி, எம். என். ராஜம் முதலியவர்களும் நடிக்கும் இப்படத்தை ஜூன் இறுதிக்குள் காண முடியுமாம்.

பெண்:

ஏவி. எம்மின் அடுத்து வெளி வரப் போகும் படம் பெண். இதன் திரைக்கதை வசனத்தை ரா. வேங்கடாசலம்எழுதியிருக்கிறார். மேனாவின் மேற்பார்வையில் 'பெண்ணை வனப்புள்ளவளாக மாற்றிய பெருமை டைரக்டர் எம். வி. ராமனையே சார்ந்தது. அஞ்சலி தேவி, திரௌபதி, நாகய்யா, ஜெமினி கணேசன், எஸ். பாலச்சந்தர் முதலியோர் பெண்'ணில் நடிக்கின்றனர். இதன் இந்தி படம் வடநாட்டில் ஏற்கனவே பல மாதங்களாக ஓடிக்கொண்டிருக்கிறது.

கனவு :

அண்மையில் வெளிவரப்போகும் படங்களுடன் கே. ஆர். கேயின் முதல் முயற்சியாக ரேவதியில் தயாரித்து வரும் 'கனவு' என்ற படத்தையும் சேர்த்துக் கொள்ளலாம். இப்படத்தில் வேலைக்காரப் பெண்ணாக லலிதா நடிக்கிருள். பி. வி. கிருஷ்ணன் டைரக்ட் செய்யும் இப்படத்தின் வெற்றிக்கு வி. கே. ராமசாமி, செல்லம், சீனிவாசன், பொள்ளாச்சி கமலம் ஆகியோரும் நடிக்கின்றனர்.

தூக்குத்தூக்கி :

சிவாஜி கணேசன், டி. எஸ். பாலையா, லலிதா, பத்மினி முதலியோர் நடிக்கும் 'தூக்குத்தூக்கி' வெகு வேகமாகத் தயாராகி வருகிறது. ஆர். எம். கிருஷ்ணசாமி டைரக்ட் செய்யும் இப்படம் பிலிம் சென்டரில் அருணா பிக்சர்ஸால் தயாரிக்கப்படுகிறது.

செந்தாமரை :

தோழர் இராம. அரங்கண்ணலின் கதை, வசனங்களால் மெருகேற்றப்பட்ட 'செந்தாமரையை'யை பீமன் டைரக்ட் செய்கிருர். சிவாஜி கணேசன், லலிதா, பத்மினி, எம். கே. ராதா முதலியோர் நடிக்கும் இப்படம் மதராஸ் பிக்சர்ஸின் சொந்தப் படமாகும், இப்படம் நியூடோனில் தயாராகிறது.

புதுயுகம் :

இன்னும் சில காட்சிகள் பிடிக்கப்பட்டதும் 'புதுயுகம்' தயாராகி விடுமாம். புதுயுகத்தின் படப்பிடிப்பு வாஹினியில் நடைபெறுகிறது. ஜி. ராமனுதனின் தயாரிப்பான இப்படத்திற்குக் கதை, வசனம், பாடல்கள் தீட்டியவர், கா. மு. ஷெரீப் என்பவர். இது ஒரு சாயிகானும்ருதாவின் தயாரிப்பு.

ரத்தபாசம் :

டி.கே.எஸ். சகோதரர்கள் நடிக்கும் ஒளவை புரொடக்ஷன்ஸின் ரத்தபாசம் நெப்டியூனில் தயாராகிறது. ஆர். எஸ். மணி டைரக்ட் செய்யும் இப்படம் இரண்டொரு மாதத்தில் வெளியிடப்படுமாம்.

குமாஸ்தா : (தமது நண்பரிடம்) அங்கே நின்றுகொண்டு ஏன் ஐயா தவம் பண்ணுகிறீர்? அந்தச் சனியன் வீட்டுக்குப் போய் இருக்கும்! நாம் ஜாலியா மாட்னிஷோவுக்குப் போகலாம் வாரும்.

மௌனச்சாமி

ராமுலு

○★○

"பாழாய்போன இந்த சாயந்திர வேளைகளில் டவுன் பஸ்ஸில் இடம் கிடைப்பதென்றால், குறுக்கெழுத்துப்போட்டியில் முதற் பரிசு கிடைப்பது போன்றது தான். கிடைத்துவிட்டால் மட்டும் போதாது ஆயிரம் பேர் சரியான விடையனுப்பி, பரிசுத் தொகையைப் பங்கு போட்டது போலாகிவிடும், காரில் ஏறியும் உட்கார இடமில்லாமல் போய் விட்டால்'' என்று முணுமுணுத்துக் கொண்டபடி, ஜங்ஷன் பஸ் ஸ்டாண்டில் ஒரு பெரியவர் நின்று கொண்டிருந்தார்.

நானும் அவர் அருகே காருக்காக நின்று கொண்டிருந்தேன். கோர்ட் கலைந்ததினால் வரும் கூட்டமும், தொழிற்சாலையிலிருந்து வரும் திரளான மக்களும், புதிய திரைப்படம் காணப்புறப்படும் கூட்டமும் பஸ் ஸ்டாப்பில் என்னோடு போட்டிப் போட்டுக் கொண்டு நின்றனர்.

நடந்தே டவுனுக்குப் போய் விடலாம் என்பதுதான் என் ஆசை. இருந்தாலும் பெண்ணைப் பார்க்கப் போகும்போது—அதுவும் படிக்கும் பெண்ணைப் பார்க்கும் போது நடந்து செல்வதற்கு என் மனம் இடந்தரவில்லை. எனவே இன்று எவ்வளவு பெருங் கூட்டமானாலும் காரில் தான் செல்லவேண்டு மென்று முடிவு செய்துவிட்டேன்.

சூட்டும், கோட்டும் ஜம்பமாக மாட்டியிருக்கும் நான், முட்டி மோதிக் கொண்டு பஸ்ஸ ஏறவிரும்பவில்லை. எனவே ஒரு ஓரத்தில் நின்றுகொண்டிருந்தேன். அந்தக் கிழவரும் என் பக்கத்தில் வந்து நின்று கொண்டார். அவர் என்னிடம் பேச ஆரம்பித்தார்.

"ஏன் தம்பி, டவுனுக்குத் தானே''.

"ஆமாம்''.

"எந்த ஸ்டாப்பிலே இறங்கணும்''

"தெப்பகுளம் ஸ்டாண்டு''

"அப்படீண்ணா உனக்கு தெப்ப குளத் தெருதானா''

"இல்லே, எனக்கு ஸ்ரீபுரம்.''

"அதானே கேட்டேன். உன்னே எங்கேயோ பார்த்த ஞாபகம்''

"நான் இப்போ திருச்சியிலே வேலே பார்க்கிறேன். லீவிலே இங்கே வந்தேன். அப்பா, அம்மா எல்லோரும் தெப்பகுளத் தெரு ஆடிட்டர் கோவிந்தசாமி நாயுடு வீட்டுக்கு போயிருக்காங்க. நான் கூட அங்கே தான் போறேன்.''

"அடடே, அப்ப நாயுடு உனக்குச் சொந்தக்காரர்தானா?''

"இல்லே, இனிமேதான் சொந்தக் காரராக மாறணும் ஏனென்றால் அவர் மகள் விஜயாவை எனக்குக் கொடுக்கறதுக்காக எல்லா ஏற்பாடுகளும் நடந்து கொண்டிருக்கிறது. இன்னிக்கி பெண்ணைப் பார்க்கறதுக்காகவே அங்கே போகிறேன்.''

"அவள் படிக்கறதாக அல்லவா சொன்னாங்க.''

"ஆமாம் படிக்கிற பெண்களைக் கட்டிக் கிட்டாதானே

கொஞ்சம் நிம்மதியாயிருக்கலாம்.''

இவ்வாறு நான் அந்தக் கிழவரோடு பேசிக் கொண்டிருக்கும் போது மீனாக்ஷிபுரம் பெண்கள் கல்லூரி முடிந்து, கூட்டம் கூட்டமாகப் பெண்கள் வந்து கொண்டிருந்தனர். அவர்களும் என்னோடு காருக்காக வந்து காத்து நின்றனர்.

ஒரு சிகரெட்டை எடுத்து பற்ற வைத்துக் கொண்டு அங்கு நிற்கும் பெண்களை வரிசையாகப் பார்த்தேன். நரகரீக நாரீமணிகளின் நகைகளும்—விஞ்ஞான உலகத்து நங்கைகளின் உடைகளும் என்னை பிரமிக்கச் செய்தது. அதிலே ஒரு பெண் ஆடையணிந்திருந்தது எனக்கு ஆத்திரத்தை மூட்டியது. அவள் கட்டியிருக்கும் மஸ்லின் சேலை வழியாகத் தெரியக் கூடாத உண்மைகளும் தெளிவாகக் காட்சியளித்தது, அழகான கூந்தலை அல்லல்படுத்தி மடக்கியும் சுருட்டியும் வைத்திருந்தாள். கழுத்திலே ஒரு ''எக்ஸிபிஷன்'' பாசி. அங்கு நின்றவர்களில் அவள் ஒரு வாயாடி என்பதை அவள் பேசும் வெங்கல ஓசைகளிலிருந்து புரிந்து கொள்ளலாம்.

''நாகரீகம் வந்தாலும் வந்தது இந்த மாதிரி பெண்களை நாசமாக்கக் கூடாது'' என்று முணுமுணுத்துக் கொண்டு சிகரெட்டைக் கீழே வீசி எறிந்தேன்.

''ஏன் பிரதர், நெருப்போடு போடறீங்களே யாராவது பேர் பூட்டா (Fare Foot) வந்தா என்ன ஆகும்'' என்று என்னைப் பார்த்துக் கேட்டாள் அந்த நாரீக மங்கை.

> # அறிவிப்பு
>
> சந்தா, ஏஜென்ஸி விபரங்களுக்கும், மணி ஆர்டர், போஸ்டல் ஆர்டர், செக் முதலியவைகள் அனுப்புவதற்கும்,
>
> **பொன்னி லிமிடெட்**
> **111,** பவழக்காரத் தெரு,
> சென்னை—**1.**
>
> என்று குறிப்பிடவும்.

சரிதான், அவள் மாட்டியிருந்த துணிமணிகளிலிருந்து அவளுக்கு மானம் என்பது மட்டும் கிடையாது என்று முடிவு செய்திருந்தேன். ஆனால் இப்பொழுது அவள் என்னிடம் முன் பின் பழக்கமின்றி துணிவாகப் பேசியதிலிருந்து அவளுக்கு அடக்கம் கூட கிடையாது என்று நினைத்துக் கொண்டேன்.

இதற்குள் பஸ் வந்துவிட்டது. கூட்டத்தோடு கூட்டமாய் அவளும் என்னைப் போல் ஆண்களுக்கு மேல் அதிக பலத்தைக் காட்டிவிட்டு பஸ்ஸில் ஏறிக் கொண்டாள் பாவம், அவள் ஏறியும் உட்கார இடமில்லாமல் நின்றுகொண்டிருந்தாள்.

அவள் காலில் மாட்டியிருந்த செருப்பினால் என் கால் பெருவிரல் பெரும் அவஸ்தைக்குள்ளாகி விட்டது.

''ஐய்யோ சிஸ்டர், கால், கால் சிஸ்டர்'' என்று கத்தினேன். ''வெரி சாரி'' என்ற வெறும் வார்த்தையோடு பேசாமல் நின்றுவிட்டாள். சரிதான்

அவளுக்கு மரியாதைகூட கிடை யாதோ என்று நினைத்துக் கொண்டேன்,

இதற்குள். கண்டக்டர் "அம்மா உங்களுக்கு உட்கார இடமில்லையே. இருக்கிறது ஸ்டாண்டிங் சீட்டுதான். கீழே இறங்கி விடுங்க" என்று கூறி அந்தப் பெண்ணை முறைத்தான்.

"ஏன் ஸார், கொஞ்சம் உங்க சீட்டை எனக்கு கொடுக்கறீங்களா" என்று கூறிப் பல்லைக் காட்டினுள். சரிதான், இவளுக்கு அச்சம் என்கிற பண்பே கிடை யாதோ என்று கூறிக்கொண்டே அவளுக்கு இடத்தைக் கொடுத்து விட்டு நான் எழுந்து நின்றேன்.

அவள் அடுக்கி வைத்திருக்கும் புத்தக வரிசையில் காதல், கல் கண்டு, குமுதம், விகடன் முத லாக சோப்பு டப்பா பிளாஸ்டிக் மணிபர்ஸ் இத்தனையும் பார்க் கும் போது, அவள் படிக்கும் "கழுதை" என்று முடிவு செய் தேன்.

பஸ் ஸ்டாண்ட் வந்து பஸ் நின்றதும் நான் கீழே இறங்கி னேன். அந்தப் பெண்கூட அங்குதான் இறங்கிச் சென்று விட்டாள். என் பின்னதாகவே பழைய கிழவரும் கீழே இறங்கி விட்டார்.

"என்ன தம்பி, காரில் ரொம்ப சங்கடப்பட்டு விட்டாயோ" என்று கூறி சிரித்தார் அந்தப் பெரியவர்.

"போங்க தாத்தா. இந்த மாதிரி அச்சம், நாணம் மரியாதை அடக்கம் எல்லாம் மண்ணுக்கற துக்கா பெண்களைப் படிக்க வைக்கறேம். இந்த மாதிரி பெண்ணுக்கு என்னை மாதிரி புருஷன் கிடைக்கணும். நாகரீகத்தை நரம்பிலே இருந்துகூட பிச்சு எடுத்திடமாட்டேன்" என்று நான் கூறிவிட்டுப் போய் விட்டேன்.

* * *

தெப்பகுளத் தெருவில், ஆடிட்டரின் வீட்டில் எனக்கு பிரம்மாத மான உபசரிப்பு. நான் பெண்ணைப் பார்க்கவேண்டும் என்று நாயுடுவிடம் பீடிகையைப் போட்டேன். உடனே அவர் "விஜயா, விஜயா சீக்கிரமா வாம்மா" என்று கத்தினுர்.

"பாருங்க இப்பத்தான் காலேஜிலேயிலிருந்து வந்தா, மேக்கப் பண்ணிட்டு வந்திடுவா. என் விஜயா நல்ல பேச்சாளி. எழுதுவதில் சிறந்தவள். பாட்டிலே முதல் பரிசு இவளுக்குத் தான்" என்று பிரம்மாதமாகப் புகழ்ந்து கொண்டே போனுர் நாயுடு.

இதற்குள் பெண் கையில் காபியோடு வந்து எதிரே நின்றுள். பெண்ணைப் பார்த்த எனக்கு மூச்சே நின்றுவிடுவது போலிருந்தது. என் தலை கிறு கிறுத்தது.

"நீங்களா சிஸ்டர்" என்று நாற்காலியில் சாய்ந்துவிட்டேன்.

"அடடே நீங்களா பிரதர்" என்றுள் பெண் கையிலிருந்த காபியைக் கீழே வைத்துவிட்டு,

"என்னது இப்படி நீங்க. பிரதர் சிஸ்டருங்கிறீங்க" என்று கூறிவிட்டு மயங்கி விழுந்து விட்டார் நாயுடு.

நான் அவரிடம் என்ன சொல் வது. மௌனச்சாமியாக மாறி விட்டேன். பஸ் ஸ்டாண்டி லிருந்து என்னேடு வந்த அந்த நாரீமணியே நாயுடுவின் மகள் விஜயா. *

சுப. இளங்கீரன்

ஒருநாளிரவு

இருள் போர்வையால் மூடுண்டு இருண்டு கிடந்தது உலகம், விண்ணிலே கண் சிமிட்டி விளையாடும் நட்சத்திரங்கள் ஒன்றிரண்டு ஆங்காங்கே சிதறிக் கிடந்தன.

ஊரும், உலகமும், அமைதியாக இருந்ததைப்போன்றே ஆழ் கடலும் அமைதியாக இருந்தது. கலந்திருந்த இருள் பாவாடையைப் போலவே கடல் தண்ணீரும் கருப்பாக யிருந்தது. வண்ண நிலவும், சின்ன விழிகள் போல் தெரியும் விண் மீன்களும் விளையாடித் திரியும் அந்த வான மைதானத்தைப் போல அகன்று விரிந்து கிடந்த கடலிலே தன்னந் தனியாக ஒரு தோணி மிதந்து கொண்டிருந்தது. பார்வைக்கு அது மிதப்பது போலிருந்தாலும் தெற்கு திசையை நோக்கி வீசும் காற்றின் வேகம் உச்சத்திலிருந்ததால், தண்ணீரில் தவழ்ந்து கொண்டிருந்த தோணியின் ஓட்டமும் வேகமாக யிருந்தது.

இலங்கையின் வட பகுதிக் கரையான காங்கேசன் துறையை நோக்கி வந்துகொண்டிருந்த அந்தத் தோணி தமிழ் நாட்டுக் கரையான கோடிக் கரையிலிருந்து புறப்பட்டு ஏறத்தாழ இரண்டு மணி நேரமாகிவிட்டது. இன்னும் ஒரு மணி நேரத்துக்குள்ளாக இலங்கையைப் பிடித்துவிடும்.

புறப்படும்போது யாருக்கும் தெரியாமல் புறப்பட்டது அந்தத் தோணி. அதே போல இலங்கைக் கரையை எட்டும் போது யாருக்கும் தெரியக்கூடாது! ஏனெனில் அது ஒரு 'கள்ளத் தோணி!' ஆம். இந்திய சர்க்காரும், இலங்கை சர்க்காரும் அறியா வண்ணம் சட்டவிரோதமாக இலங்கையில் நுழையத் தீர்மானித்தவர்கள் தான் அந்தத் தோணியில் இருந்தவர்கள். திருட்டுத்தனமாக யாருக்கும் தெரியாமல், அவர்களை ஏற்றிக் கொண்டு இருட்டோடு இருட்டாக புறப்பட்ட அது, ஒரு "கள்ளத் தோணி."

அந்தக் கள்ளத் தோணியில் பன்னிரெண்டு பேர் இருந்தார்கள். அநேகமாக எல்லோரும் இருபத்தைந்திலிருந்து, முப்பது வயதுக்குள்ளாக யிருக்கும் வாலிபர்கள். வாட்ட சாட்டமான உடலைக் கொண்ட பருவமாயினும், வறுமையும், கஷ்டமும்

அவர்களுடைய தோற்றத்தை வாடி உலர்ந்த நிலையில் காட்டிற்று. அவர்களின் முகத்திலே உற்சாகமில்லை. விழிகளிலே ஒருவித ஏக்கம். நெஞ்சு மெதுவாக ஆனால் இடைவிடாது படபடவென்று அடித்துக்கொண்டிருந்தது. ஓரிருவரைத் தவிர மற்றவர்களின் முகத்திலே ஒருவித அச்சத்தின் நிழல் அப்பியிருந்தது; பீதியால் கட்டுண்டவர் போல காணப்பட்டனர்.

அவர்களிலே ஒருவன்—

வாலிபப் பருவத்தின் உச்சியிலே ஏறி நின்ற அவனுக்கு 25 வயதிருக்கும். முறுக்கேறிய உடம்பும் கம்பீரமான தோற்றமும் உள்ளவனாகயிருந்தான். மற்றவர்களின் முகத்திலேயிருந்த அச்சத்தின் நிழல் அவன் முகத்திலே பட்டிருக்கவில்லை. அவனுடைய நெஞ்சும் திகிலினால் "படபட" என்று அடித்துக் கொள்ளவுமில்லை. ஆனால் ஏதோ ஒரு ஆழ்ந்த சிந்தனைக் கடலில் மூழ்கியவனாக, தோணியின் முகப்புப் பக்கத்தில் அமர்ந்திருந்தான். எத்தனை எண்ணங்கள் அவன் இதயத்தில் குவிந்துகொண்டிருந்தனவோ!

கிழக்கிலே விடி வெள்ளி காட்சியளித்துக் கொண்டிருந்தது. காலை புலர்வதற்கு—கதிரவன் புறப்படுவதற்கு இன்னும் சில மணி நேரங்களே இருக்கின்றன.

தோணி வேகமாகச் சென்று கொண்டிருந்தது. இலங்கைக் கரைக்கு இன்னும் ஐந்து மைல்கள் தானிருந்தன.

திடீரென்று எங்கிருந்தோ மோட்டார் சப்தத்தைப் போன்று ஒரு ஒலி கிளம்பிற்று. தோணியிலிருந்த அனைவரும் திடுக்கிட்டுத் திரும்பி சப்தம் வந்த திக்கை பார்த்தனர். இருட்டாக இருந்ததே தவிர ஒன்றையும் காணவில்லை. ஆனால் அந்த சப்தம் வர வர அருகாமையில் கேட்டுக் கொண்டேயிருந்தது.

தோணியிலிருந்த ஒருவன் சொன்னான். "மோட்டார் படகு போலிருக்கு!"

"ஆமாம்....! போலீஸார் தான் வாருங்க....!" என்றான் இன்னொருவன்.

மற்றொருவன், விழிகளைக் கூர்மையாக்கிக் கொண்டு பண்ணியைப் பாய விட்டான்.

"ஆமா... சந்தேகமேயில்லை...! அதோ வருது படகு...! போலீஸார்தான். நிச்சயமாக அவங்க தான்!" என்று கத்தினான் தன்னையும் மறந்து.

எல்லோருடைய உடம்பும் வெட வெடத்தது. பீதியினால் முகம் வெளுத்தது நெஞ்சு படபட என்று வேகமாக அடிக்கத் துவங்கியது.

"இனித்தப்ப முடியாது. அகப்பட்டுட்டோம்!" என்றான் ஒருவன். ஏமாற்றத்தின் பலத்த அடியினால், உடைந்திருந்த அவனுடைய உள்ளத்தை அப்படியே எடுத்துக் காட்டியது. அவனுடைய குரல்.

மற்றவர்கள் ஒன்றுமே சொல்லவில்லை. உதட்டைக் அசைக்காமல் அப்படியே இருந்தார்கள்!

"அக்கரைக்கு இன்னும் இரண்டு மைல்கள் தானிருக்குது, போலீஸின் கைக்கு அகப்படாமல் தப்ப விரும்புகிறவங்க இப்பவே கடல்லே குதிச்சிடுங்க! இரண்டு மைல்கள் தான்! நீங்

தியே போய் விடலாம்!''... என்றான் தோணிக்குச் சொந்தக்காரன்.

ஒருவரும் அசையவில்லை. அச்சத்தின் பலத்த அடியினால், அசந்து போய் அப்படியே உட்கார்ந்து விட்டார்கள்.

தோணிக் குரியவன் எரிச்சலோடு அவர்களைப் பார்த்தான். "இப்படிப் பயந்தா வந்திருக்கவே கூடாது!" —என்றான். அவனுக்கென்ன தெரியும். தன்னைப்போலவே கடல் வாழ்க்கையைக் கொண்டவர்களல்ல. நீந்திப் பயிற்சி பெற்றவர்களுமல்ல அங்கிருந்தவர்கள். பசி பட்டினிக்குப் பயந்து ஓடி வந்த சாதாரண மக்கள் என்பதை அவன் எப்படிச் சிந்திக்க முடியும்?

"இனி அக்கரை ஜெயில்லே கிடக்கவேண்டியது தான்!''— என்றான் தோணிக்குரியவன், பலத்த ஏமாற்றத்துடன்.

இதற்குள் போலீஸாரின் மோட்டார் படகு, அந்தத் தோணியை நெருங்கி விட்டது. மோட்டார் படகிலிருந்து திடீரென்று 'டார்ச்' வெளிச்சம் பாய்ந்தது கள்ளத் தோணியின் பக்கம்.

கால் மணி நேரத்திற்கெல்லாம் கள்ளத் தோணியில் இருந்தவர்கள் எல்லாம் கைது செய்யப் பட்டார்கள், ஆனால்...

அந்த வாலிபன் — சிந்தனை மயக்கத்திலே உணர்வற்று தோணியின் முகப்பிலே உட்கார்ந்திருந்த அந்த 25 வயதுக் காளை எங்கேயோ மறைந்து விட்டான்! அவனைக் காணவில்லை.

கிழக்கு வெளுப்பதற்கு முன் நேரம் குமரியிருட்டு மூடிண்டு கிடந்தது.

அமைதியாகக் கிடந்த கடல் சிறிது சல சலப்புடன் இருந்தது. தவழ்ந்து வரும் அலைகளுக் கிடையே புகுந்து வெளியே வந்து கொண்டிருந்தது ஒரு உருவம். ஆடும் தொட்டிலைப் போலிருந்த அந்த அலைகளுக்கு மேலே குப்புறப் படுத்த வண்ணம் நீந்திக் கொண்டிருந்தது, அந்த உருவம். வண்ணத் தொட்டிலில், குழந்தை யொன்று குப்புறப் படுத்துத் தவழ்வது போலிருந்தது அந்தக் காட்சி!

நீந்திக் கொண்டிருந்த அந்த உருவத்தின் முகத்திலே திடீரென்று ஒரு மகிழ்ச்சிக் குறி வெறித்தது. ஆம், அந்த உருவத்தின் விழிகளுக்குக் கரை காட்சி யளித்தது, கொஞ்ச தூரத்தில்.

குவலயத்தை மூடியிருந்த குமரி யிருட்டு, தனது கருப்புப் போர்வையை மெல்ல விலகிக் கொண்டிருந்தது. இருளும் மெல்ல வெளுக்கத் துவங்கியது எங்கேயோ வெகுதூரத்தில் நாய்கள் குறைப்பதும் சாமக் கோழி கூவுவதும் கேட்டது.

கட்டுமரம் போல் கடலில் நீந்திக்கொண்டிருந்த அந்த உருவம் கரையை எட்டிவிட்டது. களைப்பின் மிகுதியால் அந்த மனித உருவத்தின் மார்பு மேலும் கீழும் ஏறி இறங்கிக் கொண்டிருந்தது. மேல் மூச்சுக் கீழ் மூச்சு வாங்கிக் கொண்டிருக்க தன் விழிகளை அங்கு மிங்கும் சுழற்றினான். ஒரு சந்தடியுமின்றிக் கிடந்தது அந்தப் பகுதி. வெண் மணற் பரப்பில், ஊன்றியிருந்த தனது இரும்பு போன்ற நீண்ட கால்

களைப் பெயர்த்தெடுத்தான். மறு வினாடி கரையை அடுத்திருந்த வீதியைக் கடந்து அருகேயிருந்த பனைமரக் காட்டுக்குள் நுழைந் தான்.

நுழைந்தவன் நடந்து செல்ல வில்லை. பனைமரங்கள் சூழ்ந்து கிடந்த அந்தப் பகுதியில், ஓடிக் கொண்டிருந்தான். தெருவி லிருந்து ஒரு மோட்டாரின் ஹார்ன் சப்தம் அவன் காதில் விழுந்தது. அவ் வளவுதான். அவ னுடைய ஓட்டத் தின் வேகம் இன்னும் அதி கரித்தது.

கற் சுவரால் கட்டப்பட்டிருந் தாலும், பனை ஓலைகளால் வேயப் பட் டிருந்த ஒரு வீட் டின் முன் னால் வந்து நின்றான். அப்போ தும் மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கிக் கொண்டிருந்தது அவனுக்கு. பர பரப்புடன் அங்குமிங்கும் பார்த் தான். இதே சமயத்தில் 'யாரது' என்று கேட்டுக்கொண்டே முப் பது வயது மதிக்கத்தக்க ஒருவர் அவன் அருகில் வந்தார்.

அவன் மிரள மிரள அவரைப் பார்த்தான்.

“யாரப்பா என்ன ஒரு மாதிரி நிற்கிறாய்?”–என்று கேட்டுவிட்டு கையிலிருந்த வேப்பங்குச்சியால் பற்களைத் துலக்கினார்.

“நான்......நா அ.......!” என்று நாக்குழறினான். அவன்.

அந்த மனிதர் அவனை ஒரு கணம் ஊடுருவிப் பார்த்தார். அவன் உடுத்தியிருந்த நாலு முழ வேட்டி, தோளில் கிடந்த துண்டு இரண்டும் அவருடைய சிந்தனை யைக் கிளறின.

“நீ......?” என்று அவனை நோக்கி வினாவை வீசி முடி வதற்குள்....

“சாமி, என்னைப் புடிச்சுக் குடுத்துடாதீங்க! உங்களுக்குப்

புண்ய முண்டுங்க! நான் அக்கரையிலிருந்து தோணியிலே வர்ரேனுங்க!'' என்றான் தடுமாற்றத்துடன்.

"ஓஹோ......அப்படியா நான் நினைத்தேன். நீ கள்ளத் தோணியா....?'' என்றார் அந்த மனிதர்.

'கள்ளத்தோணி' என்றதும் அந்த இளைஞனின் உள்ளத்தில் 'சுரீர்' என்றது. சிறிது ஆத்திரம் கூட குமுறச் செய்தது ஆனால் அடக்கிக் கொண்டான்.



"இந்தா இங்கே நிற்காதே. போலீஸ்காரர்கள் கண்டால் என்னையும் பிடித்துக் கொண்டு போய்விடுவார்கள்! எங்கேயாவது ஓடு!'' என்றார் அந்த மனிதர்.

"ஐயா......எனக்கு ரொம்பக் களைப்பா இருக்குது கரைக்கு இரண்டு மைல் தூரத்திலேயே போலீஸார் மோட்டார் படகிலே வந்து என்னுடன் வந்தவர்களை கைதுசெய்துட்டாங்கோ. அவங்க தோணியை நெருங்கு முன்னமே நான் கடல்லே குதிச்சு இரண்டு மைல்வரை நீந்தி இக்கரை சேர்ந்தேன். சல்லிக்காசுகூட இல்லை. வேட்டி நனைந்து விட்டது. இந்த நிலைமையிலே நான் தெருப் பக்கம் போனா சந்தேகப்படுவாங்க. இந்த இடமும் புதுசு! கொஞ்ச நேரம், இங்கேயே இருந்து இந்த வேட்டியை உலர விட்டப்புறம் நான் போகிறேன். அதுவரையும் என்னைக் காட்டிக் கொடுக்காமல் இருங்கள்!''



களைப்போடு களைப்பாக இத்தனையையும் ஒரே மூச்சில் சொல்லிவிட்டு, கெஞ்சும் பாவனையுடன் அவரைப் பார்த்தான்.

அந்த மனிதரின் இதயத்தில் இரக்க நீர் சுரந்தது. ஒரு பெருமூச்சுடன், பல் துலக்கும் குச்சியை வீசினார். பிறகு சற்றுத் தூரத்திலிருந்த கிணற்றுக்குச் சென்று, கால் முகங்களைக் கழுவிக்கொண்டு, மீண்டும் அந்த வாலிபனிடம் வந்தார். அப்போது அந்த வாலிபன் சோர்ந்து போய் தரையில் உட்கார்ந்திருந்தான்.

"ஏன் இப்படித் திருட்டுத்தனமாக வரவேணும்? பிறகு ஏன் பயந்து சாகவேணும்?" என்ருர் அவர்.

அவன் விழிகளில் கண்ணீர் கரைகட்ட அந்த மனிதரைப் பார்த்தான். பிறகு. என்ன செய்யர துங்க......வர வேண்டியிருக்குது!" என்ருன்.

அவர் ஒன்றும் சொல்லவில்லை. சில விநாடிகள் மௌனமாக இருந்துவிட்டு, "சரி உள்ளே வா" என்று கூறிக் கொண்டே வீட்டுக்குள் நுழைந்தரர். அவனும்பின் தொடர்ந்தான்.

கொடியில் கிடந்த ஒரு வேட்டி ஒன்றை எடுத்து அவனிடம் கொடுத்து, "இதை உடுத்திக் கொண்டு, உன் வேட்டியையும். துண்டையும், காயப்போடு!" என்ருர்.

அவன் அப்படியே செய்தான். அந்த மனிதர் "அன்னம்மா!" என்று தன் மனைவியை அழைத்தார். அந்த அம்மா வந்ததும் இரண்டு கிளாஸில் காப்பி கொண்டுவா!"—என்ருர். அந்தப் பெண், தோணியில் வந்தவனை ஒரு கணம் ஊடுருவிப் பார்த்துவிட்டு உள்ளே போனுள்.

ஏன் தம்பி, இப்படித் திருட்டுத்தனமாய் வந்துவிட்டாயே, போலீஸ்காரர்கள் உன்னைச் சும்மா விடமாட்டார்களே....... இங்கேயெல்லாம் உன்னைப் போன்று கள்ளத் தோணியில் வருகிறவர்களைக் கழுகுக் கண்ணோடு தேடுகிருர்கள்!....ம்....அதிருக்கட்டும்...ஏன் தம்பி, நீ கடலில் குதித்தாயே, செத்தால் என்ன செய்வது....? வாழும் வயசாச்சே...! ஏன் இப்படி உயிரை வெறுத்து வரவேணும்?....என்று ஏதேதோ பேசத் துவங்கினர்.

"நான் இங்கே வராவிட்டால் என் வாழ்க்கையே போயிடும் என்ருன் அந்த இளைஞன்.

"அந்த அளவுக்கு உங்க ஊரிலே பஞ்சமா?" என்று ஆச்சர்யத்துடன் கேட்டார் அந்த மனிதர்.

"பஞ்சமும். வறுமையும் இருக்கத்தான் செய்யுது, நான் அதற்காக வரவில்லை. என்னுடைய காதலியின் உயிரைக் காப்பாற்ற வந்தேன்!" என்ருன் சிறிது உணர்ச்சிப் பெருக்குடன்.

"காதலியைக் காப்பாற்றவா ....எனக்கு விளங்கவில்லையே நீ சொல்வது?" என்ருர் வியப்புடன்!

இதற்குள் அவருடைய மனைவி இரண்டு கிளாஸ்களில் காப்பி கொண்டுவந்து கொடுத்துவிட்டு, ஒருபக்கமாகப் போய் அமர்ந்தாள்.

அந்த வாலிபன் ஒரே மூச்சில் காப்பியைக் குடித்துவிட்டு, 'உங்களுக்கு ஆச்சர்யமாகத்தான் இருக்கும். நான் இலங்கைக்குப் புதுசல்ல. ஐந்து வருஷங்களுக்கு முன்பு இந்த நாட்டுக்கு வந்து நாவிலப்பிட்டியா என்ற ஊரில் சில்லறை வியாபாரம் செய்து கொண்டிருந்தேன். இந்தச் சமயத்தில் எனக்கும் ஒரு சிங்களப் பெண்ணுக்கு மிடையில் காதல் பிறந்தது, நாட்கள் தேய, எங்கள் காதல் வளர்ந்தது. திடீரென்று என் அம்மாவுக்குச் சுகமில்லையென்று தபால் வந்தது. சாதாரணமான சுகவீனமாகயிருந்தால், நான் போயிருக்க மாட்டேன். ஆனல் மரணநோய் அது! ஆகவே சாகப்போகும்

என் அம்மாவை எப்படியாவது பார்க்கவேண்டுமென்று துடித்தேன். ஆனல் இந்த அரசாங்கத்தின் பாழாய்ப்போன சட்டம் போனல், திரும்பி வரக்கூடாது என்று சொல்லிற்று. என் மனம் பெரிய போராட்டத்தில் குதித்தது. நான் என் சொந்த ஊருக்குப் போகாமல் இந்த நாட்டிலேயே இருக்கத் தீர்மானித்து விட்டேன். ஆனல் என் தாயை சாகும் தறுவாயிலாவது ஒரு முறை பார்க்க வேண்டுமென்ற ஆவல் பொங்கிநின்றது.போனல் வரமுடியாது. வராவிட்டால், இங்குள்ள எனது காதலியை இழக்க வேண்டிவரும். இங்கேயேயிருந்து விட்டால் மரணத் தறுவாயில் கூட என்னைப் பெற்று வளர்த்துச் சீராட்டிப் பாராட்டி வளர்த்த என் அருமை தாயைப் பார்க்க முடியாது. ஆகவே, அம்மாவா, காதலியா, என்ற பிரச்னை எழுந்தது. கடைசியாக முதலில் ஊருக்குப்போய் அம்மாவைப் பார்த்துவிட்டுப் பிறகு எப்படியாவது இங்கே வர முயற்சிப்போம் என்று எண்ணி ஊருக்குப் போனேன். அங்கே சென்ற சில நாட்களுக்கெல்லாம் என் தாய் இறந்துவிட்டாள். இனி நான் ஏன் அங்கு நிற்க வேண்டும்? இலங்கைக்குத் திரும்பத் தீர்மானித்தேன். ஆனல் சர்க்கார் 'விஸா' தர மறுத்துவிட்டார்கள். என்ன செய்வதென்றறியாது நான் திகைத்தேன். இந்த சமயத்தில் என் காதலியிடமிருந்து கடிதம் வந்தது. அதில் தனக்குப் பெற்ருேர் கலியாணம் செய்து வைக்கத் தீர்மானித்திருப்பதாகவும் நான் உடனே வந்து தன்னைச் சந்திக்காவிட்டால், தற்கொலை செய்யப் போவதாகவும் எழுதியிருந்தாள். கலியாணத்திற்கு இன்னும் பதினைந்து நாட்கள் தான் இருக்கின்றன. இதற்குள் நான் சந்திக்கா விட்டால் அவள் வேருெருவனுக்கு மனைவியாக்கப்படுவாள். இதை அவள் மனம் தாங்காது. உடனே தற்கொலை செய்து கொள்வாள் ஆகவே அவளை உடனே சந்திப்பதற்காகத்தான் கள்ளத் தோணியில் வந்தேன்.

அவனுடைய காதல் கதையை மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்த அந்த மனிதருக்கு அவனைப் பார்க்கப் பரிதாபமாகயிருந்தது.

" உன்னைப் போலீஸ்காரன்கள் பிடித்துவிட்டால் என்ன செய்வாய்?'' என்று கேட்டார்.

" அவர்கள் கையில் சிக்கமாட்டேன்!'' — என்று உறுதியுடன் சொன்னன் அவன்.

" சரி, நீ எப்படி நாவலப்பிட்டியாவிற்குப் போகப் போகிருய்?'' என்று கேட்டார் அவர். அதுதான் யோசனையாக இருக்கிறது. முப்பது ரூபாய் வைத்திருந்தேன். அதுவும் கடலில் விழுந்துவிட்டது என்ருன் அவன்.

அந்த மனிதர் ஒன்றும் பேசவில்லை. நீண்ட மௌனத்திற்குப் பிறகு, அந்த வாலிபனின் உதடுகளைப் பிளந்துகொண்டு வந்தன வார்த்தைகள்.

" நீங்கள் செய்த இந்த உதவிக்கு நான் என்றும் கடமைப்பட்டவன். ஆனல், நாவிலப்பட்டியாவுக்குப்போக ஒரு இருபது ரூபாயாவது வேண்டும். தயவுசெய்து நீங்கள் எனக்கு ஒரு உதவி செய்யவேண்டும். என்னிடம்

இருக்கும் இந்த மோதிரத்தை எடுத்துக்கொண்டு இருபது ரூபாய் தரவேண்டும்!" என்று சொல்லிக்கொண்டே விரலில் கிடந்த மோதிரத்தைக் கழற்றிக் கொடுத்தான்.

அந்த மனிதர் தீவிரமாகச் சிரித்தார். தான்செய்த உதவி கள் சட்டவிரோதமாக யிருந்தாலும், மனிதப் பண்புக்கு, மனச் சாட்சிக்கு விரோதமானதல்ல. ஒருவனுடைய காதல் பிரச்னை, அவனுடைய வாழ்க்கைப்பிரச்னை அதற்கு நான் என்னுலியன்ற உதவியைச் செய்யத்தான் வேண்டும்! என்று எண்ணினர். எனவே அவன் கேட்டபடி இருபது ரூபாய் கொடுத்து மோதிரத்தை வாங்கிக் கொண்டார்.

* * *

அன்று காலை நாவலப்பிட்டியாவில் வந்து இறங்கியதும் தன்னுடைய பழைய நண்பர்களைச் சந்திப்பதற்காக வீதியிலே நடந்து கொண்டிருந்தான் அந்த வாலிபன்.

வீதியிலே சென்றுகொண்டிருந்த அவனை திடீரென்று ஒரு இரும்புக் கரம் பற்றியது. திடுக்கிட்டுத் திரும்பினன். அவன் முன்னே ஒரு போலீஸாரும், சி. ஐ. டி. ஒருவனும் நின்றுகொண்டிருந்தார்கள். அப்படியே சிலையாகி விட்டான். சுருக்கமாகச் சொன்னல், குறுக்கு விசாரணைகளும், கேள்விகளும் அவர்களிடமிருந்து புறப்பட்டன. அதிலிருந்து, அவன் 'கள்ளத் தோணி' என்பது ஊர்ஜிதமாகி விட்டது. கொஞ்ச நேரத்திற்கெல்லாம், போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போகப்பட்டான்.

போலீஸ் ஸ்டேஷனில் பன்னிரெண்டு நாட்கள்வரை காவலில் வைக்கப்பட்டு, பதின்மூன்ரும் நாள் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டான் அந்த வாலிபன். அவன் 'கள்ளத் தோணி' என்பதை போலீஸார் நிரூபித்தனர். உடனே அவனை நாடு கடத்தும்படி நீதிபதி உத்தரவு பிறப்பித்தார்.

மறுநாள் தலைமன்னர் காவல் முகாமுக்குக் கொண்டு செல்லப் படுவதற்காக, மீண்டும் போலீஸ் லாக்கப்பில் வைக்கப்பட்டான். அன்று அவன் போலீஸ் ஸ்டேஷனில் சிறை வைக்கப்பட்டிருந்த பொழுது ஒரு திடுக்கிடும் செய்தியைக் கேள்விப்பட்டான்.

"மிஸ்ஸியா என்ற ஒரு சிங்களப் பெண் திராவகத்தைக் குடித்துத் தற்கொலை செய்துகொண்டாள். அவளுக்கு மறுநாள் திருமணம் நடக்க இருந்தது, அந்தத் திருமணம் அவளுக்குச் சம்மதமில்லை. அவள் வேருெரு இந்தியத் தமிழனைக் காதலித்திருந்தாளாம், அவன் இப்போது ஊரில் இருக்கிறனம். அவனுக்கு லெட்டர் எழுதியிருந்தாளாம் வரும்படி. அவனை இதுவரை எதிர் பார்த்திருந்தாள். அவன் வரவில்லை. உடனே தற்கொலை செய்துகொண்டாள்!"

போலீஸாரின் சம்பாஷணையிலிருந்து மேற்படி செய்தியைச் சுருக்கமாகத் தெரிந்துகொண்டான் அவன். தற்கொலைசெய்து கொண்டவள் தன்னுடைய காதலியான மிஸ்ஸியாதான் என்று தெரிந்ததும், அவனுடைய நெஞ்சு துடிப்பே நின்றுவிடும் போலிருந்தது. மறு விநாடி, தன்னையறியாமலே "மிஸ்ஸியாவா.......? என்று கூவினன், மறுகணம் அவனுடைய இதயத் துடிப்பு உண்மையாகவே நின்றுவிட்டது. பிணமாகக் கீழே சாய்ந்தான்.

*

மதமும் மனிதனும்

அ. சுப்பிரமணியன்..

ஆதியிலே மனிதன் தோன்றினான். அன்று ஆடையில்லை அலங்கரிப்பு இல்லை—ஆடம்பர வாழ்க்கையில்லை. அநாகரீகம் அது என்று அறியுமளவுக்கு நாகரீக அறிவு இல்லை. குகையிலே வாழ்ந்தான்—கோட்பாடு இல்லை. குடும்பமாக வாழத் தெரியவில்லை—கொள்கையும் இல்லை. ஆனால் வரவர அவன் தன் வாழ்வுக்குத் தேவையானவை பல இருப்பதாக உணர்ந்தான். ஒவ்வொன்றாக அதைத் தேடிக்கொண்டான். அவனைத் தெரிந்தும் தெரியாமலும், தேவை என்ற போர்வையிலே தீய கருத்துக்களும் தூய கருத்துக்களும் உலவத் தொடங்கிவிட்டது. அந்த வகையிலே, நாளடைவில் அவன் நடைமுறையில் மதத்தை அணைத்துக்கொண்டான் நல்ல கருத்துக்களோடு; நச்சுக் கருத்துக்களோடு.

மதம், மாந்தர்க்கு வகையான வாழ்வு காட்டும் வழிகாட்டியாக அமையும் என்று கண்டான். சிதறிக்கிடக்கும் சமுதாயத்திலே சீரான பாதை அமைக்கும் என்று நம்பினான். ஆனால் அது நினைத்தது வேறு, நிகழ்ந்தது வேறு என்று எண்ணுமளவுக்கு அதன் நிகழ்ச்சிகள் நீண்டுகொண்டு வருகின்றன.

ஒற்றுமைப்படுத்த வேண்டிய மதம் ஓராயிரம் பிளவுகளைச் செய்திருக்கிறது. மடமையிலிருந்து மக்களை மீட்கவேண்டிய மதம், அதன் அடிமைகள் என்னுமளவிற்கு அவர்களை ஆக்கிவிட்டிருக்கிறது. சிந்து பாடச் செய்திருக்க வேண்டிய மதம் அவர்களை நொந்துபடச் செய்திருக்கிறது.

இவ்வளவும் மதம் செய்தது—செய்கிறது—செய்யும். இல்லை மதம் செய்யச் சொல்லவில்லை. மதம் என்ற ஆசனத்திலமர்ந்து, மடமைக் கருத்துக்கள் என்ற மயக்கு மொழிகளால் மக்களின் அறிவு என்ற அரிய பொருளைக் கவர்ந்து, சுகம் என்ற சொத்து காணத் துடித்த தீயவர்கள், துரோகிகள், அந்த உணர்ச்சி உள்ளத்திலே ஊறியிருந்தவர்கள் செய்தார்கள்—செய்யக் காரணமாயிருந்தார்கள்.

அறிவுக்குத் தடை அமைத்த மடமைத் தளையை உடைத்தெறிந்து விட்டு வெளிவர முயன்றவர்களை, மற்றவர்களையும் வருவிக்க முயற்சித்தவர்களை இந்த மதம் துடிக்க வைத்தது—தொல்லைக்குள்ளாக்கியது-துப்பாக்கிக் குண்டுகளிடையே துவளவைத்தது. அது மட்டுமா? தண்டனை அளித்தது; தணலில் இட்டது.

பதினெட்டாம் நூற்றுண்டிலே 'வான்ஹோல்பாக்','புயூர்பாக்' போன்ற பெரியோர்கள் மதத்திலே புதைந்துள்ள ஆபாசத்தை எடுத்துக்கூறி கண்டித்தார்கள். அவர்களுக்குத் தண்டனை அளித்தது மதம். பகுத்தறிவைப் பரவச்செய்த 'விக்ளிப்பை' தொல்லைக்குள்ளாக்கியது இந்த மதம். மதத்திலே சீர்திருத்தம் காண முயன்றவர்களைச் செந்தீயிலிட்டுப் பொசுக்கியது இந்த மதம்.

தகாதவை நடக்காதவாறு தடுக்கவில்லை இந்த மதம். நடப்பதற்கு நல்லதொரு திரையாகப் பயன்பட்டது. மூன்றும் குலோத்துங்கன் காலத்தில் நாட்டிலே பெரும் பஞ்சம் ஏற்பட்டது. பெண்களை வறுமையால் மடத்திற்கும், கோயிலுக்கும் விற்றனர். கஞ்சியின்றிக் கதறிய அப்பஞ்சைகளின் நெஞ்சம் குளிர வைக்கவில்லை இந்த மதம், அஞ்சித் துடித்த அவர்களிடம் கொடுமையால் கொஞ்சிக் குலாவியது.



ஜோசியர்: இன்றைக்கு உங்களிடம் யாரோ ஒருவர் ஏமாறப் போகிறுர்!

வந்தவர்: யாரோ என்ன? நீங்கள் தான் என்னிடம் ஏமாறப் போகிறீர்!

இரண்டாம் குலோத்துங்கன் போன்ற சிவ பக்தர்கள் வாரி யளித்த செல்வத்தைச் சேர்த்து வைத்திருந்த மதஸ்தாபனம் கஷ்டப்பட்டவர்களைக் காப்பாற்ற முயலவில்லை. கன்னியர்களை விலைக்கு வாங்க முன் வந்தது.

திருஞான சம்பந்தர் எண்ணுயிரம் சமணர்களைக் கழுவிலேற்றக் காரணமாயிருந்தது மதம். 'நாளந்தா' பல்கலைக் கழகத்தை தீயிட்டுக் கொளுத்தியது மதம்.

இயேசுவுக்குச் சிலுவையை அளித்து இதயம் குளிர்ந்த மதம், விடுதலை வீரன் லிங்கனை ஒழித்து வெற்றிப் புன்னகையிடும் மதம், புத்தரைப் பிணமாகக் கண்டு பூரிப்புக்கொண்ட மதம், வள்ளலாரை வானிலே ஜோதியாகக் கண்டு வளைவுபடாத மதம், காந்தியாருக்குக் கல்லறை கட்டிக் களிப்புக்கொண்ட மதம் இனியும் நம்மைத் தொடருகிறது, நன்மைக்கு அதில் இடமில்லை என்று நாம் கூறும் அளவிற்கு.

ஆகவே நாம் தீர யோசிக்க வேண்டும். மனிதனுக்காகத் தோன்றிய மதம், இன்று மதத்திற்கு மனிதன் என்ற நிலைமைக்கு வந்துவிட்டதை உணர வேண்டும். தெளிந்து இத் திருவிடச் சோலையிலே நாம் தீந்தமிழ்ப் பண்பாடி, திருவள்ளுவர் கூறும் வாழ்வுநெறியுணர்ந்து திருந்திய நல்வாழ்வு காண முற்படுவோமாக.

*

வாழ்வும் சாவும்

நா. பாண்டுரங்கன்

வானவீதியில் எண்ணித் தொலையா அரிசிமாப்புள்ளிகளை மட்டுமே இட்டுவிட்டு அழகிய கோலம் போட்டுவிட்டதாக அகமகிழ்ந்து ஆனந்தத்துடன்நகர்ந்து கொண்டிருந்தாள் அந்தச் சிறுமி. ஆமாம், அவள் ஒரு சிறுமிதான். அந்தச் சிறுமியின் பெயர் அழகு நிலா!

கீழே— நிலவுலகத்தில், நெருங்கிய மரங்களடர்ந்த காட்டில் அடர்ந்த புதரொன்றில் நீளமான ஒரு வரிப்புலி கிடந்தது. நான்கு நாட்களாக அது நல்ல பட்டினியில் இருந்து வந்தது. காட்டையே அலசிப் பார்த்தும் அதற்கு இரை கிடைக்கவேயில்லை. நல்ல எருதோ வெள்ளைப் பசுவோ கிடைப்பது இருக்கட்டும், சிறுமான்! அதுகூட வேண்டாம் ஒரு குறுமுயல்! ஏதாவது ஒன்றாவது இரையாகக் கிடைத்திருக்கக்கூடாதா? அது தான் இல்லை. பசி வளர்ந்து வருகிறது அதற்கு. வாலைச் சுழற்றிச் சுழற்றித் தரையில் அடிப்பதும், முன்னங்காலால் நிலத்தை அறைவதும், பல்லையிளிப்பதும், முகத்தை ஆட்டி உறுமுவதும் இவ்வாறாகப் புலி புதரில் கிடந்தது. இரண்டு பெரிய மாணிக்கக் கற்களைப் போல்—சிவந்த கண்ணாடி பளிங்குகளைப்போல் — எரியும் தீச்சுடர்கள் போல்தெரியும் தன் விழிகளால் வரிப்புலி வானத்தை வெறித்துப் பார்த்தது. நிலவை ஒட்டி ஒரு கருமேகத்திரை தொங்கிக்கொண்டிருந்தது. நட்சத்திரங்கள் அவ்வளவும் நகைத்துக் கொண்டிருந்தன. பரவிக்கிடக்கும் அவ்வளவும் நட்சத்திரங்களல்ல, பரவி மேய்ந்துகொண்டிருக்கும் பால் நிறப் பசுக்களே அவை! அது நிலா அல்ல, கருப்புக் கம்பளிக்குள்ளே உடலைப் புதைத்துக்கொண்டு பசுக்களைக் காவல் புரியும் மாட்டுக்காரச் சிறுவனின் பால்வடியும் முகம் அது! இப்படி எண்ணியிருக்க வேண்டும் புலி, இல்லாவிட்டால் வானத்தையே அது வெறித்து வெறித்து நோக்கிக் கொண்டிருப்பானேன்? என்னைப் படைத்து என் வயிற்றில் பசியையும் படைத்து என் முன் புள்ளி மானையோ வெள்ளைப் பசுவையோ தென்படாமல் செய்துவிட்ட அவன் — அவன் இப்போது கண் முன் பட்டால் பாய்ந்து விழுந்து அவனை......... புலியின் கோபம் அளவு மீறிச் சென்றிருக்கவேண்டும். இல்லாவிட்டால் காடே கிடுகிடுவென்று நடுங்கும்படி அது அப்படி உறுமுவானேன்?...,......

காட்டிலேயே வேறொரு இடத்தில் — குன்றின்மீது ஒரு துறவி உட்கார்ந்திருந்தார். கண் மூடிமோன நிலையில் இருக்கும் புத்தர் படத்தை அவர் கண் மூடாது அவர் அடிக்கடி பார்த்துப் பழகி யிருக்கவேண்டும். இல்லாவிட்டால் புத்தரைப் போலவே 'போஸ்' கொடுத்து அவர் அப்படி உட்கார்ந்திருக்க முடியுமா? அவருக்கு எதிரே ஒரு சீடன் கைகட்டி வாய்பொத்தி பயபக்தி

யால் வளைந்த முதுகுடன் நின்று கொண்டிருந்தான். குரு இல்லாத போது ஆச்சர்யக் குறியாக நிற்கும் அவன் அப்போது கேள்விக் குறிபோல் உடலை வளைத்து நின்று கொண்டிருந்தான். சீடனின் விழிகள் திறந்தபடி இருந்தன. குருவின் இமைகள் மூடியபடியே இருந்தன. தாமரை மொட்டுக்களின் எழில் அவர் விழிகளில் தங்கியிருந்தது. தன் உள்ளத்தில் அலைமோதிக் கொண்டிருந்த ஐயத்தைத் தீர்த்து, அங்கே அமைதியைச் சிலையாக்கி நிறுத்த, தக்க தருணத்தை மிக்க ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த அந்த நல்ல சீடன், தன் ஐயத்தை மெல்லக் கேட்டான் குருவைப்பார்த்து.

"குருநாதா! உலகில் சாவு வெற்றியடைகிறதா? வாழ்வு வெற்றியடைகிறதா?" சீடன் கேட்டான். குரு சிந்தித்தார். அவர் இதழ்கள் விரிந்து ஒரு புன்னகையைச் சிந்தின. மூடிய அவர் இமைகளில் ரோஜா மொட்டுக்களின் அழகு கூடியிருந்தது.

"குழந்தாய்! உன்னைச் சுற்றிலும் என்ன பார்க்கிறாய்? கூறு!" அமைதியாகக் கேட்டார் குரு. அதே அமைதியுடன் விழிகளைச் சுழற்றினான் சீடன், தன்னைச் சுற்றிலும்! எங்கிருந்தோ வந்து பரவி மேய்ந்து கொண்டிருந்தன பல மான்கள். குன்றிலிருந்த சீடனுக்கு நன்றாகத் தெரிந்தது இந்தக் காட்சி. பெரிய மலை அமைதியுடன் சொரியும் சிறிய அருவியைப்போல சீடனின் நாவிலிருந்து சொற்கள் வெளிவந்தன.

"நிலவொளி! புல்வெளி!—நிர்ச்சிந்தையாய்ப் புள்ளிமான்கள் மேய்கின்றன குருநாதா!"

"புள்ளிமானல்ல குழந்தாய்—அதுதான் வாழ்வு! சாவு எது தெரியுமா? புலிதான் சாவு! புள்ளிமான் எங்கே இருக்கிறது தெரியுமா? காட்டில்! புலி எங்கே இருக்கிறது தெரியுமா? அதே காட்டில்தான்! புலிதான் காட்டில் இருக்கிறதே என்று பயந்து புள்ளிமான் காட்டைவிட்டு நாட்டுக்கா ஓடிவிடுகிறது? இல்லை—இல்லை! முக்காலும் இல்லை! வாழ்வின் தைரியத்தைப் பார் குழந்தாய், பார். பார்த்து ரஸி! ரஸி!"

"புலிதான் காட்டிலிருக்கிறதே என்று பயந்து புள்ளிமான் காட்டை விட்டு நாட்டுக்கு ஓடுவதில்லை குருநாதா?"

"அது ஏன் தெரியுமா குழந்தாய் உனக்கு?"

"புலியைவிடக் கொடுமையான மனிதர்களல்லவோ வாழ்கிறார்கள் நாட்டில்! பட்டுப்பூச்சி பறப்பதைக் கண்டு பயந்து கொட்டும் குளவியிடம் அடைக்கலம் புகுபவன் முட்டாள் என்பதை எட்டு முறைகளுக்குமேல் எனக்கு ஓதியிருக்கிறீர்கள் குருநாதா!" சீடன் சொன்னான். குரு என்ன சிந்தித்தார் என்று தெரியவில்லை. சிதறிக்கிடந்த நட்சத்திரங்கள் சிரித்துக் கொண்டே இருந்தன. மேகங்களின் மேலே வேகமாக ஓடிக் கொண்டிருந்தது மோகன நிலா. ஐயோ என்று அலறினான் சீடன். புதரிலிருந்து வெளிவந்த புலி மேய்ந்து கொண்டிருந்த ஒரு மானின்மீது பாய்ந்தது. மற்ற மான்கள் அவ்வளவும் ஓடி மறைந்தன. புலியின் கொடுவாள் பற்கள் மானின் கழுத்தில் பதிவதற்கு ஒரு வினாடியே இருந்தது. 'டுமில்—டுமில்—டுமில்' என்று

துப்பாக்கி வெடியோசைகள் தொடர்ந்து கேட்டன. பிணமாக வீழ்ந்தது புலி. தப்பி ஓடி மறைந்தது மான். தாழ்ந்த மரக் கிளையிலிருந்து நாலைந்து வேட்டைக்காரர்கள் துப்பாக்கியும் கையுமாகக் கீழே குதித்தார்கள்.

"என்ன நடந்தது குழந்தாய்?"- குரு கேட்டார். மூடியபடியே அவர் இமைகள் இன்னும் இருந்தன. செவ்வல்லி மொட்டுக்களின் அழகு அவர் இமைகளில் பட்டுத் தெறித்தது. சீடன் பதில் சொன்னான்.

"கொல்ல வந்த புலி கொல்லப்பட்டது. மான் தப்பிவிட்டது குருநாதா!"

"வாழ்வு வெற்றியடைந்ததைக் கண்ணால் கண்டாயல்லவா? குழந்தாய்! உன் கேள்விக்கு விடை கிடைத்திருக்குமே!".

"இன்னொரு வினா கிடைத்துவிட்டது குருநாதா?"

"என்ன?"

"நடமாடும் புலி என்பது என்ன குருநாதா?"

"வாழ்கிற சாவு என்று அர்த்தம் குழந்தாய்!"

"வாழ்வு வெற்றியடைகிறதா? சாவு வெற்றியடைகிறதா? என்பதே கேள்வி குருநாதா!"

"என்ன?"

"புலிக்கு உயிர் உண்டு அல்லவா, குருநாதா?"

"உண்டு குழந்தாய் உண்டு புலிக்கு உயிர் உண்டு."

"தப்பிவிட்ட மானினிடத்தில் வாழ்வு வெற்றியடைந்திருக்கிறது. புலி கொல்லப்பட்டு

இன்ஸ்பெக்டர்: உன்னுடன் நடனமாடியவர் உன்னைக் கழுத்தைப் பிடித்து நெறித்தார் என்று சொல்லுகிறாயே, அதைப் பார்த்துக் கொண்டு சபையோர் எல்லாம் எப்படி சும்மா இருந்தார்கள்?

நடனப்பெண்: அதுவும் அந்த நடனத்தில் ஒருவகை என்று இருந்துவிட்டார்கள்!

விட்டது. மானினிடத்தில் வாழ்வு வெற்றியடைந்த அதே நேரத்தில் புலியினிடத்தில் சாவு வெற்றியடைந்திருக்கிறது குருநாதா! நான் கேட்டது, வாழ்வு வெற்றியடைகிறதா சாவு வெற்றியடைகிறதா என்பதே..."

கேட்டார் குரு. மூடியிருந்த அவர் இமைகள் திடீரென்று திறந்தன. கண்டான் சீடன். திறந்திருந்த அவன் இமைகள் நடுக்கமெடுத்து மூடிக்கொண்டன! ஓடிக்கொண்டிருந்த கருமேகம் பாடிக்கொண்டிருந்த நிலவை மூடி மறைத்தது! *

காதல் பிழைத்தது!

இளம் பாரதி

கல்லூரிக் கல்விகற்ற அந்த நாளில்
''கட்டுடலம் உருவுற்றுப் பருவம் பெற்றுச்
சொல்லுக்கும் அடங்காத இளமை வேகம்
சொர்க்கத்தைப் பெண்ணுருவிற் காண எண்ணும்;
பொல்லாத காதலினை ஒதுக்கித் தள்ளப்
புவியினிலே எவராலும் ஆகா'' தென்றுக்
கல்லூரித் தோழரெலாம் பேசி நின்றார்;
காதலின்றி உலகில்லை யென்றார் அன்னார்.

''கன்னியரைக் கண்டவுடன் பொருளே யின்றிக்
காதலெனக் கதைக்கின்ற வழக்கம் நம்மில்
வெந்துபோகும் நாளென்றே அந்த நாளே
விடிவுகாணும் உலகெ''னவேத் தோழர் நெஞ்சில்
என்னெண்ணம் எதிரொலிப்பேன். ஆனால் அந்தோ,
எள்ளளவும் எனைமதியார்; நகைப்பும் சூழும்!
கன்னெஞ்சக் கசடரென வெறுப்பை வீசிக்
கணப்பொழுதிற் சென்றிடுவேன் அவரை நீக்கி.

கவிபாடித் திளைத்திருந்த ஒருநாள் மாலைக்
கனிவான மொழியுடனே அணுகி யெந்தை
''சுவைமிக்க இவ்வுலகின் பெருமை காணச்
சுருக்காகத் திருமணத்தை முடித்துக் கொள்க:
எவையுமினித் தாமதிக்க லாகா'' தென்றார்;
எனையென்றன் மாமன்வீ டனுப்பி வைத்தார்.
குமைகின்ற உள்ளத்திற் றந்தை சொற்கள்
கொதிநீராய்ச் செயலாற்ற எனைம றந்தேன்.

என்மாமன் அவருக்கு மகளொ ருத்தி
எழில்குலுங்க வண்ணமுடன் வளர்ந்து வந்தாள்
சின்னஞ்சிறு வயதினிலே அன்பைக் கூட்டிச்
சேர்ந்தொன்றாய்ப் பாட்டிசைத்து மகிழ்ந்தி ருந்தோம்.
என்னைப்போல் அவளுந்தன் இளமை தன்னை
இவ்வுலகில் பெற்றுவிட்ட காரணத்தால்
மண்ணில்யாம் தம்பதியாய் வாழ வேண்டும்!
வகையற்ற திருமணத்தை மறுக்க எண்ணி

நெஞ்சிற்குள் திட்டமிட்டேன்; வெற்றி கண்டேன்;
நினைவினிலே புதுமையுற்றேன், காமம் கொண்ட
விந்தைமிக்க இவ்வுலகில் மேலும் வாழ
வெறுப்புற்றேன்; நெஞ்செல்லாம் கண்ணீர்த் தேக்கம்!
"தந்தைசொல் தட்டாத தனயன் இந்தத்
தருணத்தில் அவர்சொல்லை மீற வேண்டும்."
சிந்தைக்குள் போராட்டம் நடத்திப் பின்புத்
திருமணத்தை வெறுத்தொதுக்கத் துணிந்து விட்டேன்.

"இன்பந்தரும் இலக்கியத்தைப் பேணி யென்றன்
இதயத்தில் நெடுநாளாய் வளர்த்து விட்டேன்.
உண்மையாகும் இன்பத்தை யுணர்ந்த உள்ளம்
உலகத்தின் விதிதனையா ஏற்றுக் கொள்ளும்!
உண்மையாகும் இலக்கியத்தை மறந்து வீணில்
உணர்ச்சிமலை அவள்நினைப்பில் உழன்று போகும்?
மண்ணகத்தின் விதிக்காக இணையே இல்லா
மாணிக்கம் இலக்கியத்தை விலைக்கா விற்பேன்?"

இவையெல்லாம் நெஞ்சிற்குள் முழக்கம் செய்ய
என்மாமன் வீட்டிற்குள் நுழைந்தேன். ஆங்கே
சுவைமிக்க சொற்கள்பலச் சொன்ன பின்னற்
சுருதிகூட்டி மணப்பேச்சை இசைத்தார் மாமன்.
சுவைச்சொற்கள் கேட்டபோதில் எதிர்வாய்ப் பேசச்
சோர்வுற்றேன்; ஆனாலும் திண்மை கூட்டித்
தெவிட்டாத இலக்கியத்தின் துணையைக் கொண்டுத்
திட்டத்தை நிறைவேற்றப் போகும் போதில்.........

அடுத்தவீடு சென்றிருந்த மாமன் செல்வி
அன்னத்தின் நடைகாட்டி உள்ளே வந்தாள்;
கடைக்கண்ணிற் கருத்தோடு மென்மை சேரக்
காவியத்தின் நாயகிபோல் என்னைப் பார்த்தாள்.
படித்ததுண்டு பற்பலவாய் ஏட்டில் நானும் —
பைங்கிளிகள் பற்பலபேர் வருவர், போவார்!
படித்தபோதுச் சுவைத்திராத இன்பம் ஒன்றைப்
பாவையவள் எனக்களித்தாள்; களித்து நின்றேன்.

செந்தழலை வண்ணமுடன் வானில் வீசிச்
சேமமுறப் பாரினுக்கு வழியைக் காட்டி,
சிந்தனைக்கு வரையின்றி பாதை யீகும்
செம்பரிதி எழிலுருவை இதயம் தொட்டக்
கன்னியவள் மென்முகத்திற் கண்டேன்! மேலும்,
காலத்தால் புதுமைபெற் றெழிலைக் கூட்டி
மென்மொட்டு மலராகும் விந்தை போல
மீன்விழியாள் பருவத்தால் மிளிரக் கண்டேன்.

கம்பர்தம் இலக்கியத்தில் இராமர் சீதைக்
கண்டுறவு கொண்டுநின்ற உணர்வின் வேகம்
எம்நெஞ்சில் உறவாடக் கண்டேன் அந்நாள்.
எட்டிக்காய் எனவெறுத்த காதல் மெல்லத்
தன்திறனைக் காட்டிற்று; தோல்வி கண்டுத்
தன்நிலையை மறந்துநின்றேன். திட்டம் பாழே!
கன்னத்திற் சிவப்பேற மங்கை நல்லாள்
காவியமாய்ப் பேசலுற்றாள் விழிகள் மூலம்:

''சேர்ந்தொன்றாய் அன்றொருநாள் அன்பைக் கூட்டிச்
சிறுவயதில் ஆடிநின்ற தெங்கே, அத்தான்?
ஆர்த்திடுதே என்நெஞ்சிற் காதல் ஓசை
ஆயிரமாய் இன்பத்தின் முரசம் கொட்டி,
ஊர்மக்கள் நெடுநாளாய் இருவர் நம்மை
உணர்வுற்ற தம்பதியாய்க் காண எண்ணி
ஆர்வமுடன் ஏதேதோப் பேசு கின்றார்;
அவையெல்லாம் சொல்லிடவும் வெட்கம் அத்தான்!

''எனைநீங்கிப் பிரிந்திருந்த காலந் தன்னில்
இலக்கியங்கள் துணையிருக்கக் கேள்வி யுற்றேன்.
நினைவெல்லாம் உம்மீதே! ஆனால் என்னை
நினைத்ததுண்டோக் கணமேனும்? சொல்லும் அத்தான்!
மனமெல்லாம் இலக்கியத்தில் ஆழ்ந்த போதில்
மாண்புடைய காதலினை ஒதுக்கித் தள்ள
முனிவர்கூடச் சொல்லியிரார்; வாழ்வில், அத்தான்,
முடிவின்றி இலக்கியங்கள் காதல் பேசும்!''

கருத்துமாறிச் சென்றிடவே இளமை நெஞ்சம்
கன்னியின்பால் ஓடிற்று; மெள்ள மெள்ள
உருவத்தில் கண்பதித்து மங்கை பக்கல்
உணர்வுடனே சென்றபோதில் தலைகு னிந்தாள்.
கருத்தறிந்து மாமனவர் அத்தை யோடுக்
கண்பார்வை எட்டாத மறைவிற் சென்றார்.
சிரித்தமுல்லை மலர்நாடும் கருவண் டாகிச்
சேர்ந்தொன்றாய் இலக்கியத்தை நாடிச் சென்றோம்!

இலக்கியச் செல்வங்கள்

கெடுப்பதும் எடுப்பதும்

"செங்கதிர்"

கெடுப்பது—அரியதொரு பொருளை இழத்தல்; தவறி விடுதல். எடுப்பது—அப்பொருளை மீண்டும் பெறுதல். ஒரு பொருள் கெட்டால் தோன்றும் துயரத்தின் அளவைக் காட்டிலும் மீண்டும் அதனை எடுத்தால் தோன்றும் எக்களிப்பின் அளவு சாலப் பெரிது! இவ்வுண்மையை உவமையாக்கி உவகை ஊற்றெடுக்கச் செய்கிறது 'நற்றிணை.' இழந்த பொருளை மீண்டும் பெறுங்கால் ஏற்படும் மகிழ்ச்சி போன்றது இடைக் காலத்துத் தவிர்ந்த இன்பத்தை மீண்டும் பெறுவது என்று பாடல் கூறுகிறது. பொருள் கெட்டார், மீண்டும் பெற வேண்டுமென்னும் ஏக்கத்திலாழ்வர்; இனி மீளப்பெறுதோ என்ற கவலையில் தோய்ந்து வாடுவர்; மீண்டும் காணப் பெற்ருல் அக்கணத்தில் அவர்க்குத் தோன்றும் பெருங் களிப்புக்கு ஈடே இல்லை! அதுபோலவே தலைவன்பால் தான் இடைக்காலத்து இழந்த இன்பத்தை மீளவும் அடையும் தலைவி இதயங் குளிர்ந்து இறும்பூதெய்துவாள்!

தலைவியும் தலைவனும் பூம்புனலருகும், தேம்பொழிலிடையும் ஒருவரை யொருவர் கண்டு களித்துத் தம் காதல் வளர்த்து வந்தனர். இதனை அறிந்த ஊரார் பழித்துக் கூறத் தொடங்கினர். 'உலை வாயை மூடலாம், ஊர் வாயை மூடமுடியுமா?' எங்கும் அவர் தோன்றக் கண்டு அஞ்சிய தலைவியின் வீட்டார் அவளை வெளிச் செல்ல ஒட்டாது காவல் செய்தனர். இதனை 'இற்செறிப்பு' என்று அகப் பொருள் நூலார் ஓதுவர். எனவே பல நாட்களாகத் தலைமக்கள் தம்முள் கண்டு களிக்கும் வாய்ப்பு ஏற்படாமற் போயிற்று. தலைவிக்கு மிகவும் நெருங்கியவள் தோழி. அரிதாக முயன்று தோழியின் வாயிலாகத் தலைவியை இரவில் சந்திக்க முயன்ருன். இச் சந்திப்பையே தலைவனுக்கு அறிவுரை கூற அரிய வாய்ப்பாகப் பயன் படுத்திக்கொள்ளத் தோழி அவாவினுள். திருமணம்

நிகழ்ந்துவிட்டால் இத்தகு துன்பங்களெல்லாம் நீங்கிவிடு மல்லவா! தலைவனுக்கு இது தெரியாதா! இருந்தாலும் பிறர் சுட்டிக் காட்டும்போது அது தூண்டிவிடும் உணர் வாக மாறிச் செயலில் ஈடுபடுத்துமன்றோ! மேலும் நகு தற் பொருட்டல்லவே நட்டல்! மேற் சென்றிடித்தற் பொருட்டல்லவா! எனவேதான் தலைவன் குறிப்பிட்ட இடத்தில் வந்து நிற்கும் போது, அறியாதவள் போல, அவன் செவியில் படும்படியான சில சொற்களைத் தோழி, தலைவியிடம் தெரிவிக்கிறாள். அதனைக் கேட்ட தலைவன் தன் கடமையுணர்ந்து களவொழுக்கத்தைக் கைவிட்டு அனைவரும் அறியத் தலைவியை வரைந்துகொள்ள முற்படு கிறான். அவ்வாறு அவனைச் செயலில் தூண்டிய சொற் களை நாம் காண்போம்.

* * *

—நிலவு மறைந்தன்று ... .

நிலா! அழகு நிலா! முழு நிலா! காதலரன்பில் இன்ப அமுது வார்த்து வளர்க்கும் நிலா! சிறுவர் முதல் முதியவர் வரை வரவேற்று வாழ்த்தும் நிலா! அந்த நிலவை வெறுப் போரும் உளரோ?........ஆம்! இரு சாரார் உளர்! இருவரும் 'களவு' நிகழ்த்துவோரே! பொருளைக் களவாடச் செல் வோன் நிலவொளியைத் தனக்குத் தடை எனக் கருது வான். 'இரவுக் குறி'யில் தலைவியைக் காணச் செல்லும் தலைவனும் இவ்வாறே கருதுவான்; தலைவியும் கருதுவாள்! 'நிலவு வெளிப்பாடு', இக் களவைப் பிறர் கண்டுகொள்ள ஏதுவாகும். ''தலைவர் வரும் வேளையில் ஒளி பெருகு கின்றாயே! எம் உள்ளத்தை உணராத நீ நல்லையல்லை நெடு வெண்ணிலவே'' என்று கூறித் தலைவி பெருமூச் செறிவாள். அத்தகு நிலவு இப்போது மறைந்துவிட்டது. எனவே எங்கும்,

—இருளும் பட்டன்று....

இருள்செறிந்து காணப்படுகின்றது. 'களவு நிகழ்த் துவோர்' மகிழ்ந்து வரவேற்கும் இருள் இப்போது ஏற் பட்டுவிட்டது. நிலா மேலைவாயில் மறைந்ததனால் தடை நீங்கிற்று. எங்கும் இருள் பரவியதனால் தம் கருத்து நிறைவேற 'வழி' ஏற்பட்டது. யாரும் தம்மைக் காணாமல் குறிப்பிட்ட இடத்திற்குச் சென்றுவிடத் தாம் விரும்பும் சூழ்நிலை உருவாகிக்கொண்டு வருகிறது.

—ஓவத்தன்ன இடனுடை வரைப்பில்.......

அகன்ற இடப்பரப்பினையுடைய வீடு ; பல அழகிய வண்ணங்களைக் குழைத்து வரைந்த சிறந்த ஓவியம்போல அது காட்சியளிக்கிறது. ஓவியம் வரைவோர் விழுமிய நிலையைக் கற்பனைக் கண்ணால் கண்டு உருவந்தருகின்றனர், இயற்கைக் காட்சியைப் பல கோணங்களில் கண்டு பலவகையாகத் தீட்டிக் காட்டுகின்றனர். உள்ளபடியே ஓவியம் காட்டுவதுபோல இயற்கையில் நாம் காண்பது மிக அரிது. அகன்ற நீலவானம் ; வானில் பரவிய சிறு விண்மீன்கள் ; அவற்றைத் தழுவி வரும் வெண்முகில் ; முகிலைத்தொடும் மலை முகடு ; முகட்டினருகே தலை நீட்டும் வெண்ணிலா ; நிலவின் கீழே பரந்து காணும் மலைச்சாரல்; சாரலில் இறங்கிவரும் தூய அருவி ; அருவியால் செழிக்கும் மலையடியில் வளமான பொழில்கள்! இத்தகைய எழிலுமிழும் இயற்கைக் காட்சியைக் காணநேர்ந்தால் '' அடடா ! இதனை ஓவியத்தில் தீட்டினால் எத்துணை அழகாக இருக்கும்!'' என வாய்விட்டுக் கூறி வியக்கிறோம்! ஓவியக் கலையினைச் சுவைக்குந் திறன் இவ்வாறு வெளிப்படுகிறது. '' வீடுபோலவே இருக்கிறது ஓவியம் '' என்று கூறாமல், '' உண்மை வீடு நல்ல ஓவியம்போல இருக்கிறது ; ஓவியம் தீட்டினால் அழகாக இருக்குமே '' என்று சொல்லத் தோன்றுகிறது ஓவியமும் வீடும். மனித உழைப்பின் மாண்பினைத் தெரிக்கும் இரு பெருங் கலைகள் 'ஓவியம் போல வீடு'. உவமைதானே, '' உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை '' (தொல். உவம. 278) இருபெருங் கலைகளையும் சிறப்பிக்கின்றது, 'நற்றிணை !' வரைப்பு—பரப்பினெல்லை, ஓவியம் போன்ற அழகிய வீடு ; அந்த வீட்டையும்கூடத் துறந்து போகச் செய்கின்றதாம் காதல் ! அகன்ற பரப்பினையுடைய வீடு ! எனவேதான் தலைவி வெளியேறாத வண்ணம் காவல் செய்தனர் ! அவள் எத்தகையவள் ?

—பாவையன்ன நம்......

'நம்மை' என்று தோழி தன்னையும் உளப்படுத்திக் கூறுகிறாள். 'பாவை போன்ற நம்மை' என்பது அவளாகக் கற்பித்துக் கூறுவதன்று. 'இவர் பாவை போன்றார்' என்று உற்றோரும் மற்றோரும் வியந்திருக்கலாம். வீட்டிலேயும் பெற்றோர் முதலியோர் புகழ்ந்திருக்கலாம் ; 'பதுமை போன்ற அழகியர்' என்ற பொருளிலல்ல ! 'பதுமைபோல் அமைதியானவர் ; வீண் செயல்களில் ஈடு

படார்'' என்ற பொருளில் உரையாடியிருப்பர். ''என் பையனு! சாதுவாச்சே!'' என்று தாயும் தந்தையும் கூறக் கேட்டிருக்கிறோம். ஆண் மகனையே 'சாது' என்றால் பெண்ணைப் பற்றிக் கூறவா வேண்டும்! 'நம்மை நல்லவர்கள்' என்றெல்லாம் புகழ்ந்த அந்த நல்லவர்கள்தான் இப்போது நம்மை வெளியேற ஒட்டாது தடுக்கின்றனர்!'' என்று குறிப்பிடுகிறாள் தோழி! ஊரார் பேச்சைக் கேட்டு நம் வீட்டாரும் மனம் மாறிவிட்டனர். ''நம் பெண்கள் அமைதியானவர்கள்; நல்லவர்களாயிற்றே'' என்பதை இப்போது மறந்தனர் போலும்! அயலார் கூற்றையே நம்பி 'இற்செறிப்பு'ச் செய்கின்றனர். அனைவரைக் காட்டிலும் நம் தாய் பெருங்கவலை கொண்டு காக்கிறாள். ஆனால் அவளுடைய கவலை எத்தகையது?

—புறங்காக்கும்........

புறம்பே காவல் செய்கின்றாள்! நம் அகத்தைக் காக்கவில்லை! நம் உள்ளத்தைக் காக்கவில்லை! தலைவன் கொள்ளை கொள்ளாத வண்ணம் நம் இதயத்தை அன்னை காத்திருந்தால் எத்தகு நலனேற்பட்டிருக்கும்! இத்தகு இடர்கள் யாவும் தோன்றியிராவே! ஆனால் அன்னையோ அஃதறியாளாய்ப் புறம்பே காவல் செய்கிறாள், **பணத்தைப் பறிகொடுத்தபின் வெறும் பெட்டியைச் சுற்றிக் கண்காணிப்பதுபோல.**

—சிறந்த செல்வத்து அன்னை ....

ஏனையவெல்லாம் செல்வம்தான்! வெறுஞ் செல்வம்! சிறப்புடையனவாகா. சிறந்தது ஒன்றே! ஒப்பற்ற செல்வம் நம் அன்னை! 'தம்பொருள் என்ப தம்மக்கள்' என்கிறார் வள்ளுவர்! மக்களை இழந்தாலும் மீண்டும் மகப்பேறு வாய்க்கும் என்று பெற்றோர் கருதலாம்! ஆனால் பெற்றோரை இழந்த மக்கள் அவ்வாறு கருதமுடியுமோ! தந்தையைக் காட்டிலும் மிக நெருங்கி உறைபவள், அன்னை! அதிலும் பெண் குழந்தைக்குச் சொல்ல வேண்டுமா! எனவேதான் 'சிறந்த செல்வத்து அன்னை' என்று போற்றுகிறாள்! நிலவு மறைந்தது! இருள் எங்கணுஞ் செறிந்தது! சிறந்த நம்

—அன்னையுந் துஞ்சினள் ....

அன்னை துயில் நீங்கலாற்றாது கண்ணயர்ந்தாள்! எந்நேரமும் குலைத்துக் கொண்டிருக்கும் நாய் ஒடுங்கிற்று! வீதி வழியே உலவிவந்து, கள்வர் வாராமற் காக்கும் ஊர்

காவலர் சோர்ந்து அடங்கினர்! நம்மீது கண்வைத்து வீட்டினெல்லை கடவாமற் காக்கும் அன்னையும் உறங்கினள்! இதுவே நல்ல வாய்ப்பு! தலைவன் நாம் குறித்த இடத்திற்கு வந்திருப்பான் சென்று காண்போம்'' என்று தோழி அழைக்கிருள்.

இவற்றை எல்லாம் தலைவன் கேட்டுக்கொண்டிருக் கிருன் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

ஒளி மங்காத நிலவு மங்கி மறைந்தது! வராத இருள் வந்தது! தூங்காத அன்னை தூங்கினுள்! இனிமேல் தொடரும் பேச்சு அவனைப் பற்றியது.

—கீழும் மேலும் காப்போர் நீத்த
வறுந்தலைப் பெருங்களிறு போல ....

களிற்றினைக் கீழே காத்த லென்பது நிலத்தே கட்டுத் தறியுடன் விலங்கினுல் பிணித்திருப்பது. அந்த நிலை நீங் கிய களிறு-பிணிப்பற்ற களிறு, தன் மனம் போன போக் கில் செல்லத் தொடங்கா வண்ணம் மேலிருந்து பாகன் அடக்கியாள்வான்! மேலிருந்து காக்கும் பாகனும் நீங்கி விட்டால் களிற்றை அடக்கமுடியுமா? பெருங்களிறு — பெருமை வாய்ந்த களிறுதான்! தலை மட்டும் வறிது! நெற்றிமீதணியும் ஓடை என்னும் அணியின்றி வறிதே-செல்லுகின்றது. தலைவன் இந்த வறுந்தலைப் பெருங் களிறு போன்றவன்! தலைவனுக்கு அறிவு, வீரம், புகழ் முதலிய பெருமைகளுண்டு! ஆனல் இப்போது எதையும் எண்ணும் ஆற்றலற்றவன்! ஒழுங்கில்லாதவன்! நல்லறிவு இருப்பின் தலைவியை வரைந்துகொண்டு இன்பந் துய்ப்பா னல்லவா! பழியொடு வரும் களவின்பத்தையே விரும்பி யிருக்கின்றுனே! சான்றுண்மைக்கு அஃது அழகல்லவே!

'' கழிபெருங் காதலராயினும், சான்ருேர்
பழியொடு வரூஉம் இன்பம் வெஃகார் (அகம்-112)

''நம் தலைவனே களவையே நிகழ்த்திவருகின்றுன். இத ஞல் நமக்கு மட்டுமா துன்பம்! தலைவனுக்கும் பெருந் துன்பம்! இருட்டில் எவ்வளவோ இடையூறுகளைத் தாண்டி வரவேண்டியிருக்கின்றது! இவற்றை எண்ணுது நள்ளிரவில் துணிந்து,

—தமியன் வந்தோன்....

தனியொருவனுகவே வந்திருக்கிருன்! சிறிதும் அச்ச மின்றிப் பிறர் துணையின்றி வந்தமைக்கு நாம் பாராட்ட

வேண்டியதுதான்! எதன் பொருட்டு வந்துள்ளான்? நம்மைக்கண்டு மகிழ! எவ்வளவோ நாட்கள் முயன்று அரிதாக ஏற்பட்ட இந்த வாய்ப்பினை இழந்து விடுவானு! எல்லா வகையான ஏதங்களையும் எதிரேற்று வந்திருக்கின்றான்; எத்தகைய இரவு?

—பனியலை நிலையே....

குளிர் காலம்! நடுயாமத்தில் பனியைப் பொறுக்க முடியாது! வீட்டினுள்ளே முடங்கியிருக்கும் நிலையே துன்பமானது! நம் தலைவனே மனம் விரும்பித் தன் வீட்டை விடுத்துக் கால் கடுக்க நடந்து வந்து கொட்டும் பனியால் அலைக் கழிக்கப்பட்டும் நம்மைக் காண வேண்டுமென்ற பெரு விருப்பினல் காத்துக் கொண்டிருக்கிறான். இன்னும் அவனை நிறுத்தி வைக்கக் கூடாது, எனவே விரைந்து சென்று,

—கண்டனம்....

காண்போம்! கண்டு மகிழ்வோம்! இத்துணை நாள் இழந்த இன்பத்தை இன்று பெறுவது எத்தகையது! மீண்டும் பெற மாட்டோமா என்று எந்த இன்பத்திற்காக ஏங்கியிருந்தோமோ அந்த இன்பம்! ஆம்!

—கெடுத்துப்படு நன்கலம் எடுத்துக் கொண்டாங்கு....

காணுமற்போன அணிகலனைத் தேடித்தேடி அலுத்து ஆனல், பெறவேண்டுமென்று விரும்பி ஒரு நாள் காணும் போது பெறும் அரிய மகிழ்ச்சியைப்போன்றது, ‘இற்செறிப்பால்’ இழந்த இன்பத்தை ‘இரவுக் குறி’யால் பெறுவது! அணிகலன்! வெறும் அஃறிணைப் பொருள்! உயிரில் பொருள்! அதுவே பெரு மகிழ்ச்சியுண்டாக்கும்! தலைவனே, தலைவிக்கு உயிருள்ள அணிகலன்! அவன் தரும் உவகை பெரிது! பெரிது! என்று சொல்லி மகிழ வேண்டுமே! என்று எண்ணத் தோன்றுகிறது! ஆனல் தலைவன் உயிருள்ளவனகத் தெரியவில்லை! உயிரிருந்தால் ‘நிலைத்த இன்பம்’ பெறும் வழியாகிய திருமணத்தைப் பற்றி எண்ணுமலா இருப்பான்! தற்போதுள்ள நிலையில் உயிரில்லாத அணியாகத்தான் அவனைச் சொல்ல முடியும்! இழந்த அணியை மீண்டும் பெறும்போது அக்கணத்தில் மட்டும்தான் மகிழ்ச்சி! பின்னர் அவ்வணி உடலோடு ஒட்டியிருக்குங் காலும் மீண்டும் மீண்டும் மகிழ்ச்சிதோன்ருது! அதனை இனி மேல் இழவா வண்ணம் பாதுகாக்கின்ற எச்சரிக்கை உணர்வு கூடச் சில நாள் தேங்கி

யிருந்து பின்னர் நீங்கி விடும்! ஆனால் தலைவன்! அவன் இன்றைய இரவுக்குறியால் அளிக்குமின்பம் இன்றோடு முடியும்! பின்னர் மீண்டும் வாய்ப்பு நேர்ந்து காண முடியு மென நம்ப முடியாது! திருமணத்தால் நாள் தோறும் இன்பம் வழங்கவேண்டிய தலைவன் இன்பத்தை உணர முடியாத உயிரற்ற அணிகலன் போல விளங்குகிறான்! களவில் நுகரும் இன்பம், பிறர் கண்டு கொள்வரோ என்ற அச்சத்திற்கிடையே நுகரும் இன்பம் முழு இன்பமாக இருக்க முடியாது! இதனை உணர்ந்தால் தலைவன் உடனே மணந்து கொள்ளுவானே!' என்ற தன் கருத்தை வெளி யிடுகிறாள் தோழி! அவன்பாற் சென்று,

—நன்மார்பு அடைய முயங்கி ....

அவனுடைய நல்ல மார்பைத் தழுவி வருவோம்! 'உறுதியில்லாத அவனுடைய 'நல்ல மார்பு' என்று குறிக்கிறாள்! தலைவியுடன் உரையாடுங்கால் தோழி தன்னை யும் உளப்படுத்திக் கூறுவது இலக்கிய மரபு.

—மென்மெல வருகம் ....

மெதுவாக மீளுவோம்! பிரிய மனமின்றி வருவோம்! ஏன்? மீண்டும் இதுபோன்ற வாய்ப்பு நேருமா என்பது ஐயமே!

—தோழி! சென்மோ!

'தோழி! செல்வோம்' என்று தலைவியை நோக்கித் தோழி கூறுகிறாள்.

இதன் பயனாகத் தலைவன் இதனைக் கேட்டுத் தன் அறியாமைக்கு வருந்தித் தலைவியை விரைவில் மணந்து கொள்ள உறுதிகொள்ளுகிறான்!

நிலவு மறைந்தன்று; இருளும் பட்டன்று;
ஓவத் தன்ன இடனுடை வரைப்பில்
பாவை யன்ன நம்புறங் காக்குஞ்
சிறந்த செல்வத்து அன்னையுந் துஞ்சினள்;
கெடுத்துப்படு நன்கலம் எடுத்துக்கொண் டாங்கு
நன்மார்பு அடைய முயங்கி மென்மெலக்
கண்டனம் வருகஞ் சென்மோ தோழி!
கீழும் மேலும் காப்போர் நீத்த
வறுந்தலைப் பெருங்களிறு போலத்
தமியன் வந்தோன் பனியலை நிலையே!

—நற்றிணை-182.

விநோத மண முறைகள்

எஸ்.என்.கே.ராஜன்

பணியர் :

மலபாரைச் சேர்ந்த பணியர் களில் ஒருவன் ஒரு பெண்ணை மணக்க விரும்பினுல் அப்பெண் ணின் வீட்டில் ஆறுமாதம் ஊழி யம் செய்ய வேண்டும்.

காதிர் :

கொச்சி மலையில் வசிக்கும் காதிர் (Kadir) ஜாதியாரில் மணக் கக் கருதும் வாலிபன் ஒரு வரு ஷம் தன் கிராமத்தை விட்டு நீங்கி வேறு கிராமத்திற்குச் சென்று, தனக்குத் தேவையான பெண் ணைத் தேர்ந்தெடுப்பான். வரு ஷக் கடைசியில் தன் கிராமத்திற் குத் திரும்பி வந்து பெற்ருேரிட மும், கிராமத்தாரிடமும் தான் தேர்ந்தெடுத்தவளை மணக்கச் சம்மதம் கேட்பான். சம்மதம் கிடைத்தபின் மீண்டும் அவளூ ருக்கே சென்று அவள் வீட்டில் இன்னும் ஒரு வருஷம் ஊழியம் செய்து துணி, பாத்திரங்கள், இரும்புச் சாமான்கள் முதலிய வற்றைப் பெண் வீட்டாருக்குக் கொடுப்பான். அதைத் தொடர்ந்து ஒரு விருந்து நடக்கும். பிறகு மணச்சடங்கு முடிவடை யும்.

ஒரியா :

ஒரிஸ்ஸாவைச் சேர்ந்த ஒரியா (Oriya) ஜாதியாரில் பருவமடை யாத முன் தக்ககணவன் கிடைக் காவிடில் அம்புக்கு மாலையிட்டு மணச்சடங்கை முடிப்பர். பிறகு தக்க கணவன் கிடைத்த பிறகு ஏழு கிராமங்களிலிருந்து பருவ மடையாத, ஆனல் அம்புக்கு மாலையிட்ட பெண்களால் கொண்டுவரப்பட்ட நீரில் மண மக்கள் நீராடி மணச் சடங்கைச் செய்வர்.

ஒரியர் :

கஞ்சம் ஜில்லாவில் உள்ள ஒரியர் ஜாதியாரில் மணமாகாத வன் ஒரு விதவையை மணக்க விரும்பினுலும், அல்லது மனை வியை இழந்தவன் மீண்டும் மணம் செய்துகொள்ள விரும்பி னுலும் சஹாதா (Sahadha : Shadi tree) என்றழைக்கப்படும் மரத்து டன் முதலில் மணச் சடங்குகள் நடத்திய பிறகே மணமக்கள் மணம் செய்து கொள்வர்.

நாயர் :

திருவிதாங்கூர் நாயர் ஜாதிப் பெண்கள் பதினேரு வயதடை யும் முன் மணம் முடிக்கப்பட வேண்டும். இல்லையேல் அக்கம் பக்கத்தாரின் அவச்சொல்லுக்கு

ஆளாக நேரிடும். அப்படி மண மாகாவிட்டால் ஒரு வாளைக் கண வன் நிலையில் வைத்து மணத்தை முடிப்பர்.

அஹசர் :

மைசூரில் அஹசர் என்ற வண் ணார ஜாதியில் பெண்கள் பருவ மடையுமுன் மணம் நடக்க வேண் டும் என்பது நிபந்தனை. அப்படி நடக்காவிட்டால் முதலில் வாளுக்கோ, அல்லது மரத் திற்கோ மணம் செய்விக்கப் பட்ட பிறகுதான் மணாளனுக்கு மணம் செய்விக்கப்பட வேண்டும்

வெங்கி :

கஞ்சம் ஜில்லாவில் வெங்கி (Venghi) என்ற ஜாதியார் தங்கள் பெண்களுக்குக் குறித்த காலத் தில் (பருவமடையும்முன்) மணம் நடத்த முடியாவிட்டால் முதலில் சூரியனுக்கு மணச் சடங்கைச் செய்து விடுகின்றனர். பிறகு அப்பெண்கள் வயதான பிறகு தகுந்த கணவனை மணக்கலாம்.

மறவர் :

திருநெல்வேலியைச் சேர்ந்த மறவர் ஜாதியில் மணத்தின் போது மணப்பெண் மணமகன் அனுப்பிய ஒரு தடிக்கு மணச் சடங்கு நடத்திய பிறகு, மண மகனுக்குப் பதில் வேறொருவர் பெண்ணுக்குத் தாலியைக் கட்டு வார்.

பில்லவர் :

தென்கன்னட நாட்டைச் சேர்ந்த பில்லவர்களில் (Billavas) பெண்கள் கற்பிழந்தாலும் குற்ற மாகக் கருதப்படுவதில்லை. ஆனால் கற்பிழந்தவளுக்கு மணம் நடக் கும்போது முதலில் அவள் வாழை மரத்திற்கு மணம் செய்யப்பட்டு, இனி ஒழுக்கத் துடன் வாழ்வதாகச் சத்தியம் செய்த பிறகுதான் மண மகனுடன் மணச்சடங்கு நடை பெறும். ஆனால் கற்பழியாக் கன்னியருக்கு அவ்வாறில்லை.

மலைவெள்ளாளர் :

கோயமுத்தூர் ஜில்லா மலை வெள்ளாளர்களில் மணம் நடக் கும்போது மூன்று நாளும் மணப் பெண் அழுதுகொண்டே இருக்க வேண்டும். இல்லையேல் அவள் கெட்டவள் அல்லது துரதிர்ஷ்டம் பிடித்தவள் என்று கருதப்படு வாள். அவளுக்கு உண்மை யாகவே அழுகை வராவிட்டாலும் அழுவது போலப் பாசாங்கு செய்யவேண்டும். அவள் அப் படியும் செய்யாவிட்டால் மண மகன் அவளைமணக்க மறுப்பான்.

சேலம் மலைவாசிகள் :

சேலம் ஜில்லாவைச் சேர்ந்த மலைவாசிகள் ஒரு வகையினரில் ஒரு சிறு பையனுக்கு வயதான ஒரு பெண்ணை மணமுடிப்பர். அப்பையனின் தந்தை அப் பெண்ணின் கணவன் ஸ்தானத் தில் கூடி மகிழ்வான். பிள்ளைகள் பிறக்கும். முன்பு தாலி கட்டிய சிறுவன் பெரியவனானான். அவன் தாலி கட்டிய பெண்ணுக் கும் அவனுடைய தந்தைக்கும் பிறந்த சிறுவனுக்கு வயதான ஒரு பெண்ணை மணமுடித்து, அப் பெண்ணைத் தன்னுடன் வைத்து அவன் வாழ்க்கை நடத்தி அவன் மூலம் மக்களைப் பெறுவான். இதுபோலவே அவர்களிடையே மணவழக்கம் வம்ச பரம்பரை யாகவே வந்து கொண்டே இருக்கும்.

கொங்க வெள்ளாளர் :

தமிழ்நாட்டு விவசாயிகளாகிய கொங்க வெள்ளாளர்களிடையே நாவிதன் புரோகிதனாக வந்து

மணச்சடங்கை முடித்து வைப்பான். மணப்பெண்ணுக்கு மணமகனல் தாலி கட்டப்படாமல் நாவிதனுக்கு மணச்சடங்கில் உதவி செய்யவரும் 'அருமைக்காரன்' என்பவனுல் கட்டப்படும். அவர்களில் மாமன் மகளைக் கட்டுவது மிகப் பொறுத்தம் என்பது கருத்து. ஆகையால் ஏழு அல்லது எட்டு வயதுப் பையனுக்கு அவனைவிட இரண்டு பங்கு வயதுடைய மாமன் மகளை மணம் செய்விப்பர். அப்பெண்ணின் கணவன் (சிறுவன்) தக்க வயதடையும் வரை அவள் தன் மாமனுருடன் கூடி வாழ்வாள்.

தொட்டியர் :

தெலுங்கு விவசாயிகளான தொட்டியர்களிடையே மாமன் மகளை முறைப்படி மணப்பது சிலாக்கியம் என்ற கருத்து நிலவி வருகிறது. மணமகன் சிறுவனுக இருந்தபோதிலும், அவனுக்கு மாமன் மகள் இருந்தால் முறை விட்டுப்போகாமல் அவளை அவனுக்கு மணம் செய்து வைப்பர். அவள் தன் மாமனுருடன் கூடி வாழ்வாள்.

காப்பிலியர் :

கன்னட விவசாயிகளான காப்பிலியர் (Kappiliyar) களிடையேயும் மாமன் அல்லது அத்தை மகளை மணத்தல் முறையாகக் கொள்ளப்படுகிறது. அதற்கெனவே சிறுவனுன மணமகனுக்கு வயதான முறைப்பெண்ணை மணம் செய்வித்து சிறுவன் தக்க வயதடையும்வரை அவனுடைய தகப்பனுருடன் கூடிவாழச் செய்கின்றனர்.

வல்லம்பர் :

மலைநாட்டு விவசாயிகளான வல்லம்பர் (Vallambar) என்ற ஜாதியாரிடையே மாமன் அல்லது அத்தை மகளை மணக்க வேண்டுமென்பது நிபந்தனை. இதன் காரணமாக வயதை அவர்கள் பொருட்படுத்துவதில்லை. பத்து வயதுச் சிறுவனை இருபது அல்லது இருபத்தைந்து வயதான ஒருத்திக்கு மண முடிப்பர். அச்சிறுவனுடைய குடும்பத்தைச் சேர்ந்த ஆண் சிறுவனின் தமையன், அல்லது சிற்றப்பன், அல்லது சிறுவனின் தகப்பனே—அவளைக் கூடி வாழ்வான். குழந்தை பிறந்தால் தாலி கட்டிய சிறுவன் வாலிபனுக மாறிய பிறகு அக் குழந்தையைத் தனக்கு உரிமையாக்கிக் கொள்வான். அக் குழந்தைக்கு முன் போல வயதான முறைப்பெண்ணை மனம் செய்வித்து அப்பெண்ணுடன் கூடி வாழ்வான்.

புல்லுவர் :

மலபாரைச் சேர்ந்த புல்லுவர் (Pulluvar) களிடையே பங்காளிகளான சகோதரன்—சகோதரிக்குள்ளேயே மணம் நடக்கும் வழக்கம் உண்டு.

செறுமர் :

மலபாரில் செறுமர் (Cherumar) என்ற ஜாதியாரிடையே மண ஊர்வலம் வெளிவந்ததும் எல்லாச் செறுமர்களும் ஒன்று கூடிச் செல்வர். நடு நடுவே அங்கங்கே நின்று தடியாட்டம் ஆடுவர். அப்பொழுது பெண்கள் அவர்களுக்கு ஊக்க மூட்டும் முறையில், "பார்க்கலாம், பார்க்கலாம்! உங்கள் தடிவரிசையைப் பார்க்கலாம், ஓ! செறுமர்களே!" என்று அவர்கள் பாஷையில் பாடுவார்கள். அத்துடன் ஆண்களும் பெண்களும்

ஒன்ருகக் கலந்து நாட்டியமாடுவர். மணமகனின் வீட்டிற்கு மணப் பெண் வந்ததும் அவள் தன் விதியை நினைத்துப் பலமாகக் கதறி அழவேண்டும். வீட்டிற்குள் நுழையும்போது வழியில் போடப்பட்டிருக்கும் உலக்கையை மிதித்து உள்ளே புக வேண்டும்.

லம்பாடி :

மைசூரைச் சேர்ந்த லம்பாடிகளிடையே மணம் நடந்தால் மணச் சடங்கைச் செய்யும் பிராமணப் புரோகிதரைத்தவிர வேறு ஒரு ஆணும் மணத்திற்கு வரமாட்டார். மனச்சடங்கு முடிந்த உடனே பெண்கள் அப்புரோகிதரைச் சூழ்ந்து கொண்டு அவரைக் கிள்ளி, அவருடைய துணிகளைப் பற்றியிழுத்து, நிர்வாணமாக்க முயற்சிப்பார்கள். அப்பொழுது அவர்கள் 'குட்னி' பாஷையில் பாடுவார்கள். அப்பிராமணன் அவ்வாறு ஆபத்தான விளையாட்டுக்குட்பட்டுத் திண்டாடுவதன் காரணம் பின் வருமாறு கூறப்படுகிறது: முன்பு எப்பொழுதோ ஒரு பிராமணன் தன் இரண்டு பெண்கள் மணமாகும் முன் பருவ மடைந்து விட்டதால் ஊராரின் அவச்சொல்லுக்கு ஆளாகவேண்டுமே என்று கொஞ்சமும் கருணை காட்டாமல் அப்பெண்களைக் காட்டிற்குத் துரத்திவிட்டானும். அப்பொழுது லம்பாடிகள் அப்பெண்களைக்காப்பாற்றி, வளர்த்தார்களாம் ஆகையால் மணச் சடங்கை நடத்தவரும் பிராமணப் புரோகிதரை மேற்கூறியவாறு வேடிக்கை செய்து அக்கொடூரச் செயலுக்குப் பழிவாங்குகின்றனர். ஆனுல் அந்தப் புரோகிதருக்குக் கடைசியில் சன்மானம் நிறையக்கிடைக்குமாகையால் அவரும் அதைப் பொருட்படுத்தமாட்டார்.

லிங்காயத் :

செங்கற்பட்டு ஜில்லாவில் லிங்காயத் ஜாதியார் தாலி கட்டும் நாளன்று ஒரு சைவ பிராமணனை மணச் சடங்கை நடத்திக் கொடுக்க அழைப்பர். அவன் தனக்கு ஒன்றும் தெரியாதென்று பொய் கூறி வர மறுப்பான். ஆனுல் அவனை விடாமல் கெஞ்சி வரும்படி வற்புறுத்துவர். பிறகு அவனும் அரை மனதுடன் வருவதாக ஒப்புக்கொள்வான். மணப்பந்தலுக்குள் அவன் நுழைந்ததும் குடும்பத்தலைவன் அவனை முரட்டுத்தனமாகப் பிடித்து, அவனது குடுமியில் ஐந்து தேங்காய்களைக் கட்டித் தொங்க விடுவார். பிராமணன் அலறித் துடிப்பான். அங்கு வந்திருப்பர் அவனுக்கு ஆறுதல் கூறிச் சாந்தப் படுத்தி, ஐந்து ரூபாய் ஒரு ஜதைப் புதுத் துணி, வெற்றிலை பாக்கு இவற்றைக்கொடுப்பர். உடனே அவன் மகிழ்ச்சி அடைவான். இதற்கிடையில் சிறுவர்கள் அவன் மேல் பலவித காய்கறிகளை எறிந்து, புதுத் துணியின் மேல் மஞ்சள் நீரை இறைத்து அவனைப் படாதபாடு படுத்துவர். பெரியோர்கள் அச்சிறுவர்களை விரட்டியடித்து அந்தப் பிராமணனைச் சமாதானப் படுத்துவர். பிராமணன் மணச் சடங்கை நடத்திக் கொடுத்து விட்டு, நிறையச் சன்மானத்தைப் பெற்றுக் கொண்டு, தலை தப்பியது தம்புரான் புண்ணியம் என்று அவசர அவசரமாகக் ஓட்டம் பிடிப்பான்.

கன்னடிய லிங்காயத் :

கன்னடிய லிங்காயத் ஜாதியார் சிறு குழந்தைகளிலேயே மணத்தை முடித்து விடுவர். மணநாளன்று மணச் சடங்கை நடத்த ஒரு நாவிதன் வருவான். ஒரு தேங்காய் மூடியில் நெய்யை யூற்றி அவனிடம் கொடுப்பார்கள். அவன் அதை வாங்கி நாணல் தண்டு அல்லது கோரைப் புல்லினால் மணமக்கள் மேல் தெளிப்பான். ஆனால் அதைச் செய்யும்போது ஒரு பெரிய கல்லைக் கயிற்றினால் கட்டி அவன் கழுத்தில் தொங்க விடுவார்கள். சிறுவர்கள் அவனுக்குப் பின்னால் நின்று அவனுடைய கழுத்தையும் தலையையும் பிடித்து முன்னும் பின்னும் ஆட்டுவார்கள். மணச் சடங்கு முடிந்ததும் அவன் அத்தொல்லையினின்று விடுபட்டு பணம், நெய், வெற்றிலை பாக்கு முதலிய பரிசுகளைப் பெற்றுச் செல்வான். அப்படிக் கழுத்தில் தொங்க விடும் கல் லிங்கத்திற்குச் சமமென்றும், மணச் சடங்கை நடத்தும்போது அவன் லிங்காயத்தாக மாறிவிடுகிறான். என்பதும் கருத்து.

கோடா :

நீலகிரி மலையைச் சேர்ந்த கோடா (Kota) ஜாதியில் மணமகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆணும் பெண்ணும் முன்னாளிரவு ஒரு தனி அறையில் விடப்படுவர் அடுத்த நாள் காலை பெண்ணின் சுற்றத்தார் மணமகனைப் பிடித்திருக்கிறதா என்று பெண்ணைக் கேட்பார். அவள் பிடித்திருக்கிறது என்று பதிலளித்தால் அதற்கடுத்த நாள் அவ்விருவருக்கும் மணம் நடக்கும். அப்பொழுது மணமகன் மணமகளுக்காக நான்கணாவைக் கொடுத்து, அவளைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று விருந்தொன்று வைப்பான். அத்துடன் மணம் முடிவடையும். நிற்க, மணமகனைப் பிடிக்கவில்லை என்று பெண் பதிலளித்தால் மணமகன் நீக்கப்படுவான். அதே போலப் பன்முறை பல ஆண்களைத் தேர்ந்தெடுத்து, பெண்ணுடன் தனிமையில் விட்டு, அவர்கள் எல்லோரையும் அவள் வெறுத்து நீக்கினாலும் அவள் கற்புக் கெடாதவள் என்றே கருதப்படுவாள். இரு கணவரை மணத்தல் இவர்களிடையே சகஜம்.

மாப்பிள்ளை :

மலையாளத்தில் முகமத்திய மாப்பிள்ளை என்ற ஜாதியாரிடையே மணமகனையும், அவனைச் சேர்ந்தவர்களையும்பெண்வீட்டார் வரவேற்று ஒரு தனி அறையில் விடுவார்கள். சற்று நேரத்திற்கப்புறம் மணமகனை அவ்வறையில் தனியே விட்டுவிட்டு அவனுடைய சுற்றத்தார் வெளியேறுவர். பிறகு பெண்ணை அழைத்துச் சென்று மணமகன் தனித்திருக்கும் அறையில் விட்டுக் கதவை மூடுவர். இவ்வாறு மணமக்கள் சிறிது நேரம் தனியே விடப்படுவர். அதன்பின் மணமகனின் சுற்றத்தார் மணகனை அழைத்துக் கொண்டு தங்கள் வீடு திரும்புவர். மறுநாள் மணம் நடக்கும். மேற்கூறியவாறு விடப்பட்ட மணமக்களை இரவு முழுவதும் தனியே இருக்க விடுவாரும் உண்டும்.

(தொடரும்)

நற்குடிப்பிறந்த நல்லோர்?

'வாழ்நன்'

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்த முது குடியிற் பிறந்த தமிழரும், பிறரும் வாழும் இப் பூவுலகில் நற் குடியிற் பிறந்த நல்லோர் யார்? என்று அறிந்து கொள்ளுதல் அவ் வளவு எளிதல்ல வென்பார் பலர். சிலரோ ஆரியர் வகுத்த வருணு சிரம முறையை வைத்துக் கொண்டு வாடப்பல புரிந்து வாழ்வை விழலாக்கும் மூடப்பழக் கத்தால் ஆரியப் பிராமணரே நற் குடி மக்கள் என நவில்வர். வேறு சிலரோ ஆரியரைப் போன்று மார்பிலே நூலும், மறைவான தீச்செயலும், வடமொழிப் பயிற் சியுமுடைய சற்சூத்திரர் என்று தம்மைத் தாமே புகழ்ந்துரைக்கும் அத்தருக்குடையார் என்பர். மற் றும் சிலரோ நடையாலும், உடை யாலும், வெளித் தோற்றத்தாலும் ஒத்துக் காணப்படும் மக்களுள் எவ்வாறு வேறுபாடு காணக் கூடும்? எல்லோரும் நல்லாரே என்று கூறிப் பெருமையடைவர். அறிவியக்கத்தாராகிய நாமோ இவர்கள் அனைவரையும் பார்த்துச் சிரிக்கின்றோம்.

ஏனெனில் இவர்கள் உரைத் தனயாவும் தமிழர் தம் நெறிக்குப் புறம்பானவை யென்பதால். எவ் வாறென்பதை இதோ விளக்கிக் காட்டுகின்றேன். நாட்டாலோ, மொழியாலோ, நிறத்தாலோ, பிறப்பாலோ எவரும் உயர்ந்த வராகவோ தாழ்ந்தவராகவோ ஆகார் என்பது தமிழ் நெறியா கும். பின் உயர்வு தாழ்வு அமை யும் முறை யாதெனில்? எல்லோ ரிடமும் மலர்ந்த தன்மையுடைய வனாகவும், யாவர்மாட்டும் இன் மொழி பேசும் இனியோனாகவும் இருப்பவரே நற்குடிப் பிறந்த நல் லோர் என்னும் பொருள் பட,

> "நகை ஈகை இன்சொல் இகழாமை நான்கும்
> வகை யென்ப வாய்மைக்குடிக்கு"

என்றார் நம் திருவள்ளுவர். மேலும் நல்லநடத்தையும், (அதாவது தமிழ்ச் சான்றோர் வரையறுத்த ஒழுக்கம்) யாதொன் றும் தீமையிலாத கூறுதலாகிய வாய்மையும், பழிபாவத்திற்கு வெட்கும் நாணமும் அவர்பால் காணப்படவேண்டும், அதினின் றும் அவர்கள் வழுவுதலாகா வெனக் கூற வந்த வள்ளுவர்.

> "ஒழுக்கமும் வாய்மையும் நாணும் இம்மூன்றும்
> இழுக்கார் குடிப்பிறந்தார்"—என்று

நவின்றுள்ளார். இன்னுல் அன் னேரது இயல்பினை விளக்குவான் வேண்டி நம் தெய்வப் புலவர் செப்புவதாவது,

> "அடுக்கிய கோடிபெறினும் குடிப் பிறந்தார்
> குன்றுவ செய்தல் இலர்"

என்பதாகும். இதன் பொருள்:- அடுக்கடுக்காக கோடிக்கணக்

கான பொருள்களைப் பெறுவதாக இருந்தாலும், நற்குடிப் பிறப்புடையோர் தம் குடிச்சிறப்பு அழிதற்கேதுவாய் இழி செயல்களை செய்யமாட்டார் என்பதாகும். இதுமட்டுமல்ல இதன் பொருள் குறளைச் சிறிது கூர்ந்து சிந்தியுங்கள் புலவனது சொல்லாளும் திறனும், புலமையும், சிறப்பும், தெளிவாகும். கோடி என்ற விடத்திலே ஏதாவது ஒரு நாணயத்தின் பெயரைக் குறித்திருந்தால் இன்று தடுமாற்றம் நிகழ்ந்திருக்கும். ஆனால் செந்நாப்போதாரோ கோடி என்று மட்டுமே கூறிப்போந்தார். இதனால் கோடி ரூபாய்கள் மட்டுமல்ல, கோடி ஸ்டர்லிங், கோடித் தங்கம் கோடி ரூபிள், கோடிக்கணக்கான டாலர் முதலியனவற்றுள் எவற்றையும் அடுக்கடுக்காகக் கொடுத்தாலும் இழிசெயல் செய்யார் எனப் பொருள் படுமாறு அமைத்த வள்ளுவரது வாக்கு வன்மையை என்னென்பது ?

இவ்வாறு, திருவள்ளுவர் வழங்கிய அமிழ்தத் திருக்குறட் கருத்தின்படி அமைவதே நற்குடியாகும். பிறவற்றால் அமைவதென்பது பெரும் பித்தலாட்டமேயாம். மேலும்,

> *"நல்ல குலமென்றுந்திய குலமென்றும்*
> *சொல்லள வல்லாற்*
> *பொருளினில்லை—தொல்சிறப்பின்*
> *ஒண்பொருளொன்றோ? தவம் கல்வி ஆள்வினை*
> *என்றிவற்றானாகுங் குலம்."*

என்று நாலடியார் நல்லறிவூட்டியும், நயமுற மொழிந்தும் தெளிவுறாத மந்த மதியினரும், மாநிலம் ஆள்வோரும், தமிழாசிரியர்களிற் சிலரும் சாதிச் சேற்றிலே சிக்கிச் சிறுமைப்பட்டு வெறி கொண்டு, பிழை பட்டு, வள்ளுவரும் தமிழ்ச் சான்றோரும் சாதியை ஒத்துக் கொண்டவர்களெனக் கூறும் இவர் தம் அறிவையும் ஆதாரமற்ற புன் மொழியையும் காணும் போது ஏக்கம் பிறக்கத்தான் செய்கிறது.

ஏனெனில் அறிவாலும், ஆன்ற பண்பாலும் அமைதிச் சிறப்பாலும் அமையும் நற்குடிப் பிறப்பிற்கும், பிறப்பிலே பேதங்கொண்ட வருணாசிரம சாதி முறைக்கும் வேறு பாடறியாது அறிந்து கொள்ள ஆசைப்படாது, பிறர் அறிவுறுத்தினாலும் புரிந்து கொள்ளாத புல்லிய மக்களை நினைக்கும் பொழுது வள்ளுவர் கூறிய வாய்மொழிதான் நினைவிலே வருகின்றது.

> *"ஏவவும் செய் கலான் தான் தேறானவ்வுயிர்*
> *போஒம் அளவுமோர்நோய்"*

இனிமேலாவது உண்மையுணர்ந்து உலகியல் தெரிந்து வாழ்வாங்கு எல்லாத் தமிழ் மக்களும் வாழ்வார்களாக. ✱

கட்டுரையாளர்களுக்கு :

வெளியிடப்படாத கதை, கட்டுரைகளைத் திரும்பப்பெற விரும்புபவர்கள் கட்டுரையுடனேயே தபாற்தலைகள் அனுப்பினாலன்றி, பின்னர் வரும் கோரிக்கைகள் கவனிக்கப்பட மாட்டா.

—ஆசிரியர்.

நமது மருத்துவர்

G. வெங்கடப்பா M. B. B. S. (Ex) I. A. M. C.

வினா: பொன்னி மருத்துவரே, எனக்கு வயது 18. பெண்களைப் போன்று எனக்கு மார்புகள் வளர்ந்திருக்கின்றன. இதை நீக்க என்ன செய்யவேண்டும்?

—வி. மனோகர்.

விடை: வாலிபர்களில் ஒரு சிலருக்கு இப்படி ஏற்படுவதுண்டு. வீக்கம் சிறியதாக இருந்தால் தினந்தோறும் குளிக்கும்போது நன்றாக அதைக் கசக்கித் தேய்த்து விடவேண்டும்.

வெட்கம் உண்டாக்கும் அளவிற்கு வீக்கம் பெரியதாக இருந்தால் சத்திர சிகிச்சை (Surgical operation) செய்து எடுத்துவிடவும்.

கொழுப்பு அதிகமாகி, உடல் பெருத்து, மார்புகள் வீங்கியிருந்தால் உடல் இளைக்க ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.

வினா: எனக்கு வயது 23 ஆகிறது. வாரம் ஒருமுறை இரவில் இந்திரியம் வெளியாகிவிடுகிறது. இங்ஙனம் மூன்று வருடங்களாகத் துன்பப்படுகிறேன். உடல் இளைத்து வருகிறது. எனக்கு நல்ல மருத்துவ யோசனை தயவுசெய்து கூறுங்கள்?

—என். சுந்தரம்.

விடை: வாரம் ஒருமுறை இப்படி ஏற்படுவது அசாதாரணமல்ல. அடிக்கடி சிந்தித்து விசனப்பட்டால் உடல் கண்டிப்பாய் இளைக்கும். பலவீனம் ஏற்படும். ஒரு பாத்திரத்தில் நீர் நிரம்பியவுடன் அதிக அளவு வழிந்துபோவதுபோல் இந்திரியம் வெளியாகிறது என்று மனதில் ஆணித்தரமாக எண்ணிவிட்டால் உங்கள் உடல் இளைக்காது. மகிழ்ச்சியாக இருக்க முயற்சி செய்யுங்கள்.

நீங்கள் காதல் கதைகளைப் படிக்கக்கூடாது. பெண்களைப்பற்றி அதிகம் சிந்திக்கக் கூடாது, காதல் மிகுந்துள்ள திரைப்படங்கள் பார்ப்பதைக் குறைத்துக்கொள்ள வேண்டும். களைப்பு அதிகம் வராத அளவிற்கு தேகப்பயிற்சி விளையாட்டுகளில் கலந்துகொள்ள வேண்டும். கோழிமுட்டை, கீரை, நெய், பால், பழம் முதலியவைகளை உங்கள் உணவில் அதிகப்படுத்திக் கொள்ளுங்கள்.

இராவுணவு லேசாக இருக்கவேண்டும், உறங்கப்போகும் பொழுது சிறுநீர் கழித்துவிட்டு உறங்கவும். மலச்சிக்கல் வராதபடி பார்த்துக் கொள்ளவும்.

மல்லாந்து (முதுகின்மேல்) படுக்காதபடி பக்கவாட்டத்தில் உறங்கவேணடும். படுக்கை மிருதுவாய் இல்லாமல் சற்று கடின மாக இருக்கவேண்டும்.

வாரம் ஒருமுறை இப்படி ஏற்படுவது உங்களுக்கு விசனமும் பல வீனமும் உண்டாக்கினுல் அதை நிறுத்த பின்வருமாறு செய்ய வேண்டும்.

1. ஓரிதழ்த் தாமரை (இரத்தின புருசு) செடியின் இலைகளையா வது அல்லது வேருடன் செடியை உலர்த்தி தூள் செய்தாவது, காலை யில் ஒரு தேக்கரண்டியளவு வாயிலிட்டு நீர் அல்லது பால் குடிக்கவும்.

2. காலி புரோமேட்டம் 30x. என்னும் ஓமியோபதி மருந்தை தினம் 4 வேளை 3 சொட்டுகள் நாக்கின்மேல் விடவும்.

3, பாசிபாரிக்கம் அசிடம் 60x. என்னும் மருந்தை 5 சொட்டு கள் ஒரு டம்ளர் நீரில் கலக்கி உணவுக்குப் பின் குடிக்கவும். இது இந்திரியம் வெளியாகி பலவீனம் ஏற்பட்டவர்களுக்கு நலம் செய்யும்.

பொன்னி

(மாதமிருமுறை)

	உள்நாடு	வெளி நாடு
ஆண்டுச் சந்தா	ரூ. 6—0—0	ரூ. 7—8—0

ஓராண்டுக்குக் குறைந்த சந்தா கிடையாது. சிலோனுக்கு மட்டும் வி. பி. பி. மூலமாக அனுப் பப்படும். தனிப்பிரதிக்கு 0—5—0 தபால் தலை அனுப்பவேண்டும்,

உங்கள் சந்தா சம்பந்தமாக அலுவலகத்திற்கு எழுதும்போது உங்களுடைய சந்தா எண்ணைக் குறிப்பிடவேண்டியது அவசியம்.

விபரங்கட்கு:

பொன்னி லிமிடெட்

111, பவழக்காரத் தெரு, சென்னை-1

Edited, Printed & Published by Aru. Periyannan for Ponni Ltd., at Ponni Achakam, 111, Coral Merchant Street, Madras-1.

அச்சு வேலையை மிகச் சாதாரணமாகவும் செய்யலாம்; உயரிய முறையிலும் செய்ய லாம், எல்லாம் செய்வோரைப் பொறுத்து — இருக்கிறது. —

உயர்ந்த அச்சு வேலைகளை முடித்துக் கொடுப் பதற்கென்றே நிறுவப்பட்டுள்ள அச்சகம் ....

பொன்னி அச்சகம்

தபாற் பெட்டி எண் **1795**

111, பவழக்காரத் தெரு :: சென்னை-1.

எப்பொழுதும் மக்கள்பணி செய்யக் காத்திருக்கிறது.

சிறந்த புதிய வெளியீடுகள்!

★

நினைவுச்சின்னம்	இளமைப்பித்தன்	... ரூ. 1– 0–0
கடல் முத்து	எஸ். ஆறுமுகம்	... ரூ. 1– 0–0
உலக அரங்கில்	டி. கே. சீனிவாசன்	.... ரூ. 1– 0–0
தபாலாபீஸ் விநோதங்கள்	க. சண்முகசுந்தரம்	.... ரூ. 0– 8–0
கம்பன் கெடுத்த காவியம்		... ரூ. 0– 4–0
இலக்கியச் சந்தையில்	மு. அண்ணாமலை	... ரூ. 0– 8–0
வீடும் விளக்கும்	'சுகி'	... ரூ. 0– 8–0
தாஜ்மஹால்	நா. பாண்டுரங்கன்	.... ரூ. 0– 8–0
கொடிமுல்லை	வாணிதாசன்	.... ரூ. 0–12–0
இரு கதைகள்	நாரா நாச்சியப்பன்	.... ரூ. 0 –4–0

வணிகர்கட்குத் தக்க கழிவு உண்டு.

★

விவரங்கட்கு:

பொன்னி லிமிடெட்

111, பவழக்காரத் தெரு : : சென்னை – 1.

21 MAY 1954